THE HON. SRI S. M. A. MAJID : The cess and other amounts due to panchayats are adjusted to their accounts every month by the panchayat union councils, and not by the Sub-Treasury Officers. The Sub-Treasury Officers adjust the total cess, etc., to the respective panchayat unions, who in turn, make necessary adjust-

17th January 1964]

ments to the panchayats. This is generally done promptly and no cases of delays or difficulties have been reported. Cesses are also payable in advance based on the average of previous years.

The panchayats are kept informed of their financial position through monthly statements and pass books and there could, therefore, be no difficulty for the panchayats to find out the balance of funds available at their credit. The Government have also taken all possible steps to have free flow of funds to the panchayats, so that they may take up the execution of work in their panchayats without any difficulties.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த மாதிரியான புகார்கள் க்ளாஸ ஒன் பஞ்சாயத்துக்களில் இருப்பதால் அதை நிவர்த்திக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சர்க்கார் தரப்பில் இந்தமாதிரியான புகார்களுக்கு இடமில்லாதபடி செய்ய பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. மேலும் குறிப்பிட்ட எந்த இடத்திலாவது இந்த மாதிரியான புகார் இருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் துரிதமாக அதை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பஞ்சாயத்துக்களுக்குச் சேரவேண்டிய தொகை மாதா மாதம் அட்ஜஸ் செய்யப்படுகிறது என்றார். மூன்று மாதம், நான்கு மாதம் ஆகியும்கூட பஞ்சாயத்துகளுக்குச் சேர வேண்டிய தொகை அட்ஜஸ் செய்யப்படாமல் இருக்கிறது. அதனால் ஆசிரியர்களுக்கு மாதாமாதம் கொடுக்கப்படவேண்டிய சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அவர் சொன்னது போல மாதாமாதம் அட்ஜஸ் செய்துவிட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சர்க்கார் உத்தரவு அப்படிக் கூறுகிறது. எங்காவது இப்படி அந்த அந்த மாதத்திற்குள் அட்ஜஸ் ஆகாமல் இருந்தால் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : பஞ்சாயத்துக்கள் செலுத்துகின்ற தொகை அவ்வப்போது பாஸ் புக்கில் குறிக்கப்படுகிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பாஸ் புக்குகளில் பதிவு செய்யப்படுகிறது என்றுதான் கேள்விப்படுகிறேன்.

Collection of panchayat revenue

* 6 *Q.*—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to apply the Revenue Recoveries Act for the collection of arrears due to the panchayats?

THE HON. SRI S. M. A. MAJID : The Government are examining the question of extending the provisions of the Revenue Recovery Act for the realisation of the arrears of panchayat taxes.

Necessary rules have been issued already under the Madras Panchayats Act for the procedure relating to the collection of taxes due to panchayats, and collection is being made with reference to the procedure laid down in these rules. These rules provide, among others, for distraint of movable property to enforce collection.

In regard to the panchayats in the transferred territory, namely Kanyakumari district, the panchayat taxes which accrued up till 31st March 1962 are, however, recoverable under the provisions of the Revenue Recovery Act with reference to section 57 of the Travancore-Cochin Panchayat Act which was then in force in that area. The taxes which accrued after 1st April 1962 is recoverable under the rules made under the Madras Panchayats Act, 1958.

திரு. கரு. சீமைச்சாமி : பஞ்சாயத்துக்களின் வரிகளைக் கட்டாயமாக வசூல் செய்துவிட வேண்டுமென்ற உத்தரவுடன் முழு அதிகாரங்களும் ரெவின்யூ அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறதே, அந்த மாதிரி ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, காலாவதியான நிலுவைத தொகைகளை வசூலிப்பதற்கு கிராம அதிகாரிகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? கொடுக்கப்பட்டிருந்தும் அதன்பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? அப்படி ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : உத்தரவு தனியாகக் கொடுக்க வேண்டுமென்பதில்லை. ஏறகனவே அவர்களுக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : பஞ்சாயத்து பிரதேசத்தில் வரி பாக்கியில்லாமல் வசூலிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. பழைய பாக்கி தங்கிவிட்டது. அதிகாரிகள் வசூலிக்க தவறியதால் அது ஒரு பெரும் சுமையாக இருக்கிறது. அப்படியுள்ள இடங்களில் பழைய பாக்கியை வஜா செய்துவிட்டு இனிமேலாவது கட்டாயமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வஜா செய்வது என்ற பிரச்சனையே இல்லை. அதையும் வசூல் செய்தால் அவர்களுக்கு எத்தனை சதவிகிதம் கொடுப்பது என்ற பிரச்சனைதான் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, காலாவதி ஆன நிலுவைகள் என்றால் வசூலிக்கப்பட முடியாத ஒன்று என்று நினைக்கிற நேரத்தில், அதை வசூலிக்க வேண்டுமென்று கலெக்டர் உத்தரவிட்டதன் பேரில் அதனை வசூலிக்க முடியாத கிராமாதிகாரிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்த மாதிரித் தகவல் ஒன்றும் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

Water-supply (Madras City)

*7 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the result of the drilling of test wells in the Cooum and Courtaliyar-Araniyar basins to augment Madras City water-supply?

THE HON. SRI R. VENKATARAMAN : A paper[a] is placed on the table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், மேஜையின் மீது வைக்கப் பட்டிருக்கும் அறிக்கையில் கண்டிருப்பதன்படி பரிட்சைகள் நடந்ததன் நோக்கம் இந்த ஊற்று நீரை நகரத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்பதா? அப்படியானால் அந்தப் பகுதிகளில் விவசாயம் பாதிக்கப்படாதா? அதற்கு என்ன மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பதற்காக இந்த முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்படாது என்று சர்க்கார் கருதுகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : கடல் நீரைக் குடிதண்ணீராக மாற்றுவதுபற்றிக் கனம் தொழிலமைச்சர் அவர்கள் பல நிபுணர் களுடன் ஆராய்ச்சி நடத்தியதாகக் கூறப்படுகிறது. அது உண்மையா? அது எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கடல் நீரைக் குடி நீராக்கு வது சாத்தியம் என்பதெல்லாம் தீர்மானமாகிவிட்டது. அதை எப்படிச் செய்வது, அதற்கு என்ன செலவாகும் என்பதுதான் இப்போது ஆலோசனையில் இருக்கிறது. இது பற்றி ஒரு முடிவு செய்ய மேல் நாட்டு நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

புலவர் கா. கோவிந்தன் : சென்னை நகரத்தில் தண்ணீர்த் தேவை மிக இன்றியமையாததாக இருக்கிறது. கிணற்று நீரா, காவிரி நீரா, கிருஷ்ணா நீரா, கடல் நீரா என்று இப்படியே ஆராய்ந்து கொண்டிருப்பதைவிட இதிலே உடனடியாக ஒரு முடிவு எடுக்கப் படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆராய்ச்சி செய்யாமல் எந்தத் தண்ணீரை சென்னைக்குக் கொண்டு வருவது என்பதை முடிவு செய்ய இயலாது. கனம் புலவர் அவர்கள் வேறு ஏதாவது தண்ணீரைக் கண்டு பிடித்துச் சொன்னாலும், அதையும் கவனிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சென்னைக்குக் குடிதண்ணீர் வழங்க காவிரியில் இருந்து வீராணம் ஏரிக்கு தண்ணீர் கொண்டுவர பெரிய திட்டத்தைத் தயாரித்து, அதற்கு ஏறக்குறைய 35, 36

a Printed as Appendix I on page–116.

கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டார்கள். அந்தத் தொகையை இந்த மாநில அரசாங்கமோ அல்லது மத்திய அரசாங் கத்திலிருந்து பெற்றோ கார்ப்பரேஷனுக்குக் கொடுத்து இந்தத் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நிரந்தரமாகப் போக்குவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது கனம் அங்கத்தினர் அவர்களுடைய ஆலோசனை. காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவது, முடியுமா, முடியாதா என்பதுபற்றியெல்லாம் இன்னும் சர்க்கார் ஒன்றும் முடிவு செய்யவில்லை. அது பற்றி முடிவு எடுத்த பிறகு யார் அதை ஏற்று நடத்துவது என்பதை முடிவு செய்து கொள்ளலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : காவிரித் தண்ணீர் அந்தப் பகுதிக்கே பற்றாக்குறையாக இருக்கிறது. பக்கத்தில் இருக்கும் புதுக்கோட்டைக்கே தண்ணீர் போதவில்லை. குல்காத்தி கமிஷன் திட்டப்படி கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டு வருவது எந்த நிலையில் இருக்கிறது ? நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இது பற்றி ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி முடிவு எடுப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : கிருஷ்ணா தண்ணீர் ஒரு சொட்டுக் கூடக் கிடைக்காது என்ற வகையில் சில அறிக்கைகள் பார்த்தேன். அவை ஆதாரமானவையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தண்ணீர் கொடுக்க முடியும் என்று கூட அறிக்கைகள் வந்தன. அதையும் கனம் அங்கத்தினர் அவர்கள் பார்த்திருக்கக்கூடும் என்று நினைக்கிறேன். (சிரிப்பு).

திரு. டி. கார்ச்சா கவுடர் : சென்னை நகரக் குடி தண்ணீர்ப் பிரச்சனையை நீக்க, குடி தண்ணீருக்கென்றும், மற்ற உபயோகங் களுக்கு என்றும் தனித்தனிக் குழாய்கள் வீடுகளுக்கு வைக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்களே அந்த யோசனை பரிசீலிக்கப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது ஒரு யோசனை. இப் போது இருக்கிற பிரச்னை, குடிக்கிற தண்ணீர் மற்ற உபயோகத் துக்கு வேண்டிய தண்ணீர் என்பதல்ல. தேவையான அளவு தண்ணீர் வேண்டும். இப்போதைய பிரச்னை அதிகமாகத் தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்பதுதான்.

Employment of the physically handicapped

* 8 *Q.*—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons registered in the Special Employment Office for the Physically Handicapped ; and

(*b*) the details thereof in various categories?

17th January 1964]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The number of persons registered in the Special Employment Office for the Physically Handicapped during the period from April 1952 to September 1963 is 429.

(b) Blind—158.

Deaf—11.

Deafmute—81.

Orthopaedics—179.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த மாதிரி அங்கஹீனமானவர்களுக்கு, ஜில்லா வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனம் முன்பாத்தியதை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பிட்ட வேலைக்கு அங்கஹீனமானவர்கள் தகுதியுடையவர்களாக இருந்து வேலையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தால் அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

திருமதி டி. என். அனந்தநாயகி : இந்த மாதிரி அங்கஹீனமானவர்களை அரசாங்க நிறுவனங்களில்—கவர்ன்மெண்ட் பிரஸ், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மெண்ட் ஆகியவற்றில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஜி. ஓ. பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ? இல்லை என்றால் இனிமேலாவது அப்படி ஒரு ஜி. ஓ. பிறப்பிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காலியாக இருக்கும் வேலைக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக இருந்தால் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : உடல் ஊனம் உற்றவர்களுக்காகத் தனியாக அமைக்கப்பட்டிருக்கும் வேலைதேடித் தரும் ஸ்தாபனம் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்படவில்லை. அதை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க சர்க்கார் முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்த வரையில் எல்லா மாவட்டங்களிலும் இந்த ஸ்தாபனம் பணி புரிந்து வருகிறது.

* 9 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-63-ல் அரசாங்க அச்சகம், நூல் நிலையம் ஆகியவற்றில் உடல் ஊனமுற்றவர்கள் எத்தனைபேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The number of physically handicapped persons placed in employment either in the Government Presses or in the Government Library is nil.

திரு. து. ப. அழகமுத்து : அரசாங்க அச்சகம், நூல் நிலையங்களில் உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை தரவேண்டுமென்று மதிப்பீட்டுக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. அதை அமுலாக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் பார்க்கக்கூடிய வேலை இருந்து, அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளுவதாக இருந்தால் வேலை கொடுக்கப்படும். குறிப்பிட்ட வேலைக்கு அவர்கள் தகுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : 1962-63-ல் இப்படி வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ? அவர்களில் எத்தனை பேருக்கு என்ன வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

* 10 **கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குருடர் முதலான உறுப்பிழந்தோருக்கு வாழ்வு தரும் வகையில் மாநில அரசு 1962-ல் செலவழித்த தொகை என்ன ?

(இ) மத்திய அரசிடமிருந்து இதற்காக உதவி ஏதேனும் கிடைத்ததா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A sum of Rs. 3,31,848 was spent on the education of the handicapped during 1962–63 and a sum of Rs. 7,951·65 on the Special Employment Office for the Physically Handicapped.

(*b*) No financial aid was received from the Government of India towards expenditure on the education of the handicapped. The entire expenditure incurred on the Special Employment Office was, however, reimbursed by the Government of India.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : உறுப்பிழந்தோர் பலர் தெருவிலே பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது வேறு விஷயம். அதற்குத் தனியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கொதிகலன் தொழிற்சாலை (திருச்சிராப்பள்ளி)

* 13 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி உயர்அழுத்தக் கொதிகலன் திட்டத்தின் ஆரம்ப வேலைகளைச் செய்யும் பணியை நமது மாநில அரசாங்கத்திடம் மத்திய அரசாங்கம் ஒப்படைத்துள்ளதா ?

(இ) ஆரம்ப வேலைகளுக்கு நமது மாநில சர்க்கார் இது வரை எவ்வளவு தொகை எவை எவற்றிற்காகச் செலவிட்டிருக்கிறார்கள் ?

17th January 1964]

(உ) மேற்படி திட்டத்திற்காக வேலைக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்க இன்டர்வியூ கார்டுகள் அனுப்பும்பொழுதும், தேர்வு நடத்தும்பொழுதும் மாநில சர்க்காரின் பிரதிநிதி யாரேனும் கலந்தாலோசிக்கப்படுகின்றனரா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) **High Pressure Boiler** தொழிற்சாலைக்குத் தேவையான நிலத்தை சமதரையாக்கும் வேலை மட்டும் இவ்வரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1963-ம் வருடம் அக்டோபர் மாதம் முடிய இதற்காகச் செலவழித்த தொகை ரூ. 20.40 லட்சம். செலவு தொகை பூராவும் மத்திய சர்க்காரிடமிருந்து வசூலிக்கப்படும்.

(உ) தொழிற்சாலைக்குத் தேவையான ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் இந்த ராஜ்ய தொழில் வர்த்தக இயக்குநரும் ஒரு அங்கத்தினர்.

திரு. து. ப. அழகமுத்து : வெளியில் உள்ள குறிப்பிட்ட ஒரு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுந்தான் அந்தத் தொழிற்சாலையில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாகப் புகார் கூறப்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரிப் புகார் எங்களுக்கு வந்தது. நான் அந்த நிர்வாக அதிகாரியை அழைத்துப் பேசினேன். அவர்கள், 'பாய்லர் பிளாண்ட் ரெக்ரூட்மெண்ட் லிஸ்ட்' பூராவையும் கொண்டு வந்தார்கள். அதைப் பார்த்ததில் ஒரு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் சலுகை காட்டப்படுகிறது என்ற குற்றச்சாட்டு சரியல்ல என்பதை நானே உணர்ந்தேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : குற்றச்சாட்டு ஒரு மாகாணத்தில் உள்ளவர்களுக்குத் தனிச் சலுகை கொடுக்கப்படுகிறது என்பதல்ல. குறிப்பாக திருச்சி மாவட்டத்தில், தமிழ் நாட்டில் இருப்பவர்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை என்பதுதான் குற்றச் சாட்டு. அது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முற்றும் உண்மையல்ல. அரசியல் சாசனப்படி ஒரு குறிப்பிட்ட மாகாணத்திலோ, மாவட்டத்திலோ இருப்பவர்களுக்குத்தான் சலுகை காட்ட வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல. அவ்வாறு சொன்னால் நஷ்டப்படுகிறவர்கள் தமிழ் நாட்டில் இருப்பவர்களாகத்தான் இருப்பார்கள்.

திருமதி டி. என். அனந்தநாயகி : அந்தத் தொழிற்சாலை திருச்சி மாவட்டத்தில் இருப்பதால் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்காவது ஒரு தனிச் சலுகை அந்தத் தொழிலில் கொடுக்க முடியுமா என்று ஆராய்வது சரி என்று நான் நினைக்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? 3-0 pm

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவ்வாறு செய்ய உத்தேசம் இல்லை. அவ்வாறு செய்யக் கூடாது என்பதுதான் சர்க்காரின் எண்ணம்.

[17th January 1964

திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்தச் சுற்று வட்டாரத்தில் இருப்பவர்களுக்கு வேலையே கிடைப்பதில்லை. அங்கு தகுதியானவர்கள் இருந்தும் வேறு மாநிலங்களில் இருந்து எடுக்க வேண்டியது அவசியமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தமிழ் நாட்டில் இருப்பவர்கள் எல்லோருக்கும் இதில் வேலை வாய்ப்பு கிடைக்க உரிமை இருக்கிறது. இந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்குத்தான் தனிச் சலுகை கொடுக்க வேண்டுமென்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. பொதுவாக இந்தப் பகுதி மக்களுக்குத் தான் அதிகமான அளவில் வேலை வாய்ப்பு கிடைக்க முடியும். ஏனெனில் பீஹார், காஷ்மீர் போன்ற இடங்களில் இருந்து இங்கு சாதாரண வேலைக்கு வரமாட்டார்கள். வர முடியாது. கெசட்டட் உத்தியோகங்களுக்கு எடுக்கும்போது அகில இந்திய ரீதியில் செலக்ஷன் நடக்கிறது. தகுதி உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்த ப்ளாண்ட் திறப்பு விழாவிற்கு வந்திருந்த அமைச்சர் அவர்கள் இந்த மாவட்டத்தைச் சார்ந்த, சுற்றுவட்டாரத்தில் உள்ளவர்களுக்குத்தான் முதல் சலுகை அளிக்கப்படுமென்று பேசியது அரசாங்கத்திற்குத் தெரிய வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது எனக்குத் தெரியாது. அந்தமாதிரி பேசியிருந்தால் அது இந்திய அரசியல் கொள்கைக்கு சற்று மாறானது என நினைக்கிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி : திருவிதாங்கூர் சர்க்காரில், அங்கு ஆரம்பிக்கக் கூடிய புதிய தொழில்களில் 100-க்கு இவ்வளவு என்று அங்குள்ளவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று ஒரு உத்தரவு இருப்பதாகக் கூறுகிறார்கள். அதேபோல் இங்கும் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் எனக்குத் தெரியாது. அப்படி இருக்க முடியாது என்பதுதான் என் எண்ணம்.

திரு. அ. தியாகராஜன் : வரண்ட பிரதேசமாக இருப்பதும், வேலை வாய்ப்பு அதிகம் கிடைக்காமல் இருக்கும் புதுக்கோட்டைப் பகுதியில் இருப்பவர்களுக்கு திருச்சி பாய்லர் தொழிற்சாலையில் இந்த வேலை வாய்ப்பை அளிக்க அரசாங்கம் முன் வருமா ?

(பதில் இல்லை.)

New building for the Secretariat

* 14 *Q.*—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to construct a new building for Secretariat Offices?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

17th January 1964]

திரு. கரு. சீமைச்சாமி : சுதந்திரம் அடைந்த பிறகு மற்ற மாநிலங்களில் எல்லாம் **Secretariat Building** புதிதாகக் கட்டப்பட்டு எல்லா டிபார்ட்மெண்ட்களும் எல்லா வசதிகளுட னும் அமைந்திருக்கிறது. அதேபோன்று இங்கும் எல்லா டிபார்ட்மெண்ட்களும் தகுந்த இட வசதியுடன் இருப்பதற்கு புதுக் கட்டடம் ஒன்று கட்ட யோசிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்காக நாம் மற்ற மாநிலங்களை பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. இங்கு இடம் போதாதுதான். ஆனால் ராணுவத்தினரிடமிருந்து கொஞ்சம் நிலம் வாங்கியிருக்கிறோம். இதே கோட்டை மைதானத்தில் உள்ளதுதான். மேலும் கட்டடங்கள் விஸ்தரிக்கப்படலாம். காரியாலயத்திற்காக கட்டடம் கட்டுவதை விட கனம் அங்கத் தினர்கள் சௌகரியமாக இருக்க ஹாஸ்டல் கட்டடம் அவசியம். அதை எப்படியாவது கட்ட வேண்டுமென்ற யோசனைதான் இப் போது அரசாங்கத்திற்கு இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அங்கத்தினர்களுக்கு புது ஹாஸ்டல் கட்டுவது பற்றி முதல் அமைச்சர் கூறியது எல்லோ ருக்கும் மகிழ்ச்சி அளிக்கும். அதே சமயத்தில் புதுச் சட்ட சபைக் கட்டடம் கட்டும் உத்தேசம் எந்த மட்டில் இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கு செகண்ட் பிரயா ரிட்டிதான். முதல் பிரயாரிட்டி ஹாஸ்டலுக்குத்தான்.

திருமதி டி. என். அனந்தநாயகி : அங்கத்தினர்கள் சாப்பிடப் போவதற்கு இடம் போதாமல் கஷ்டமாக இருக்கிறது. அதை முதலில் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ராணுவத்தினரிடம் இருந்து நிலம் வாங்கியிருப்பதாகச் சொன்னேன். கட்டடம் விஸ்தரிக்கப் படும்போது சாப்பிடுவதற்கு வசதியாக இடம் ஏற்பாடு செய்ய லாம்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : செகரட்டேரியட்டில் வேலை பார்க்கும் பெண் ஊழியர்களுக்கு அசௌகரியமான சில சந்தர்ப்பங்கள் இருப்பதால் அவர்கள் தனியாகச் சாப்பிடவும், ஒதுங்குவதற்கும் இடம் ஏற்பாடு செய்து தரப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இவையெல்லாம் கட்டடம் விஸ்தரிக்கப்படும்போது கவனிக்கப்படும்.

திரு. கே. மூக்கையா தேவர் : முதல் அமைச்சர் அவர்கள் முதலில் அங்கத்தினர்களுக்கு ஹாஸ்டல் கட்டித் தரப்படுமென்று சொன்னார்கள். அது வரவேற்கத்தக்கது. ஒரு அங்கத்தினர் இடம் இல்லாது ஸ்டோர் ரூமில் இருக்கிறார். ஆகவே, அது எப் போது கட்டப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்போது அங்கத்தினர்கள் அதில் ஏதாவது இருக் கிறதா என்று கவனிக்கலாம்.

திரு. கோ. சி. மணி : புது ஹாஸ்டல் கட்டுவதற்கு முன்னால், இப்போது நாம் தங்கியிருக்கும் ஹாஸ்டலில் கொசுவை ஒழிக்க மருந்து அடித்தார்கள். அதன் பின் கொசுக்கள் அதிகப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தக் கொசுக்களை ஒழிக்க இதை விட தீவிர மான வழியிருக்கிறதா என்று கவனிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நேற்று கூட டீ.டீ.டி. எல்லாம் ஸ்ப்ரே செய்தார்கள். கொசு இம்யூனாகிப் போய் விட்டது. மீண்டும் அங்கத்தினர்கள் இதை ஹவுஸ் கமிட்டியில் எடுத்துச் சொல்லலாம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சட்டசபை அங்கத்தினர்கள் எண்ணிக்கைகூட அதிகமாவதாகத் தெரிகிறது. ஆகவே இதற்காக கட்டப்பட்ட பழைய சட்ட மன்றக் காரியாலயத்தில் இதை வைத்து நடத்த அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா? பாலர் அரங்கை வேறு இடத்திற்கு மாற்றி அவ்விடத்தில் சட்ட சபையைக் கூட்ட அரசாங்கம் ஆவன செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதை விட பாலர் அரங்கில் அதிக வசதியிருக்காது. அது தாற்காலிகமாக சட்டமன்றத்திற் கென்று அப்போது கட்டப்பட்டது. பிறகு பாலர் அரங்கமாக மாற்றப்பட்டது. பாலர் மீது இவ்வளவு வெறுப்புக் கொள்வது சரியல்ல.

'Bleeding Madras' cloth (Foreign Markets)

* 15 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to sustain the growing interest in the "Bleeding Madras" variety of cloth in the United States and to build up a steady market there?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement[a] showing the steps taken in this regard is placed on the table of the House.

திரு. வி. எஸ். எஸ். மணி : கைத்தறியால் தயார் செய்யப் படும் செயற்கைப் பட்டு, பட்டு புடவைகளுக்கு அமெரிக்காவில் நல்ல கிராக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே நிரந் தரமாக அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய அந்தத் தொழிலை நல்ல முறையில் செய்ய அரசாங்கம் என்ன வழிவகைகள் செய்திருக் கிறார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் ஸ்டேட்மெண் டில் சொல்லப்பட்டிருக்கிறது. க்வாலிட்டி எப்படியிருக்க வேண் டும், எவ்வளவு எக்ஸ்போர்ட் செய்யவேண்டும், என்ன விலையில் செய்யவேண்டும் என்று தரம் நிர்ணயம் செய்யப்பட்டு கொடுக்கப் பட்டிருக்கிறது, ஸ்டேட்மெண்டில்.

புலவர் கா. கோவிந்தன் : வண்ணம் மாறும் சேலைகளுக்கு அமெரிக்கன் மார்கட்டைப் போன்று வேறு நாடுகளிலும் இடம் பிடிக்க அரசாங்கம் என்ன செய்து வந்திருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வேறு இடங்களில் மார்க் கட் பிடிப்பது என்று சொன்னால் அவர்களுக்கு இந்தவிதமான ாகத் துணியில் விருப்பம் இருக்க வேண்டும். அம்மாதிரி விருப்பம்

a Printed as Appendix II on pages 116-120.

17th January 1964]

இருக்கும் பகுதியில்தான் விற்கமுடியும். இப்போது மற்ற நாடுகளில் இந்த வண்ணம் மாறும் துணிக்கு விருப்பம் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்கம் பிரயாசைப்பட்டு 1 கோடி 50 லட்சத்திற்கு கோட்டாவை உயர்த்தியிருப்பதாக அறிக்கையில் கூறப்படுகிறது. அது ஓரளவு நிவர்த்தி அளிக்கும் என்றாலும், ஆரம்பத்தில் எந்த அளவு ஏற்றுமதி செய்யப்பட்டதோ அதை விட அதிகமாகி இருக்கிறதா? குறைவாக இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பத்துப் பதினைந்து சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : இந்தச் சேலைகளுக்கு வேறு இடங்களில் விருப்பம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். விருப்பம் இல்லை என்ற முடிவை எப்படி அரசாங்கம் தெரிந்து கொண்டது? அப்படித் தெரிந்து கொள்ள அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விருப்பம் இல்லை என்பதை அந்தந்த நாடுகளில் இருந்து என்கொயரீஸ் வருகிறதா என்பதைப் பார்த்துச் சொல்ல முடியும். நம் ட்ரேட் ரெப்ரசென்டேட்டிவ்ஸ் பல நாடுகளில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தத் துணியைப் பற்றியும், இதன் சாம்பிள் போன்றவை அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களிடம் இருந்து என்கொயரீஸ் வந்தால்தான் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : இந்த வண்ணம் மாறும் துணி வண்ணம் மாறிக் கொண்டிருப்பது போன்று அமெரிக்கர்களின் விருப்பமும் அடிக்கடி மாறிக் கொண்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். அதை உடனுக்குடன் தெரிந்து இங்குள்ள நெசவாளிகளுக்குத் தெரிவிப்பதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சாதாரணமாக, அயல்நாட்டு வர்த்தகமே வண்ணம் மாறுவதுபோல்தான் மாறிக் கொண்டிருக்கும். எப்போதும் ஸ்டெடியாக இருக்குமென்று சொல்ல முடியாது. ஆகவேதான் வியாபாரம் செய்வதில் நஷ்டம் ஏற்படக்கூடாது என்றுதான் ரெகுலேட் செய்து இவ்வளவுதான் ஏற்றுமதி செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். ஏன் தேவை அளவிற்கு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கவில்லை என்று வர்த்தகர்கள் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள். மேல் நாடுகளில் நம் துணிக்கு நிரந்தரமான மார்க்கட் இருக்கவேண்டுமென்று சொன்னால் அவர்கள் தேவைக்கு சிறிது குறைவாக அனுப்பிக் கொண்டிருந்தால்தான் மேலும் வருமா வருமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அந்த முறையில் ஏற்பாடு செய்கிறோம்.

[17th January 1964

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், மொத்தம் ஏற்றுமதியாவதற்கு 1 கோடி 50 லட்சம் டன் என்று ஒரு வருடத்திற்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. இவை பூராவும் தனியார் கையிலேயே விடப் பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இதை மாற்றி ஹான்ட்லூம் எக்ஸ்போர்ட் ஸ்தாபனத்தின் மூலமாகவே ஏற்றுமதி செய்தால் என்ன, அதில் என்ன சங்கடம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஹான்ட் லூம் எக்ஸ் போர்ட் ஆர்கனேஸேஷன் இதை பூராவும் ஏற்றுமதி செய்வதற்கு இயலாது. இந்த ஸ்தாபனம் தறிகளை வைத்துத் தயார் செய்து அனுப்புவதில்லை. அதுவும் தனியார்களிடமிருந்து வாங்கித்தான் ஏற்றுமதி செய்யவேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கலாம். எப்படியும் அதிகம் விற்பனையாக வேண்டும் என்ற நோக்கத்தில்தான் தனியார்களிடமும் விடப்பட்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி: வெளிநாட்டிற்கு "மாதிரி" அனுப்பும் போது திருநாகேஸ்வரம் சேலை, திருப்புவனம் சேலை இவைகளை அனுப்பத் தவறிவிட்டார்கள் என்ற புகார் இருக்கிறதே, அது உண்மையா? அப்படியானால் இனிமேலாவது அவற்றையும் சேர்த்து வாங்கி அனுப்புவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பொதுவாக வெளிநாட்டு மார்க்கெட்டை தனிப்பட்ட வியாபாரிகளும் போய்க் கண்டு பிடிக்கிறார்கள். சமீபத்தில் சிலர் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய இடங்களுக்குச் சென்று நமது துணிகளைக் காண்பித்து அங்கு விற் பனையாவதற்கு வேண்டிய முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால் நமது நாட்டிலுள்ள எல்லா ரகத் துணிகளை எடுத்துக் கொண்டு போய் ஒவ்வொரு நாடாக காண்பிப்பது என்பது இயலாத காரியம். ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லப்படும் புகார் உண்மையா என்று தெரியவில்லை. இருந்தாலும் எல்லா ரகத் துணிகளையும் எடுத்துச் செல்வது என்பது முடியாத காரியம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. எல். சசிவர்ண தேவர்: இந்தத் துணிக்கு "பிளீடிங் மெட்ராஸ்" என்ற பெயர் எப்படி வந்தது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தத் துணிகளைத் தண் ணீரில் போட்டால் துணியில் இருக்கின்ற பல ரக வர்ணங்கள் அதாவது சாயங்கள் ஒரு சாயத்திலிருந்து இன்னொரு சாயத்திற்கு இறங்கும். இதை "பிளீட்ஸ்" என்று சொல்லுவார்கள். அதாவது ரத்தம் சொட்டிக் கொண்டிருப்பதை "பிளிட்ஸ்" என்று சொல்வதைப்போல இந்தத் துணியிலுள்ள சாயம் சொட்டி இறங்குவதையும் நினைத்துத்தான், இந்தத் துணிகளுக்கு "பிளீடிங்ஸ் மெட்ராஸ்" என்று பெயர் வந்தது.

கனம் சபாநாயகர்: அமெரிக்கர்கள் இதைக் கேட்டுவிட்டு பயப்படப் போகிறார்கள்!

Employment for graduates

* 16 *Q.*—Sri P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state the total number of First and Second-class graduates registered with the Employment Exchanges in Madras City?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The total number of first and second-class graduates registered as on 30th September 1963 in the Employment Exchanges in Madras City is 258.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : *ஸார், இவர்களில் எத்தனை பேர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *பி.ஏ. படித்தவர்கள் 69 பேர்கள், பி.காம். படித்தவர்கள் 4 பேர்கள், எம்.எஸ்.ஸி. படித்தவர்கள் 8 பேர்கள், எம்.ஏ. படித்தவர்கள் 27 பேர்கள்.*

* 17 *Q.*—Sri P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the total number of Engineering graduates registered with the Employment Exchanges in various categories till the end of June 1963; and

(*b*) what are the prospects for their employment in this State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) During the period from 1st July 1962 to 30th June 1963, 265 engineering graduates have registered their names in the Employment Exchanges in this State.

(*b*) The prospects for their employment in this State, both in public and private sector undertakings, are quite good.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : *ஸார், இவர்களில் வேலையில்லாமல் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஏதோ கிடைக்கின்ற வேலை தங்களுக்கு ஒத்து வராமல் இருக்கிறது என்று சொல்லி பலர் சில நாட்களுக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதிலும் இப்போது ராணுவ கமிஷனில் வேலைக்கு எடுத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். போதுமான என்ஜினியர்கள் போவதில்லை.*

சர்க்கரை "கோட்டா"

** 18 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1963, ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை ஜில்லா வாரியாகச் சர்க்கரை கோட்டா எவ்வளவு ஒதுக்கப் பட்டது ?

[17th January 1964

(இ) போதுமான அளவுக்குக் கொடுக்கப்படவில்லை என்றால் காரணமென்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (a) and (b) A statement[a] is placed on the Table of the house.

திரு. ஆ. கு. சுப்பையா : சர்க்கரை விற்பனை செய்வதை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே எல்லா இடங்களிலும் விற்பனை செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் சர்க்கரை வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், சிமிண்ட் வினியோகத்தில் இருப்பது போன்றுதான் இப்போது சர்க்கரையிலும் தகராறு இருந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) சர்க்கரை பற்ருக்குறையாக இருக்கிறது என்று சொல்ல முடியாது. சிமின்ட்-க்கு வேண்டுமென்ருல் பற்ருக்குறை இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ளலாம். ஆனுல் சர்க்கரை விஷயம் அப்படியல்ல. ஆகவே இந்த விஷயத்தில் கோளாறுகள் இல்லாமல் இருப்பதற்காக 'கார்டு' மூலமாக வினியோகம் செய்ய அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : நமக்குத் தேவையான சர்க்கரை 12,600 டன். ஆனுல் நமக்கு மத்திய சர்க்கார் 11,000 டன்தான் ஒதுக்கியிருக்கிருர்கள். ஆகவேதான் இதற்குத் தக்கவாறு அங்கங்கு இருக்கின்ற கலெக்டர்கள் மூலமாக பகிர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்ற புள்ளி விவரங்களைப் பார்த்தால்கூட, பற்ருக்குறை சிறிதளவுதான் என்பது தெரிகிறது. ஆனுல் பிளாக் மார்க்கெட் அதிகமாக சர்க்கரை வினியோகத்தில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதைத் தடுக்கின்ற முறையில் கார்டுகளை வழங்கி அதன் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் சர்க்கரையை வினியோகிப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : சில இடங்களில் கார்டு மூலமாக சர்க்கரை வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. உதாரணமாக கோவை முனிசிபாலிட்டியில் கார்டு மூலமாகச் சர்க்கரை வழங்குவதற்கு முயற்சி எடுத்தும் ஒழுங்காக நடைபெற வில்லை என்று கண்டு அந்த முறை எடுக்கப்பட்டது.

திரு. மு. பொ. வடிவேல் : அங்கங்கு இருக்கின்ற பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு சர்க்கரை வினியோகத்திற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி கொடுக்கப்பட்டிருந்தும், வீட்டு வரி

[a] Printed as Appendix III on pages 180-182.

17th January 1964]

கட்டினவர்களுக்குத்தான் சர்க்கரை கொடுக்க முடியும் என்று தாசில்தார் சொல்லுவதாகத் தெரிகிறது. இதன் காரணமாக மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இப்படி ஏதேனும் உத்தரவு இருக்கிறதா, அப்படியிருக்குமாயின் அதை ரத்து செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : அந்தவிதமான தகவல் ஒன்றும் என்னிடமில்லை.

திரு. பி. கே. முத்துவேலப்ப கவுண்டர் : ஸார், இப்போது நாட்டுச் சர்க்கரை மூட்டை ஒன்று 30, 40 ரூபாய் என்றுதான் இருக்கிறது. இன்னும் இதனுடைய விலை குறையும் போல் தோன்றுகிறது. இவ்விதம் விலை குறைந்தால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே நாட்டுச் சர்க்கரையை மாகாணத்திற்கு மாகாணம் கொண்டு போவதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்குத் தனிக் கேள்வி தேவை.

திரு. வி. ராமநாதன் : சர்க்கரை வினியோகத்தில் நிர்வாகச் சிக்கல் இருப்பதற்குக் காரணம், கோட்டா முறை ஏற்படுத்தி யிருப்பதுதான் என்றும், ஆகவே இந்த கோட்டா முறையை எடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா என்றும் கேட்க விரும்பு கிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : இது மத்திய சர்க்காருடைய உத்தரவு. ஸ்டேட்-அளவில் இதில் ஒன்றும் சொல்வதற்கில்லை.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : இந்தக் கோட்டா முறை இருப்பதினால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அது இல்லா மல் பல இடங்களிலும் நல்ல முறையில் நடந்து கொண்டிருக் கிறது. உதாரணமாக நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியில் கோட்டா முறையில்லாமல் நல்ல முறையில் வினியோகம் நடை பெற்றுக் கொண்டிருப்பதாக எம்.எல்.ஏ. அவர்களே சொல்லு கிறார். ஆகவே இந்தக் கோட்டா முறையை அடியோடு எடுப்ப தற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : இதைப்பற்றி அங்கங்குள்ள கலெக்டர்கள்தான் முடிவு எடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. முன் கேள்வி களிலும் நான் இதைப்பற்றி சொன்னேன்.

திருமதி சி. குழந்தை அம்மாள் : சாதாரணமாக ஒரு குடும் பத்திற்கு 6 கிலோகிராம் என்று கொடுக்கிறார்கள். ஆனால் பிளாக் மார்க்கெட்டில் 100 கிலோ வேண்டுமென்றாலும் கிடைக்கும். ஆனால் நகரத்தில் கிடைப்பது போன்று கிராம மக்களுக்கு

என்று அவர்கள் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை. ஆகவே இந்தக் கஷ்டத்தை உணர்ந்து அரசாங்கம் இந்த முறையைத் திருத்தி அமைக்க யோசனை செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : எவ்வளவு ஒழுங்காக கொடுக்கவேண்டுமோ அந்த அளவுக்கு கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கான உத்தரவுகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திருமதி டி. என். அனந்தநாயகி : சர்க்கரை வினியோகம் செய்வதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுப்பதோடு நில்லாமல் தனிப்பட்டவர்களுக்கும் வினியோகத்திற்காக கொடுத்தால்தான், போட்டி போட்டுக்கொண்டு விற்பனை செய்வதில், மக்களுக்கு எளிதாகச் சர்க்கரை கிடைக்கும். ஆகவே அதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

(பதில் இல்லை.)

திரு. க. ர. நல்லசிவம் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கோவை நகரத்தில் கார்டு வழங்கப்பட்டு சர்க்கரை வினியோகம் செய்தது சரியான முறையில் நடைபெறவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஏன் சரியான முறையில் நடைபெறவில்லை என்கின்ற அடிப்படையான காரணத்தைச் சர்க்கார் பரிசீலித்ததா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : தனிக்கேள்வி வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, எல்லா கிராமங்களிலும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத கிராமங்களில் ஜீனி கொடுக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இருக்கும் இடங்களில் கூட்டுறவு மூலமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிருர்கள். இல்லாத இடங்களில் தனியார் மூலமாகக் கொடுக்கிருர்கள். மற்றபடி கனம் அங்கத்தினர்கள் வேறு ஏதாவது கவனிக்கவேண்டுமென்று சொன்னல் அதையும் கவனிக்கலாம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : தலைவர் அவர்களே, சில்லரை வியாபாரிகள் சர்க்கரை வினியோகிக்கும்போது ஒரு கிலோவுக்கு மேல் கேட்டால் கொடுக்கக்கூடாது, பில் போடக்கூடாது என்ற விதி இருக்கிறது. ஒரு கிலோவுக்கு மேல் பில் போட்டுக் கொடுத்தால் அவர்கள் தண்டிக்கப்படுகிருர்கள். தேவையுள்ளவர்கள் 2 அல்லது 3 கிலோக்கள் கேட்டாலும் கொடுக்கக்கூடிய முறையில் விதிகளை மாற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : நமக்கு எவ்வளவு கொடுக்கிருர்களோ அதை வைத்துத்தான் வினியோகிக்க வேண்டியிருக்கிறது. நான் முன்பே சொன்னேன்,

17th January 1964]

இருக்கக்கூடிய பற்றுக்குறைக்குத் தகுந்தபடிதான் கொடுக்க வேண்டியிருக்கிறது. பற்றுக்குறை இல்லாமலிருந்தால்தான் பூராவாகக் கொடுக்க முடியும்.

திரு. ஏ. ராகவ ரெட்டி : கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு தடவையும் டெபுடி கலெக்டரிடம் பர்மிட் வாங்கி சர்க்கரை கொண்டுவர வேண்டியிருக்கிறது. நிரந்தரமாக இவ்வளவு என்று குறித்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அப்படி என்னிடம் எந்தவிதமான தகவலும் இல்லை. அப்படி இருந்தால் அதைக் கவனிக்கலாம்.

திரு. கோ. சு. மணி : சென்ற கூட்டத்தின்போது நமது தேவை போக மீதியைத்தான் அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். இப்போது அந்த அறிக்கையில் கணிசமான அளவுக்கு சப்ளை செய்ய முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. கே. பி. பழனிசாமி : சர்க்கரை எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : ஜில்லாவுக்கு இவ்வளவு என்று கொடுக்கப்படுகிறது. அதை வைத்து எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது.

திருமதி சி. குழந்தையம்மாள் : நகரத்தில் இருக்கிறவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ஸ்பெஷல் கோட்டா என்று 15 கிலோ அளவுக்கு மாதம் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் கிராமத்தில் 1,500 ரூபாய் இன்கம்-டாக்ஸ் கொடுக்கிறவர்களுக்கூட ஒரு கிலோதான் கொடுக்கிறார்கள். எந்த அடிப்படையில் சர்க்கரை கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. மு. பொ. வடிவேல் : தற்சமயம் கிராம நாணய சங்கங்களுக்கு கோட்டா கொடுக்கப்படுகிறது. அதை வைத்துக்கொண்டு எந்த அடிப்படையில் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தில் உத்தரவு போடப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இதற்கும் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

[17th January 1964

திரு. இராம அரங்கண்ணல்: சர்க்கரைக்கு மன்றுடி வாங்குகிற நிலைமை மாறி எல்லோருக்கும் தாராளமாகக் கிடைக்கும் ஒரு காலம் எப்போது வரும்?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றுடியார்: ஏராளமாகக் கரும்பு விளையும்போது மன்றுடாமல் கிடைக்கும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சர்க்கரையைப் பொறுத்தவரையில் நம் ராஜ்யத்தில் பற்றுக்குறை இருக்கவேண்டிய அவசியம் இல்லை. இன்னும் சிறிதளவு அதிகமாக ஒதுக்கினல் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். மத்திய சர்க்காரிடம் விசேஷ நடவடிக்கை எடுத்து அதை அதிகப்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றுடியார்: நமக்கு சர்க்கரை அதிகம் வேண்டுமென்றுதான் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் நான் இப்போது சொன்ன குறைவைக் கொடுத்தால், தாராளமாக எல்லோருக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கைதான் இருக்கிறது. என்ன முயற்சிகள் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்யலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: இப்போது ஜில்லாக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கோட்டாக்களில் ஜில்லா அதிகாரிகள் பெரும்பாலான அளவை நகரங்களுக்குக் கொடுக்கிறார்கள். கிராமங்களில் தனிப்பட்டவர்களோ கூட்டுறவுச் சங்கங்களோ கேட்டால், அவர்கள் வெல்லம் சாப்பிடுபவர்கள் தானே, வெல்லத்தையே சாப்பிடலாம் என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லவேண்டுமென்று அரசாங்கம் ஏதாவது சொல்லியிருக்கிறார்களா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றுடியார்: வெல்லம் சாப்பிடுகிறவர்கள் சர்க்கரை வேண்டுமென்று கேட்கிறார்கள். சர்க்கரை சாப்பிடுகின்றவர்கள் வெல்லம் வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்தப் பிரச்னை இருப்பதால்தான் தொந்தரவு வருகிறது. இதையெல்லாம் மனதில் வைத்து, வருகிற சர்க்கரை கோட்டாவை வைத்துக்கொண்டு சர்க்கரை கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. ஆங்காங்கு இருக்கும் உத்தியோகஸ்தர்கள் பொறுப்பு எடுத்துச் செய்யவேண்டுமென்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதைத்தான் செய்து வருகிறார்கள்.

திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர்: தலைவர் அவர்களே, கனம் அமைச்சருக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் மாதா மாதம் எவ்வளவு கிலோ சர்க்கரை கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் சொல்லுவாரா? (சிரிப்பு).

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றுடியார்: இதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும். (சிரிப்பு).

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, நம் நாட்டில் விநியோகம் ஆகக் கூடிய சர்க்கரைக்கும், வெளி நாடுகளுக்கு அனுப்பும் சர்க்கரைக்கும் விலையில் என்ன வித்தியாசம் இருக்கிறது? அது நமக்கு அனுகூலமாக இருக்கிறதா அல்லது பிரதிகூலமாக இருக்கிறதா?

17th January 1964]

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : இதற்குத் தனியாக கேள்வி வேண்டும்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : இந்த மன்றத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்காவது புகார் இல்லாமல் தேவையான அளவுக்கு சர்க்கரை கிடைக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : அவர்கள் சொல்லுவது சென்னைக்கு வரும்போதா அல்லது ஊரில் இருக்கும் போதா என்று தெரியவில்லை.

திருமதி டி. என். அனந்தநாயகி : சர்க்கரை பற்றுக்குறையால் வெல்லத்தின் விலேயும், நாட்டுச் சர்க்கரையின் விலேயும் அதிகமாக ஏறியிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : அதை ஓரளவுக்கு கட்டுப்படுத்தித்தான் இருக்கிருேம்.

Time-barred Taxes (Dharmapuri taluk)

* 19 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to place on the table of the House a statement showing the time-barred items of panchayat taxes in Dharmapuri taluk, panchayat-wise for the year 1962–63?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : அந்த காலாவதியான வரிகளை வஜா செய்யவேண்டுமென்று தர்மபுரி தாசில்தாரிடமிருந்து கோரிக்கை வந்ததாக கேள்விப்பட்டேன். அவைகள் வஜா செய்யப் படுமா அல்லது வசூலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Panchayats in the Dharmapuri taluk, Salem district, have been levying and collecting house-tax, professional tax and vehicles tax which are all mandatory taxes. It is reported that some panchayats could not realize the taxes in time for want of books and forms. The Collector has also stated that want of efficient collection staff and the inability in realizing dues due to difficult seasonal and other local conditions during certain periods, were also responsible for the arrears. A total sum of Rs. 24,923-67 nP. in all has become time barred in 1962–63.

Police Village Development Scheme

* 20. *Q.*—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the work covered by Police Village Development Scheme; and

a Printed as Appendix IV on pages 122–123.

[17th January 1964

(*b*) the places where such schemes are implemented now?

THE HON. SRI P. KAKKAN : A statement[a] is placed on the table of the House.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III—ADJOURNMENT MOTIONS.

(1) DEMONSTRATION OF CITY COLLEGE STUDENTS AND OBSTRUCTION TO A MEMBER BY POLICE OFFICERS WHILE ENTERING ASSEMBLY PREMISES.

MR. SPEAKER : The hon. Member, Sri Rama Arangannal, has given notice of an adjournment motion. The first part relates to the demonstration of the City College students. This is not a matter which can come under an adjournment motion. If necessary, it could be discussed during the discussion on the Governor's Address.

The second part relates to the obstruction to the Member by the Police Officers when he was entering the Assembly premises. I will have to make an enquiry into this. Further, it cannot be brought as an adjournment motion. So, I withhold consent.

(2) PROMULGATION OF PROHIBITORY ORDERS.

MR. SPEAKER : The hon. Member, Sri S. Madhavan, has given notice of an adjournment motion relating to the promulgation of orders under Section 144 of the Criminal Procedure Code, and Section 30 of the Police Act. This is a continuing thing and not a sudden happening. This cannot be brought as an adjournment motion. Further, the hon. Member has an opportunity to refer to the matter during the discussion on the Governor's Address. So I withhold consent.

IV—PRIVILEGE MATTER *RE*: NEWS ITEM IN THE 'BRODWAY TIMES'

MR. SPEAKER : Hon. Members, I would like to bring to the notice of the House certain matter contained in a newspaper called the '*Broadway Times*' in its issue, dated 13th December 1963, since I consider it as an important matter of privilege which affects the Members, the Speaker and the House, and which ought to be placed before the House.

[a] Printed as Appendix V on pages 124–129.

17th January 1964] [Mr. Speaker]

This is an English news weekly published from Madras. This weekly in its issue, dated the 13th December 1963 has published a news item under the caption "D.M.K. Cells in Madras Secretariat". In that there is a reference to Members and the Legislature Secretariat. It reads as follows :— 3-30 p.m

"The Legislature Secretariat is packed with D.M.K. men. Some of the information like answers received from Starred questions is being leaked out to D.M.K. legislators long before the session begins."

The allegations are very serious as they cast aspersions against the Secretariat working under the Speaker, and also the members. Giving information before the House gets the same amounts to a breach of privilege. If any member of the staff of the Secretariat has given any such information he would be committing a breach of privilege. The other allegation is that the D.M.K. legislators were obtaining information before such information is given to the House. It is an aspersion against the Members that they are obtaining information out of their turn. I wanted, therefore, these allegations to be proved by the editor of the paper. If they are proved, the persons responsible would be guilty of contempt of the House, and if not proved the editor would be guilty of committing the contempt of the House by making baseless and wild allegation.

The Editor of the News weekly was, therefore, requested on the 17th December 1963 to substantiate the allegations and furnish any proof he had in regard to them. The Editor replied on the 18th December 1963 that he, as a responsible Editor, having utmost regard for journalistic ethics was not in a position to disclose any names and help the Assembly Department in this regard and it was the duty of that Department to keep a close watch on the people working therein. He added that he only did his duty to let know in time a glimpse of what was happening. He also mentioned in his lettter that he had made similar allegations against some other departments and they kept mum.

Again, the Editor was informed on the 24th December 1963 that he was not asked to reveal the sources of information but only to substantiate the allegations made against the Department and to furnish any proof in that regard. On the 26th December 1963, the Editor replied stating that the allegations could not be substantiated without giving the names of the people involved and as such under no circumstances he could give those names and that it was the job of the Assembly to find out the 'sympathisers'.

He also added :—

"Out of courtesy only I chose to reply to your letter. Now, you seem to demand this as a right. Any more of your letters with this tone will have to be answered openly."

It is clear from the above reply that the Editory has held a threat that he would answer openly.

On this the Editor was informed that his allegations were baseless since he had no material to substantiate the allegations he had made. There has been no further reply from the Editor.

In this connection I also wish to state that the very same paper had published in its issue, dated the 24th May 1963 some information about the members and the Secretariat under the caption 'M.L.As. get a lift". Among other things the news item contained the following :—

"It is learnt reliably that Sri Kamaraj, the Chief Minister, was touring the districts when this operation was put through in the interests of national economy or austerity as it is called. He had no other go but to okay the step which had been implemented in his absence."

I looked into all the papers concerning this and found that the proposal for enhancement of D.A. was approved by the Chief Minister on the 19th September 1962 and the Government Order was issued on 21st September 1962. Further, the order had been issued one month before the emergency began. The publication was factually incorrect. Since it is not usual to take cognisance of every misstatement made in a newspaper, the matter was ignored. But on this occasion the allegations are serious and there is *mala fide* also. The editor has not only refused to substantiate the allegations but has also challenged that he would take up the matter openly. I want to place all these matters before the House and I expect hon. Leaders of parties to give me their opinions as to how to proceed further.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, we have listened to you.

I now move :—

"That the matter of privilege referred to by the Speaker be referred to the Committee of Privileges for enquiry and report and that the Committee be authorised to send for persons, papers and records necessary for the purpose."

MR. SPEAKER :— Motion moved :—

"That the matter of privilege referred to by the Speaker be referred to the Committee of Privileges for enquiry and report and that the Committee be authorised to send for persons, papers and records necessary for the purpose."

*திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் தாங்கள் அறிவித்து, இந்த அவையினுடைய முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்ற வகையில் நான் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். தாங்கள் இந்த அவையின் முன் எடுத்து வைத்துள்ள கருத்துப்படி, இந்த அவையிலுள்ள திராவிட

17th January 1964] [Mr. Speaker]

முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குள்ள உரிமையை இழிவு படுத்திப் பாதிக்கின்ற வகையிலும், தங்களின் சீரிய தலைமையின் கீழ் இயங்குகின்ற சட்டமன்றத் துறையினுடைய உரிமையைப் பாதிக்கின்ற வகையிலும் இந்த செய்திகள் அமைந்திருக்கின்றன. சாதாரணமாக செய்தித் தாள்களுக்கு எழுத்துரிமை, பேச்சுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கின்ற உரிமைக்குப் புறம்பாக பொதுவாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படக்கூடாது என்ற கருத்தை நாம் கொண்டிருந்தாலும், உண்மைக்குப் புறம்பான வகையிலும், உரிமையை பாதிக்கின்ற வகையிலும், இந்த அவையை இழிவு படுத்துகின்ற வகையிலும் இந்தச் செய்திகள் அமைந்திருக்கின்றன.

பொதுவாக, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், அரசாங்க தலைமை அலுவலகத்திலுள்ள அதிகாரிகள் அத்தனை பேரும் கட்சிக்கு அப்பாற்பட்டுப் பணிகளை ஆற்றுகின்றனர் என்ற பெருமையையும் புகழையும் பெற்றிருக்கின்றனர். நம்முடைய மாநிலத்திலுள்ள தலைமை அலுவலகத்தில் பணி புரிகிற அதிகாரிகள் அத்தனை பேரும் நேர்மையான வழியிலும், எந்தக் கட்சிக்கும் தங்களை ஆட்படுத்திக்கொள்ளாத வகையிலும் எல்லோராலும் பாராட்டப்படுகின்ற வகையிலே ஒரு மரபை இதுவரையிலும் ஏற்படுத்தி வந்திருக்கிறார்கள்.

சட்டமன்றத் துறையை பொறுத்த வரையிலும், சட்டமன்றத் துறையில் இருக்கிற அதிகாரிகள், அலுவலர்கள் அத்தனை பேர்களும் இந்த அவையில் உள்ள எல்லாக் கட்சியினரும் பாராட்டத் தக்க வகையில், மிக நேர்மையாகவும் மிக ஒழுங்குடனும் நடந்து வருகிறார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். சட்ட மன்றத் துறைக்கு இழிவு கற்பிக்கின்ற வகையிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் உரிமையை பாதிக்கின்ற வகையிலும், இந்தச் செய்தி அமைந்திருக்கிறது. தாங்கள் குறிப்பிட்டதுபோல, தொடர்ந்து இழிவு படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்தச் செய்திகள் பரிமாறிக் கொள்ளப்பட்டு வருகின்றன. தாங்கள் சுட்டிக்காட்டியதைப் போல 'தாங்கள் கொண்டதே கோலம்' என்ற அளவுக்கு இந்தப் பத்திரிகை கருத்துக்களை வழங்கிக்கொண்டு வருகிறது. இதை உரிமைப் பிரச்னையாகக் கொண்டு, உரிமைக் குழுவுக்கு விட்டு, தக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் நிலைமையை சீர்படுத்துவதற்கு வழி வகை காணவேண்டும். அந்த முறையிலே தாங்கள் குறிப்பிட்ட கருத்துக்களுடைய அடிப்படையில் இந்த மன்றத்தின் முதல்வர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரிப்பதோடு, இதை உரிமைக் குழுவுக்கு விட்டு, நிலையை சீர்செய்யவும், இந்த மன்றத்தினுடைய பெருமையையும் புகழையும், அரசாங்கத் தலைமை அலுவலகத்தினுடைய பெருமையையும், புகழையும், குறிப்பாக சட்டமன்றத் துறையினுடைய பெருமையையும், புகழையும் காப்பாற்றும் வகையிலே தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[17th January 1964

SRI M. KALYANASUNDARAM : This House must be really obliged to you, Sir, for having taken up this issue. I have seen the news item which is the subject-matter of this privilege issue. It deals with several departments. We are now concerned with the Legislature Department. It has referred to Police Department. It has referred to Home Department. They are matters concerning the Hon. Chief Minister and the Hon. Home Minister. It is for them to examine whether they are true or untrue. But the Legislature Department is doing a very delicate job. They have to come into contact with all sections of this House, whether they belong to the Treasury Benches or to the Opposition. We have been getting all the help, according to procedure, from the Legislature Department to discharge our duty. If that department is to be maligned like this openly, it will create a very embarassing situation and it would amount to interference in the proceedings of this House. It will then become difficult for this House to function and to maintain proper relationship with the staff of the Legislature Department and Members of the Legislature. To-day it is against D.M.K. Members. The comments made by the Editor is not fair. I do not think that any member of this House would stoop to get information out of turn in a stealthy way. It is an insult to the Members of this House and it affects the proper and efficient functioning of this House. If he has done it out of ignorance, the House may ignore it. I have been following your statement, Sir. From that it is observed that you have taken steps to bring him to order. But he is not willing to show any reason for it. The criticism is only contemptuous and not fair. The Editor could have approached you to explain the position. He could have taken at least the Hon. Speaker into confidence and the Hon. Speaker could have convinced him in the interest of this House. He could have explained it with evidence. He refuses to disclose the correct information. On the other hand, he is threatening to take action. I have been a Member in this House for nearly 12 years and I know the staff in all the sections of this Department and they have been dutiful and discharging their duties properly and efficiently to this House. Therefore, their honour must be protected more than the honour of this House, if this House has to function efficiently. I am grateful to you for having referred to this matter. I support the motion moved by the Hon. the Leader of the House.

MR. SPEAKER : The question is—

"That the matter of privilege referred to by the Speaker be referred to the Committee of Privileges for enquiry and report and that the Committee be authorised to send for persons, papers and records necessary for the purpose."

The motion was put and carried and the matter was referred to the Committee of Privileges.

V—CALLING ATTENTION TO DAMAGES CAUSED TO LANDS AND HOUSES OF HARIJANS.

திரு. சா. ராமசாமி: தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருமானூர் வட்டத்திலுள்ள டி. பாலூர் கிராமத்திலும் பெரம்பலூர் வட்டத்திலும் 1963 நவம்பரிலிருந்து டிஸம்பர் வரை பெய்த பெரு மழையினால் ஏழை ஹரிஜனங்களின் நிலங்களுக்கும் வீடுகளுக்கும் ஏற்பட்ட சேதாரங்கள் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொடுவர விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, under the influence of the cyclonic winds, there were heavy rains during the first week of December 1963 in many portions of Tiruchirappalli district. According to the report received by me 45 houses (mostly huts—24 in T. Palur Panchayat Union area and 10 in Tirumanur area were affected. Immediate action was taken by the Collector of Tiruchirappalli to provide relief to the Harijans who lost their houses. Free grants amounting to Rs. 1,002 were disbursed under the normal rules to the persons affected by the rains.

There were no breaches of tanks in T. Palur Panchayat Union area. In Tirumanur area, two tanks breached; the ryots cut open the bunds of eight other tanks, without detriment to the irrigation needs, in order to avert possible breaches. The breaches and the open cuts were immediately closed and there was no loss of crops or property.

The rains were not so heavy in Perambalur taluk and there is no report of damage to the irrigation sources or dry crops. Perhaps the rains were beneficial to some of the standing dry crops like cholam, cambu, etc., in this area.

VI—ANNOUNCEMENTS.

(1) BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER: I have to announce to the House that the Business Advisory Committee which met at 11-30 a.m. on 16th January 1964 has recommended the following programme of business for the present sitting of the Assembly :—

(1) Discussion on the Governor's Address may be on 17th, 18th, 20th and 21st January 1964.

(2) Second Supplementary Estimates which will be presented on 17th January 1964 may be discussed and voted on 22nd January 1964.

(3) Appropriation Bill may be taken up for consideration and passing on 23rd January 1964.

[Mr. Speaker] [17th January 1964

The following official Bills may be considered on the 22nd and 23rd January 1964 :—

(1) The Madras City Municipal Corporation, the Madras District Municipalities and the Madras Panchayats (Amendment) Bill, 1964;

(2) The Madras Added Territories Extension of Laws Bill, 1963; and

(3) The Motor Vehicles (Madras Amendment) Bill, 1964.

(4) Government Resolutions may be taken up on 23rd January 1964.

(5) The Non-official business may be transacted on 24th January 1964.

Accordingly I allot four days for the discussion on the Governor's Address beginning from 17th and ending on 21st January 1964. I also allot 22nd January 1964 for the discussion of the Second Supplementary Statement of Expenditure for the year 1963–64.

I have also to inform the House that from 18th January 1964 the House will meet at 8-30 a.m. instead of at 2-30 p.m.

(2) PANEL OF CHAIRMEN.

MR. SPEAKER : I have to announce to the House that under rule 14 (1) of the Madras Legislative Assembly Rules, I have nominated the following six Members of the Assembly to be the Panel of Chairmen for the present sitting of the Legislative Assembly :—

1. Srimathi C. Kolandaiammal.
2. Sri M. Dhandayuthapani.
3. Sri T. Karcha Gowder.
4. Sri V. Ramanathan.
5. Sri M. Kamalanathan.
6. Sri KR. RM. Kariamanickam Ambalam.

VII—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE ON RULES.

SRI P. RAMACHANDRAN : Sir, on behalf of the Chairman. I present the Report of the Committee on Rules to the House.

VIII—PRESENTATION OF THE SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1963–64

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I rise to present the Second Supplementary Estimates for 1963–64. A detailed statement of expenditure explaining the demands under different grants is placed on the table of the House. The total supplementary demand is for a sum of Rs. 26.89 crores, of which, however, only Rs. 4.74 crores will be on Revenue Account and

17th January 1964] [Sri M. Bhaktavatsalam]

Rs. 1·82 crores on Capital Account. The balance of Rs. 20·33 crores is on Loan Account and includes a sum of Rs. 9·8 crores towards repayment of Ways and Means advances taken from time to time from the Reserve Bank of India in the current year. In the Supplementary Estimates now presented to the Legislature, provision has been made for " New Service " schemes sanctioned by Government in the course of the year. We have also taken the opportunity to ask for additional appropriation under certain grants where under current indications the expenditure is likely to exceed the Budget provision. The expenditure on schemes included in the State Plan has gathered considerable momentum and the outlay in the current year is now expected to be of the order of Rs. 68 crores as against Rs. 60 crores only as originally visualised. In particular, the implementation of power programmes, those relating to generation as well as transmission and distribution, has been considerably accelerated and the Supplementary Estimates provide for the grant of an additional loan of Rs. 8 crores to the State Electricity Board.

2. The Parambikulam-Aliyar Project has also got over its teething troubles and, in keeping with the current pace of execution of the scheme, an additional provision of Rs. 86 lakhs has been made in the Supplementary Estimates. We have also sanctioned the Chittar-Pattanamkal Scheme estimated to cost eventually about Rs. 7 crores, with a view to providing irrigation in the dry tracts of Tirunelveli and Kanyakumari districts, and suitable provision has been made in the Supplementary Estimates towards the expenditure anticipated in the current year in the initial stages of the project. Adequate provision has also been made for Gomukhi Nadhi Project and Manjalar Reservoir Scheme in the Supplementary Estimates. Taking advantage of the additional assistance offered by the Central Government, we have also enlarged our Minor Irrigation programmes for the year. Hon'ble Members of the House will be interested in the details of the New Schemes furnished under Demand No. XLI.

3. The House is aware that the Government have taken up a programme of large-scale acquisition of lands through the Housing Board in the neighbourhood of big cities like Madras, Coimbatore, Madurai and Tiruchirappalli. We had originally provided for a loan of Rs. 70 lakhs to the Housing Board in the current year. As, however, we have received Rs. 145 lakhs in the current year from the Life Insurance Corporation of India as loan for this and other housing schemes, the Government propose to sanction an additional loan of Rs. 80 lakhs to the State Housing Board in the current year. This sum has also been included in the Supplementary Estimates.

4. In order to hold in check prices of essential commodities, the Government approved last year a programme for establishment of a network of Consumer Co-operatives. Such societies have already been organised in urban centres with a population of more

than 1 lakh each. The Government have now decided to extend the programme to 19 more towns, each with a population of 50,000 to 1,00,000. Under this scheme, financial assistance will be given to wholesale and primary stores towards share capital and working capital and also for construction of godowns. The Government will also subsidise the managerial expenses. A provision of Rs. 82 lakhs has been made for this scheme in the Supplementary Estimates. This is a Centrally Sponsored Scheme and the entire expenditure will be covered by loans and grants from the Centre.

5. As Honourable Members are aware, the achievement of the Third Plan targets under Food Production depends largely on the increased application of fertilisers. With a view to encouraging the farmers in this direction, loans are being given liberally to cultivators for purchase of chemical fertilisers for not only paddy crop but also for commercial crops like cotton, oilseeds, coconut, etc. An additional provision of Rs. 56 lakhs has been made in this regard.

6. Of the additional appropriation now sought under Revenue Account, the requirement under Community Development Projects alone is of the order of about Rs. 82 lakhs. The Government of India have sponsored a scheme for utilisation of man-power in rural areas. This scheme seeks to harness the labour in rural areas which remains unemployed during the off-season for productive employment on works of common utility such as laying of roads, deepening of ponds, etc. The entire cost of this scheme is met by the Government of India in the form of loans and grants. This programme has already been taken up in thirty-five blocks in this State and a provision of Rs. 33 lakhs has been sought in the Supplementary Estimates for covering the anticipated expenditure on this scheme. The programme of Village Industries entrusted to the Panchayat Unions has also made appreciable progress necessitating an additional provision of Rs. 15 lakhs. The Panchayat Unions and Panchayats have also been evincing keen interest in mobilisation of resources for their programmes. Most of the Panchayat Unions have taken the opportunity to levy a surcharge on Entertainment Tax. There has therefore been an increase in revenue under this head. All bulk of the collections are passed on to the local bodies, an additional provision of Rs. 84 lakhs is now made in the Supplementary Estimates over and above the Budget provision of Rs. 236 lakhs. The collection of house tax by Panchayats has registered appreciable improvement and the Government are accordingly obliged to seek an additional provision of Fs. 27·25 lakhs in the Supplementary Estimates towards payment of House Tax Matching Grants to the Panchayat Unions.

7. During the last three years we have started a large number of high schools in rural areas and we have taken up the question of provision of suitable buildings for these schools. The expendi

17th January 1964] [Sri M. Bhaktavatsalam]

ture involved in the programme is so large that it has obviously to be suitably phased. The Government have decided to make a beginning with the construction of buildings for the various erstwhile District Board schools. The Government will endeavour to make a provision of Rs. 25 lakhs every year for the scheme and this will be supplemented by public contributions. A sum of Rs. 10 lakhs has been made in the Supplementary Estimates towards the expenditure anticipated in the current year.

8. The other schemes included in the Supplementary Estimates do not call for any special comments. With these remarks, I commend the Supplementary Estimates for the acceptance of this House.

IX—GOVERNMENT BILL.

THE MOTOR VEHICLES (MADRAS AMENDMENT) BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir. I beg leave to introduce the Motor Vehicles (Madras Amendment) Bill, 1964.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Motor Vehicles (Madras Amendment) Bill, 1964."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

X—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

SRI K. B. PALANI : Mr. Speaker, Sir I move—

'That an Address be presented to the Governor in the following terms :—

"That the Members of the Madras Legislative Assembly assembled in this session are deeply grateful to the Governor for the Address which he has been pleased to deliver to both the Houses of the Legislature assembled together on the 16th January 1964."

மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, பெருமதிப்பிற்குரிய கவர்னர் பெருமான் ஆற்றியுள்ள உரையை வரவேற்று, ஆதரித்து, நன்றி செலுத்தும் முகத்தான், ஒருசில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்பு வைக்க நான் ஆசைப்படுகிறேன்.

மதிப்பிற்குரிய கவர்னர் பெருமான் அவர்கள், சீன ஆக்கிரமிப்புக்குப் பிறகு, நமது நாட்டு மக்கள் அத்தனை பேரும் தங்களுடைய தியாக உணர்ச்சியை, தங்களுடைய தேசப் பற்றினை எடுத்துக்காட்டிய காரணத்தால், உலக அரங்கில் இந்திய நாடு

தனியானதொரு இடத்தை வகித்திருக்கிறது என்ற கருத்தோடு தன்னுடைய உரையைத் துவங்கியிருக்கிறார்கள். சீன ஆக்கிரமிப்பின் காரணமாக, நாட்டு மக்கள் அத்துணை பேரும் நல்ல நாட்டுப் பற்று, நல்ல வீர உணர்ச்சி கொண்டவர்கள் என்ற உண்மையை உலகத்திற்கு நிரூபித்தார்கள்.

அதையடுத்து ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. நாட்டிலே இருக்கக் கூடிய தேசியத் தலைவர்கள் அத்துணை பேரும் நாட்டு மக்களுடைய நல்வாழ்வில் நாட்டம் செலுத்துவார்கள். தங்களுடைய பதவியைச் சாதாரணமாக, எளிதாகத் துறக்கக்கூடிய அளவிற்குத் தியாகச் சிந்தனை உள்ளவர்கள் என்ற ஒரு உண்மையை உலகத்திற்கு நமது மதிப்பிற்குரிய தலைவர் திரு. காமராஜ் அவர்கள் எடுத்துக்காட்டியது உலக அரசியல் சிந்தனையாளர்களின் கவனத்தைத் தமிழகத்தின்பால் ஈர்க்கும் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த ஒப்பற்ற தலைவருக்கு நன்றியுரையாக நமது கவர்னர் பெருமான் நல்ல சில கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தன்னுடைய ராஜீனாமாத் திட்டத்தின் வாயிலாக தலைவர் காமராஜ் அவர்கள் இன்று உலகப் பெரியோர்களில் ஒருவராகப் போற்றப்படுகின்றார், புகழப்படுகின்றார் என்று சொன்னால் அது மிகையாகாது. அகில உலக அரசியல் சிந்தனையாளர்களால் திரு. காமராஜர் அவர்களுடைய திட்டம் 'கே. ப்ளான்' என்று அழைக்கப்படுகிறது. இதுகாறும் இரண்டு பெரியோர்களுடைய திட்டம் 'கே. ப்ளான்' என்று அழைக்கப்பட்டது. அமெரிக்க நாட்டின் காலஞ்சென்ற அதிபர் கென்னடி அவர்கள் உலக மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் 'கே. ப்ளான்' என்று அழைக்கப்பட்டது. இரண்டாவதாக ருஷ்ய நாட்டு அதிபர் குருஷ்சேவ் அவர்கள் உலக மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் 'கே. ப்ளான்' என்று அழைக்கப்படுகிறது. மூன்றாவதாக, நம்முடைய தமிழ் குடிமகன், நம்மோடு பிறந்து, நம்மோடு வாழ்கின்ற ஒப்பற்ற தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய திட்டம் அகில உலக அரசியல் அரங்கில் 'கே. ப்ளான்' என்று அழைக்கப்படுகிறது என்று சொன்னால், திரு. கென்னடி அவர்களுடைய திட்டத்தோடு, திரு. குருஷ்சேவ் அவர்களுடைய திட்டத்தோடு, தலைவர் காமராஜ் அவர்களுடைய திட்டம் அழைக்கப்படுகிறது. இந்த ஒப்பற்ற திட்டத்தை உலகத்திற்கு அளித்த தலைவர் காமராஜ் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் ஆற்றியுள்ள அரும் பணிகள், செய்துள்ள சாதனைகள் ஆகியவை குறித்து இந்த மாமன்றத்தில் இருக்கும் நாம் நன்றிசெலுத்த வேண்டும் என்ற கருத்தை கவர்னர் பெருமான் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கடந்த எட்டு ஆண்டுக் காலமாக இந்த மாநிலத்தின் முதல் அமைச்சர் பதவியை ஏற்றிருந்த நம்முடைய தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய நிர்வாகத் திறமை காரணமாக, அவருடைய ஒப்பற்ற ஆற்றல் காரணமாக, எகிப்து நாட்டுத் தலைவர் நாசர் முதல் எடின்பரோ கோமகன் வரை, தமிழகத்தை, குறிப்பாக காமராஜ் அவர்களுடைய அமைச்சரவையைப் போற்றக்கூடிய அளவிற்கு, புகழக்கூடிய அளவிற்குப்

17th January 1964] [திரு. கே. பி. பழனி]

பெருமையைத் தேடித்தந்த பெருமை நமது ஒப்பற்ற தலைவர் திரு. காமராஜ் அவர்களையே சாரும். அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் நம்முடைய மாநிலம் பல்வேறு துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றம், வளர்ச்சி இன்னது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் அதைத் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 4-00 p.m.

மேலும் நம்முடைய நாட்டில் திட்டமிட்ட பொருளாதாரம் எந்த வகையில் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது என்பதை குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுவரையில் சர்வாதிகார நாடுகளில் தான் திட்டமிட்ட பொருளாதாரம் வெற்றி பெற முடியும் என்ற கருத்து அகில உலக அரங்கில் இருந்து வந்தது. ஜனநாயக நாட்டிலும் கூட திட்டமிட்ட பொருளாதாரம் வெற்றி பெற முடியும் என்ற சித்தாந்தத்தை, தத்துவத்தை உலகத்திற்கே எடுத்துக் காட்டியுள்ள பெருமை நமது இந்திய நாட்டுக்கே சாரும். இதை நம்முடைய முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகியவை சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்களை எடுத்துப் பார்த்தாலே நன்கு விளங்கும். நம்முடைய முதலாவது ஐந்தாண்டு திட்டம் முடிவடைந்தபோது நம்முடைய நாஷனல் இன்கம் என்று சொல்லக்கூடிய தேசிய வருமானம் 13 சதவிகிதம் உயர்ந்ததாகப் பொருளாதார மேதைகள் ஏற்றுக் கொள்கிறார்கள். இரண்டாவது ஐந்தாடுத் திட்டத்தின் அடிப்படையில் தேசிய வருமானமானது 29 சதவிகிதம் உயர்ந்ததாகப் பொருளாதார வல்லுநர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் வெற்றிகரமாக முடிந்துவிட்டால் தேசிய வருமானமானது 42 சதவிகிதமாக உயரும் என்று நம்பப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் பொருளாதாரத் துறையில் இந்திய நாடு எவ்வாறு இருக்கும் என்பதை எழுதுகின்ற பேராசிரியர் ரஸ்டோ 'After the Fourth Plan the Problem of India would not be the Problem of Poverty but of Plentty' என்று எழுதினார். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்படுமாயின் இந்திய நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை ஏழ்மையின் அடிப்படையில் உள்ள பிரச்சினையாக இருக்காது. பஞ்சத்தின் அடிப்படையில் உள்ள பிரச்சினையாக இருக்காது. இல்லாமையின் அடிப்படையில் உள்ள பிரச்சினையாக இருக்காது. அதற்குமாறாக திட்டத்தின் அடிப்படையில் ஏற்பட்ட வளத்தின் பிரச்சினையாக இருக்கும் என்று பேராசிரியர் ரஸ்டோ எழுதியிருக்கிறார். இந்த அளவுக்கு அகில இந்திய ரீதியில் திட்டமிட்ட பொருளாதாரத்தை வகுத்து, அதன் அடிப்படையில் முன்னேற்றப் பாதையில் பல திட்டங்களை வகுத்து செயலாற்றும் நேரத்தில் இந்திய நாட்டிலேயே சென்னை மாநிலம் மிகுந்த ஊக்கத்தோடு செயல்பட்டு வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நம்து மாநிலத்திற்கு என்று 291 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட போதிலும் இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் அது ரூ. 325 கோடியாக அதிகரிக்கும்

[திரு. கே. பி. பழனி] [17th January 1964

என்று நம்பத்தக்க முறையில் நாட்டின் முன்னேற்றம் இருக்கிறது என்று கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள பலதரப்பட்ட மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில்—திட்டத்திற்காக தங்கள் தங்கள் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை பூராவையும் கூடச் செலவு செய்து கொள்வதற்குத் தக்க வகையில் செயல்படாமல் அந்தத் தொகை லாப்ஸ் ஆகப்போகும்படி பல மாநிலங்கள் இருக்க, நமது மாநிலம் ஒதுக்கப்பட்ட தொகைக்கும் மேலாகவே வாங்கிக் கொள்ளும்படி மிகத் திறமையாகச் செயலாற்றி வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அடுத்தபடியாக இன்று நாட்டில் இருக்கக்கூடிய இன்றியமையாத பிரச்சினை விலை உயர்வு ஆகும். இதைப்பற்றி கவர்னர் பெருமான் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"பெருகி வரும் ஜனத்தொகை, வளர்ந்துவரும் பண வருவாய், நீண்ட காலத்திற்குப் பிறகே பயன்தரக்கூடிய கனரகத் தொழில்களில் செய்யும் பெருமளவு முதலீடு இவை அனைத்தும் பொருள்களின் விலை வாசிகளை ஓரளவு பாதிக்கலாம் என்பதை நாம் எப்போதும் கருத்தில் கொண்டுள்ளோம்" என்பதை அவர்களே தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் விலைவாசியைக் குறைப்பதற்கான வழிவகைகளைச் சிந்திப்பதோடு இருபதாம் நூற்றாண்டில் இன்றைய சூழ்நிலையில் திட்டமிட்டு முன்னேறிக் கொண்டிருக்கிற நிலையில் விலைவாசி உயர்வு என்பது தவிர்க்க முடியாத, இன்றியமையாத ஒன்று என்பதைக் கொள்ள வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் உலகக் கணக்கீடுகளைப் பார்க்கும் நேரத்தில் பல்வேறு நாடுகளிலும் இந்த விலை உயர்வுப் பிரச்சினை இருப்பதாகத்தான் புள்ளிவிவரம் குறிப்பிடுகிறது. ஜப்பான் நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட விலைவாசி உயர்வானது 33 சதவிகிதம் ஆகும். மேற்கு ஜெர்மன் நாட்டில் 25 பிரிட்டன் நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட விலைவாசி உயர்வானது 33 சதவிகிதம் ஆகும். மேற்கு ஜர்மன் நாட்டில் 25 சத விகிதமாக இருக்கிறது. அமெரிக்க நாட்டில் 16 சதவிகிதமாக இருக்கிறது. அதேநேரத்தில் இங்கே பார்த்தால் 12 சதவிகிதமாகத்தான் இருக்கிறது. மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது நம்முடைய நாட்டில் விலைவாசி உயர்வு குறைந்துதான் இருக்கிறது என்பதையும் சிந்தனையில் கொள்ளவேண்டும்.

அதேநேரத்தில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு நம்முடைய அரசாங்கம் பலதரப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் கூட்டுறவு மளிகைக் கடைகளைப் பரவலாக ஏற்படுத்தி வருவதையும், கூடுதலாக நியாயவிலைக் கடைகளைத் திறக்க உத்தரவு அளித்துள்ளது

17th January 1964] [திரு. கே. பி. பழனி]

பற்றியும் அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்வைக் கட்டுப் படுத்துவதற்கு அரசாங்கம் இதுபோன்று மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை கவர்னர் பெருமான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முயற்சியில் மேலும் வெற்றி காண்பதற்கு இந்த மாமன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்களாகிய நாம் நம்முடைய உதவியினை, ஒத்துழைப்பினை நல்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும்.

அடுத்தபடியாக விவசாய உற்பத்தியில் நம் சென்னை மாநிலம் இந்தியாவிலேயே முதன்மையான இடத்தை வகிக்கிறது என்பது புள்ளிவிவரங்களை உணர்ந்தவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகும். இருந்தபோதிலும் இன்னும் 30 சதவிகிதம் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது என்ற கருத்தை கவர்னர் பெருமான் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருக்கக்கூடிய உற்பத்தியை இன்னும் அதிகப்படுத்துவதற்கு, விவசாயத் துறையில் இன்னும் அதிக முன்னேற்றம் காண்பதற்கு ரசாயன உரத்தை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை விவசாயப் பெருங்குடி மக்கள் உணரும்படியாகச் செய்யவேண்டும் அந்தப் பணியை ஏற்றுக் கொள்வது, இந்த மாமன்றத்தைச் சேர்ந்த நம்முடைய கடமைகளில் ஒன்றாகும்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக தொழில் துறையில் நம்முடைய சென்னை மாநிலம் மிகத் துரிதமாக முன்னேறிக்கொண்டு வருகிறது என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்வோம். அதுவும் நாடு விடுதலை பெற்ற பிறகு இந்த ராஜ்யத்திலே அமைக்கப்பட்டுள்ள தொழில் நிறுவனங்கள் பலபல ஆகும். ரெயில் பெட்டித் தொழிற்சாலை, சேது சமுத்திரத் திட்டம், நெய்வேலித் திட்டம் ஆகியவை எல்லாம் இந்த ராஜ்யத்தில் வேலை வாய்ப்பினை அதிகரிக்கச் செய்திருக்கிறது. கனரகத் தொழில் வளர்ச்சி மட்டும் அல்ல, சிறு தொழில்கள் சம்பந்தப்பட்டவரை மிக அதிகமாக முன்னேறிக்கொண்டு இருக்கிறது. இதுவரை சிறு தொழில்கள் சம்பந்தப்பட்டவரை பஞ்சாப் தான் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது. சென்னை மாநிலம் இரண்டாவதாகத்தான் இருந்தது. ஆனால் கடந்த இரண்டாண்டு வளர்ச்சியின் காரணமாக —பஞ்சாபோடு ஒப்பிட்டு இப்போது சொல்லவேண்டுமென்று சொன்னால் சிறந்த பல பொருள்களை உற்பத்தி செய்கின்ற அளவில் பஞ்சாபையே மிஞ்சிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

அதேபோல மின்சாரத் துறையில் மூன்று பெரும் திட்டத்தினைத் தொடங்கினோம். நீலகிரிப் பகுதியில் குந்தா மின்சாரத் திட்டத்தினையும், மதுரை மாவட்டப் பகுதியில் பெரியாறு திட்டத்தினையும், சென்னையில் பேசின் பிரிட்ஜ் அனல் மின்சாரத் திட்டத்தினையும் ஏற்படுத்தினோம். இப்படி இத்துறையில் 250 கோடி ரூபாய்களை செலவு செய்த காரணத்தினால் இந்தியாவிலேயே மின்சாரத் துறையில் நமது சென்னை மாநிலம் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது. அரசாங்கக் கணக்குப்படியே 1951-ம் ஆண்டு தமிழ்நாட்டில் 1,200 கிராமங்களுக்கு மின்சாரம்

[திரு. கே. பி. பழனி] [17th January 1964

விஸ்தரிக்கப்பட்டிருந்தது என்றால் 1963-ம் வருஷக் கணக்குப் பிரகாரம் தமிழ்நாட்டில் மட்டும் 15 ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொன்னால் இந்தியாவிலேயே மொத்தம் 29 ஆயிரம் கிராமங்களில்தான் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் தமிழகத்தில் மட்டும் 50 சதவிகிதம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது, அதாவது 15 ஆயிரம் கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி மின்சாரத் துறையில் முன்னணியில் இருக்கக்கூடிய சென்னை மாநிலம் இன்னும் அதிக கிராமங்களுக்கு விஸ்தரிக்கவேண்டுமென்று நூறு கோடி ரூபாய் ஒதுக்கியிருந்த போதிலும் அது 111 கோடியாக உயரக்கூடிய அளவிற்கு வேலைகள் நடைபெற்று வருகின்றன என்று கவர்னர் பெருமான் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக விவசாயத்திற்கு மிகவும் இன்றியமையாதது நீர்ப்பாசனம். நீர்ப்பாசனத் துறையிலும் நமது சென்னை மாநிலம் இந்தியாவிலேயே ஒரு குறிப்பிட்ட இடத்தை வகிக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக நம்மை ஆட்சி புரிந்து வந்த ஆங்கிலேயர்கள் நமக்கு விட்டுச்சென்ற நீர்த்தேக்கம் ஒன்றே ஒன்றுதான். அது தான் மேட்டூர் நீர்த்தேக்கம் ஆகும். நாடு விடுதலை அடைந்த பிறகு அதாவது கடந்த 16 ஆண்டுகளில் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆரணியாறு திட்டம், தென்னாற்காடு மாவட்டத்தில் வீடூர் திட்டம், வடாற்காடு மாவட்டத்தில் சாத்தனூர் திட்டம், கோவை மாவட்டத்தில் கீழ்பவானி திட்டம், சேலம் மாவட்டத்தில் கிருஷ்ணகிரி திட்டம், மதுரை மாவட்டத்தில் வைகைத் திட்டம், நெல்லை மாவட்டத்தில் மணிமுத்தாறு திட்டம். கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யாறு திட்டம், தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் புதுக்கட்டளைக்கால்வாய் திட்டம், புள்ளம்பாடி திட்டம் என்பதாக எங்கெங்கு ஆறுகள் ஓடுகின்றனவோ அங்கெல்லாம் ஒவ்வொரு அணையைக் கட்டி நீர்ப்பாசனத் துறையில் இந்தியாவிலேயே முன்னனியில் இருப்பது நமது சென்னை மாநிலமாகும்.

அதேபோல நம்முடைய அரசாங்கம் 'வெல்பேர் ஸ்டேட்' என்று சொல்லக்கூடிய க்ஷேமநல அரசாங்கமாகும். முதியோர் பென்ஷன், இலவசக்கல்வி, மதிய உணவுத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை வகுத்ததோடு தொழிலாளர்களும் சுபிட்சமாக வாழவேண்டுமென்பதற்காக தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் திட்டம் என்ற வகையில் பலவகையான திட்டங்களைத் தீட்டி காந்தியடிகள் கண்ட கனவை நனவாக்கிக் கொண்டு வருகிறார்கள். நம்முடைய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே, மக்களுடைய உரிமைகளைக் காக்கக்கூடிய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய, அவமதிப்புக் காண்பிக்கக்கூடிய செயலில் எவர் ஈடுபட்டாலும் அது அனுமதிக்க முடியாத ஒன்று என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து இன்று நாட்டிலே இருக்கக்கூடிய இன்றியமையாத பிரச்சினைகள் அத்துணையையும்

17th January 1964] [திரு. கே. பி. பழனி]

கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருப்பதை வரவேற்று ஆதரித்து நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. ஆறுமுகம்** : மதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே, சக அங்கத்தினர் கனம் பழனி அவர்கள் பிரேரேபித்த கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மதிப்புக்குரிய கவர்னர் அவர்கள், நம்முடைய நாட்டிலே ஓராண்டுக்கு முன்னால் இருந்த பிரச்சினையையும், இன்று இந்த நாட்டில் இருந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளையும் ஒன்றாகத் திரட்டி, அதுபற்றித் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சைனாகாரனுடைய ஆக்கிரமிப்பினால் நம்முடைய நாட்டுக்கு ஏற்பட்ட தொந்தரவுகளையும், அதனால் திட்டங்கள் நிறைவேற முடியாமற் போனது பற்றியும் கடந்த ஆண்டு எடுத்துக் கூறினார்கள். இன்று நம்முடைய நாட்டிலே எந்த அளவிற்குத் திட்டங்கள் நம்முடைய சர்க்காரின் மூலமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது, அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது என்பதைப் பற்றி இந்த ஆண்டு தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே எதிர்க்கட்சிக்காரர்கள் சுலபமாக ஒரு ஆயுதத்தைத் தூக்கிக் கொண்டுவிடுவார்கள். அதுதான் விலைவாசி ஏற்றம் பற்றியது. அதைப் பற்றி நம்முடைய கவர்னர் பெருமான் அவர்கள் ஒரு முக்கிய பிரச்சினையாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். விலைவாசி ஏற்றம் எப்படி ஏற்படுகிறது, அதைத் தீர்ப்பதற்கு நம்முடைய சர்க்கார் என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பது பற்றியெல்லாம் கவர்னர் பெருமான் கூறியிருக்கிறார். கிராமப்புறங்களில்கூட கூட்டுறவு சொசைடிகள் மூலம் அத்தியாவசியமான பண்டங்களைக் குறைந்த விலைக்குக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார். இதனால் கிராமங்களிலுள்ள ஏழை மக்களுடைய தொல்லைகள் பெருமளவில் தீர்க்கப்படும். நம்முடைய நாடு விவசாய நாடு. விவசாய அபிவிருத்திக்காக நம்முடைய சர்க்கார் பல வசதிகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்திருப்பதன் காரணமாக விவசாயத் துறையிலே முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று பெரிய ஆறுகளில் எல்லாம் அணைகளைச் கட்டி அதன் மூலம் ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கான வழியினைச் செய்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் ரசாயன உரத்தை விவசாயிகளுக்குக் குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்து அதன் மூலம் உற்பத்தி பெருக வழி செய்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத் துறையிலே, சிறு பாசனங்களைப் பொறுத்தவரையில், ஆறுகள், ஓடைகள், ஏரிகள் ஆகியவற்றை நல்ல முறையிலே சீர்படுத்தி அதன் மூலம் விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுப்பதற்கான பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்காகவே தற்போது ஜில்லாதோறும் ஒவ்வொரு பகுதியிலும்

[திரு. ஏ. ஆறுமுகம்] [17th January 1964

'பிளானிங் & இரிகேஷன்' என்ற திட்டத்தின்கீழ் இன்ஜீனியர்கள் பல காரியங்களைச் செய்துகொண்டு வருகின்றார்கள். அதே போன்று நம்முடைய மக்கள் பொருளாதாரத் துறையிலே முன்னேற்றம் அடைய, கல்வித் துறையிலே முன்னேற்றம் அடைய, தொழிற்துறையிலே முன்னேற்றம் அடைய, மக்களாக வாழ்வதற்கு வேண்டிய எல்லாச் சவுகரியங்களையும் சர்க்கார் செய்து கொண்டு வருகிறார்கள். குறிப்பாக ஏழைக் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிக்க வசதி செய்யும் வகையில் பள்ளியில் மதிய உணவுத் திட்டத்திற்கு சர்க்கார் பெருமளவில் செலவு செய்கிறார்கள். நம்முடைய மதிப்புக்குரிய கனம் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது முதியோர் பென்ஷன் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தின்படி இன்று 62,000 பேருக்கு முதியோர் பென்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை மற்ற மாகாணங்களிலும் கொண்டுவரவேண்டுமென்பதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆண்டு வருமானம் 1,500 ரூபாய்க்குக் கீழே இருப்பவர்களுடைய பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி உயர்நிலைப்பள்ளிப் படிப்புவரை கொடுக்கப்படுகிறது. தற்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள், எல்லோருக்குமே இலவசக் கல்வி உயர்நிலைப் பள்ளிப் படிப்பு வரை கொண்டுவரவேண்டுமென்றும் எதிர்காலத்தில் கல்லூரிப் படிப்புகூட இலவசமாகச் செய்யவேண்டுமென்றும் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, பெண்களுக்குக் கல்லூரிப் படிப்பு வரையில் இலவசமாக அளிக்கவேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய காலத்திலேயே இத்தகைய நல்ல சலுகைகளையெல்லாம் நம்முடைய மக்களுக்கு அளிப்பதற்கு அவர் முன்வரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, நம்முடைய கவர்னர் பெருமான் அவர்கள் அரசியல் சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டிருக்கிற உரிமைகளைப்பற்றி எடுத்துக் கூறி, அந்த உரிமைகளைப் பயன்படுத்தி அரசியல் சட்டத்தையே அவமதிக்கக்கூடிய போராட்டங்களை யார் நடத்தினாலும் அதை அனுமதிக்க முடியாது என்பதை மிகவும் ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்று நம்முடைய நாட்டிலே மொழிப் பிரச்சினையை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சிக்காரர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அமைதியான நம்முடைய நாட்டிலே, குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தி வேண்டாம் என்று கூறி பள்ளி மாணவர்களையும், கல்லூரி மாணவர்களையும் தூண்டிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்கும் முறையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுகிறவர்களுக்குக் கடுமையான தண்டனையை விதிக்க வேண்டும். வெளியிலே இருப்பதைவிட ஜெயிலிலே இருப்பது நல்லது என்று இப்போது நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குத் தண்டனை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் எப்படி முக்கியமோ, ஆங்கிலம் எப்படி முக்கியமோ அதே போன்று இந்தியும் முக்கியம் என்பதை நம்மு

டைய மாணவர்கள் உணரக்கூடிய அளவுக்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மதிப்புக்குரிய கனம் பழனி அவர்களுடைய பிரேரணையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை என் அருமை நண்பர் திரு. பழனி அவர்கள் கொண்டுவந்து பேசினார்கள். அவர்கள் கொடுத்த தீர்மானத்தை நான் ஆதரிக்க முடியாமல் இருக்கிற நிலையை மட்டும் நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். நண்பர் திரு. பழனி அவர்கள் பேசும்போது, கவர்னர் அவர்கள் உரையில் இல்லாததெல்லாம் இருப்பது போலவும், ஒரு பெரிய நல்ல காலத்தை கவர்னர் அவர்கள் காட்டிவிட்டது போலவும் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அதேபோல் நமது முன்னாள் முதல் அமைச்சராக இருந்த் எங்கள் மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களைப் பற்றி தனக்கிருக்கிற பூஜா மனோபாவத்தை காட்டிக் கொள்கிற முறையில் மிகவும் உயர்த்திச் சொன்னார்கள். நான் அதை மறுக்கவில்லை. கென்னடி பற்றியும், குருஷ்சேவ் பற்றியும் கூறி அவர்களைப் போன்ற பெரியவர் அவர் என்று சொன்னார்கள். நாங்கள் அந்த வாதத்தை மறுக்கவோ அதில் ஈடுபடவோ தயாராயில்லை. முதல் அமைச்சராக இருந்தவர் நாட்டிற்கு நல்லது செய்திருக்கிறார்கள் என்றால் சந்தர்ப்பம் நிறைய இருந்தது. ஏற்கனவே கூடிய சட்டசபைக் கூட்டத்தில் நம் மதிப்பிற்குரிய அமைச்சர்கள் ஒன்று சேர்ந்து ஒரு நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை இங்கு கொண்டு வந்திருந்தால் எங்களால் ஓரளவு அதை ஆதரிக்கக்கூட முடிந்திருக்கும். அதல்லாது "பார்மாலிட்டிக்காக" முதல் அமைச்சர் அவர்களை திருப்திபடுத்த வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக அல்லது காமராஜ் கோபித்துக் கொள்வார் என்று கவர்னர் அவர்கள் வாய் மூலம் அவரைத் திருப்திப் படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடோ தெரியவில்லை கவர்னர் உரையில் அவரைப் பற்றி ஒரு பாராவிற்கு புகழ்ந்திருக்கிறார்கள். என்ன காரணத்தினால் அவர் ராஜிநாமா செய்தார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. இன்ன காரணம் என்று இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. பெரிய தியாகம் செய்ததுபோல் கனம் அங்கத்தினர் பழனி அவர்கள் இங்கு சொன்னார்கள். அவர் கட்சிக்குள் இருக்கும் கோளாறு எங்களுக்குத் தெரியாது. ஆனால் திரு. எஸ். கே. பாட்டீல் அவர்கள் பைக்குள் உள்ள பூனையை வெளியே எடுத்து விட்டார்கள். ஏன் ராஜிநாமா செய்தார் தெரியுமா ? திருவண்ணாமலைத் தேர்தலுக்காக இரவு பகலாக 15, 17 நாட்கள் வேலை செய்தார். திராவிட முன்னேற்றக் கழகமா, காங்கிரஸா என்ற நிலை இருந்தது. காங்கிரஸ் தோல்வி கண்டு திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி கண்டது. அதனால் தான் காமராஜ் அவர்கள் பதவியில் இருந்து விலகியிருக்கிறார் என்று பாட்டீல் அவர்கள் சொன்னார்கள். பாட்டீல் அவர்கள் சொன்னது உண்மையோ அல்லவோ எனக்குத் தெரியாது, கனம் சபாநாயகர் அவர்களே, அப்பிரச்னையை அதோடு விட்டுவிடுகிறேன். அது சாதாரணப் பிரச்னைதான். காமராஜ் அவர்கள் மட்டும்தான்

ஏற்றுக் கொள்ள முடியாது. என் எதிரில் அமர்ந்திருக்கும் மதியூக மந்திரிகள் எல்லோரும் சேர்ந்துதான் காரியங்களை செய்தார்கள். இங்கிருக்கும் மந்திரிகளுக்கு அவரைவிட குறைவான திறமை இருப்பதாக நான் சொல்ல மாட்டேன், அதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவரைவிட திறமை உள்ளவர் இன்று முதல் அமைச்சராக வந்திருக்கிறார்களென்று நான் சந்தோஷமாக சொல்கிறேன். ஏற்கனவே இருந்தவரைப்பற்றி நான் குறை கூறுவதாக யாரும் நினைக்க வேண்டாம்.

கவர்னர் அவர்கள் உரையில் கூறப்பட்டிருக்கிறது :—

"A significant part of the increase is due to the inclusion of new schemes and the widening scope of some of the old schemes. The administrative machinery is now fully geared to the fulfilment of the bigger plan and the limits on our performance will be set largely by our ability to raise additional resources."

என்று. என்ன வரி போடப்போகிறார்களோ என்று மக்களிடையே பயம் ஏற்பட்டிருக்கிறது. ஜனவரி பிறந்தாலே ஒரு பீதிதான். முதல் அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு சொன்னார்கள், நான் அடுத்த தடவை நிதி அமைச்சராக இருந்தால் அதிக வரி போடுவேன் என்று. அதை மெய்ப்பிக்கும் வகையில் தான் இப்படிப் போட்டிருக்கிறார்களோ என்று தெரியவில்லை. வரிகள் பெப்ரவரியில் வருமா, மார்ச்சில் வருமா என்று மக்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். என்னென்ன வரிகள் வருமோ, என்னென்ன வேதனைகள் ஏழைமக்கள் தலையில் விழுமோ என்று மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள். நாலாவது ப்ளானைப் பற்றிக் கூறும்போது,

"We have also initiated action for the preparation of the Fourth Plan, and Working Groups have been constituted at official level for the preparation of detailed programmes."

திட்டங்களை நிறைவேற்ற, திட்டச் செலவு அதிகரித்திருப்பதால் ஏற்படுகிற செலவிற்கு என்ன செய்யப் போகிறார்களோ? தமிழகத்தைப் பொறுத்த வரையில் என்னென்னவற்றிற்கு வரி போட வேண்டுமோ அவை எல்லாவற்றிற்கும் போட்டாகிவிட்டது என்று பைனன்ஸ் கமிஷனுக்கு கொடுத்த ரிப்போர்ட்டில் அரசாங்கமே ஒப்புக் கொண்டிருக்கிறது. எல்லா வரிகளையும் போட்டாகி விட்டது, இனி எந்த வரியை போடப் போகிறீர்கள்? அடிஷனல் ரிசோர்ஸஸ்-யை எப்படி காணப் போகிறீர்கள் என்பதுபற்றி அறிக்கையில் ஒன்றுமே காணப்படவில்லை.

"Apart from outlays on power, the expenditure on plan schemes in the State sector whether on capital or revenue account relates mostly to schemes which do not bring in any appreciable direct return.

திட்டங்களை நிறைவேற்ற மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் ஒன்று சேர்ந்து, இரு சர்க்கார்களின் ஒத்துழைப்பின் பேரில்தான் செய்யவேண்டும். இங்கு ஏற்கனவே செலவிடப்பட்ட தொகை வருமானம் வருகிற அளவில் இல்லை.

17th January 1964] *[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]*

After meeting the committed expenditure the contribution of the state to the resources of the Fourth plan will be practically negligible.

என்று கூறப்பட்டிருக்கிறது. வருமானம் வருகிற வழிகள் கிடையாது. போடக்கூடிய வரிகள் எல்லாம் போட்டாகி விட்டது. ஆகவே இனிமேல் உள்ள திட்டங்களை நிறைவேற்ற, குறைபாடுகளை நிவர்த்திக்க, இந்த ரிசோர்ஸஸ்க்காக மத்திய அரசாங்கத்தோடு போராட வேண்டும்.

This development has serious implications of policy. While formulating the Fourth plan it may be necessary to give thought to the financial relationship between the centre and the states and devise arrangements by which a very large part of the resources is provided for fulfilment of plan in the sectors allocated to states, by devolution of resources rather than as grants and loans released annualy so that the initiative of the States is not cramped.

என்று சொல்லியிருக்கிறார்கள். அத்தைரியத்தை நாங்கள் வரவேற்கிறோம். "டிவிஸிபிள் பூலிலிருந்து" நியாயமான பங்கை, திட்டத்தை நிறைவேற்றுவதற்குள்ள பங்கை நாம் போராடிப் பெற வேண்டும். அதற்கான சீரிய முயற்சியில் ஈடுபடவேண்டும். அதுபற்றி கவர்னர் அவர்கள் உரையில் ஒன்றும் காணவில்லை. அது எங்களுக்கு வருத்தம் தருவதாக இருக்கிறது. அடுத்து, விலைவாசிப் பிரச்னை பற்றி ஒரு வார்த்தை. காலமெல்லாம் உழைக்கிறார்கள் விவசாயிகள். சுதந்திரம் வருவதற்கு முன்னர் அவர்கள் எப்படி பாடுபட்டார்களோ அதை விட குறைந்த அளவில் இப்போது பாடுபடவில்லை. சுதந்திரம் வருவதற்கு முன்னர் களரி நிலங்களாக இருந்தவைகளில் இப்போது பயிராகிறது. முன்பு ஒரு போகம் பயிர் செய்த நிலங்களில் இன்று 2, 3 போகம் பயிராகிக் கொண்டிருக்கிறது. ஆக உற்பத்தி பெருகியும்கூட, திட்டங்கள் பல நிறைவேறினும்கூட இன்னும் ஏழைகள் ஏழைகளாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் பூர்த்தியாகி மூன்றாவது திட்டத்தில் இரண்டு ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் ஏழைகள் ஏழைகளாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். திட்டங்கள்மூலம் கிடைக்கும் வருமானம் எல்லாம் ஒரு சில பணக்காரர்களிடம்தான் போய் சேருகிறது. ஒரு சில கும்பலிடம்தான் போய்ச் சேருகிறது என்று மதிப்பிற்குரிய பிரதம மந்திரி பண்டித நேரு அவர்கள் கூறியிருக்கிறார்கள். எந்தெந்த திட்டங்கள் மூலம் அத்தகைய சேமிப்பு ஏற்பட்டிருக்கிறது, எந்தெந்த இடங்களில் வருமானம் பெருகியிருக்கிறது என்று பார்த்து அந்த இடங்களில் வரி போட்டு அவர்களிடம் இருந்து வாங்கவேண்டுமே தவிர ஏழைகளிடம் இருந்து இந்த வரிகளை வாங்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது இரும்புத் தொழிற்சாலைகளைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில் . . .

[17th January 1964

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் என்னென்ன வரிகளைப் போடலாம் என்று யோசனை சொன்னால் பட்ஜெட் தயாரிக்கின்ற நேரத்தில் அதைப்பற்றி யோசிக்க வசதியாக இருக்கும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: என் யோசனையை தெரிவிக்க கேட்டுக்கொண்டதற்காக நிதி அமைச்சரும், முதலமைச்சருமாக இருக்கின்ற கனம் முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வரிகளை எதற்கு போடவேண்டும் என்று சொன்னால், பஸ் கட்டணங்களை உயர்த்தாமல் பஸ்களுக்கு வரி போடுங்கள், அதேபோல் சினிமா கட்டணங்களை உயர்த்தாத அளவிற்கு சினிமாவிற்கு வரிகளை போடுங்கள் என்ற யோசனையை சொல்லுகிறேன். அமைச்சர் அவர்கள் நன்றாக இவற்றை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, நெய்வேலி கரியையும், சேலம் இரும்பையும் கொண்டு திட்டம் தயாரித்தார்கள். இதைப்பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் 9-வது பாராவில் . . .

"Investigations connected with the establishment of a steel plant based on Neyveli Lignite and Salem Iron Ore are progressing . . ."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. எத்தனை காலத்திற்குதான் 'பிராக்ரஸிங்' நிலையில் இருக்கிறது. இப்போது மட்டுமல்ல, கவர்னர் அவர்களுடைய கழிந்த உரையிலும், அதாவது 63-வது ஆண்டில் உரை நிகழ்த்தியபோது, அந்த உரையில் . . .

"The large-scale tests conducted on the production of iron and steel with Neyveli Lignite and Salem Iron Ore in East Germany and Norway have yielded successful results and have established the feasibility of the project. On the basis of the promissing results of these tests, the Government of India have decided to proceed with the preparation of the detailed Project Report for a half-million iron steel plant based on Neyveli Lignite and Salem Iron Ore. The preparation of the detailed Project Report has been entrusted by them to Messrs. Dastur and Company, a firm on Mettalurgical Engineers with experience of steel plant Design. Messrs. Dastur and company are expected to submit the detailed project Report to the Government of India by August-September this year."

இது கழிந்த வருடம் கூறியது. இந்த வருடம் நிலைமை என்னவென்றால் "இன்வெஸ்டிகேஷன் பிராக்ரஸிங்" என்றுதான் இப்போதும் சொல்லப்பட்டிருக்கிறது. எப்போதுதான் இந்த இன்வெஸ்டிகேஷன் முடிவு அடையும்? அல்லது 1967-வது ஆண்டுக்காக தள்ளி வைத்திருக்கிறார்களா? எலக்ஷன் நேரத்தில் இதைப்பற்றி சொல்லலாம் என்று நினைத்திருக்கிறார்களா, அல்லது செய்ய முடியவில்லை என்று சொல்வதை கொஞ்சம் கொஞ்சமாக மூடி மறைத்து வைத்து "ஷெல் அவுட்" பண்ணப் பார்க்கிறார்களா, என்ன என்பது தெரியவில்லை. அது மட்டுமல்ல "அட்டாமிக் பவர்" ஏற்படுத்துவதைப் பற்றியோ, "ஒகனேக்கல் பிராஜக்ட்"

17th January 1964] *[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]*

பற்றியோ இந்த கவர்னர் உரையில் ஒன்றும் சொல்லப்படவில்லை. இதைப்பற்றி மிக பெரிய அளவில் பேசப்பட்டு வந்தது. இப்போது எங்கேயிருக்கிறது, எந்த நிலையில் இருக்கிறது, என்பதைப்பற்றி ஒன்றும் தெரிவிக்கவில்லை. இதற்காக அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. மைசூர் அரசாங்கத்தோடு ஏதாவது பேச்சுவார்த்தை நடந்திருக்கிறதா ? ஏப்ரல் மாதம் மின்சாரத்தட்டுப்பாடு வருகின்ற நேரத்தில் மட்டும்தான் ஒகனேக்கல் திட்டம் பற்றி பேசப்படுகிறது. ஆனால் இதற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப் பற்றி கொஞ்சம்கூட இந்த கவர்னர் உரையில் காணப்படவில்லை.

கடைசியாக சில வார்த்தைகள் மட்டும் நான் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப்பற்றி குறிப்பிடுகின்ற முறையில் கவர்னர் அவர்களுடைய உரையில் சில வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டில் இந்தி மொழி கட்டாயமாக திணிக்கப்படுவதை எதிர்த்து இன்றையதினம் நாடு பூராவும், போராட்டத்தை நடத்தி வருகிறது. அரசியல் முறையில் இதை எதிர்த்தாக வேண்டும் என்ற எண்ணத்துடன் அரசியல் சட்டத்தில் இந்தியை கட்டாயமாக புகுத்தும் எண்ணத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதியை கொளுத்துவது என்ற போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறது. இதனால் ஏற்படுகின்ற பலாபலன்களையும், கஷ்டங்களையும், துன்பங்களையும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சிரமேற் தாங்கி போராட்டத்தில் ஈடுபடுவது என்று உறுதி கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் இப்போராட்டத்தைப்பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் . . .

"The Government on their part will continue to assure the freedom of expression and action for all sections of organised political opinion. But this freedom which is assured under our Constitution cannot obviously be sought for forms of agitation seek to show disrespect to that very Constitution."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'டிஸ்ரெஸ்பெக்ட்' என்றால் என்ன, அவமரியாதை செய்வது. அவ்விதம் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டிருக்கிறதா என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தியை கட்டாயமாக திணிக்கும் அரசியல் சட்டத்திலுள்ள ஷெட்யூலை மட்டும் கொளுத்தவேண்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் முடிவெடுத்திருக்கிறது. இந்த நாட்டுக்கு இந்தி மொழி தேவையில்லை, ஆங்கிலமும் இந்தியும் சேர்ந்திருக்கவேண்டும் என்று ஒருமுகமாக இந்த சபையிலுள்ள அங்கத்தினர்கள் அனைவரும் சேர்ந்து தீர்மானம் நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பினோம். அது மட்டுமல்ல, இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித நேரு அவர்கள் இந்தி மொழியைப்பற்றி அறிக்கை விடும்போது, "இந்தி பேசாத மக்களைக் கண்டு அவர்களுடைய விருப்பத்தைப் பெற்ற பிறகுதான் இந்தியை கொண்டு வருவோம்" என்று

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [17th January 1964

சொன்னார்கள். அவ்விதம் பண்டித நேரு அவர்கள் கூறினதை யார் காப்பாற்றினார்கள்? இந்தியை கொண்டு வந்தே தீருவோம் என்ற முறையில் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு இந்தச் சட்டசபையை கலந்து ஆலோசித்தார்களா? ஏதோ தங்களுக்கு "ரோட் ரோலர் மெஜாரிட்டி" இருக்கிறது என்ற காரணத்தினால் இந்தியை எந்த விதத்திலும் கொண்டு வருவது என்று மத்திய சர்க்கார் ஒரு சட்டத்தை கொண்டுவந்திருக்கிறார்கள். இது நீதி தானா என்று நாம் கேட்கக்கூடதா? நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றால் மிக சாதுரியமாக பேசுவார்கள், இது ஜனநாயக நாடு, இந்த நாட்டில் போராட்டத்திற்கு இடமில்லை, வேண்டுமென்றால் வோட்டர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய ஆதரவைப் பெற்று சட்டசபைக்கு வரட்டும், வந்து எவ்விதம் வேண்டுமென்றாலும் சட்டம் செய்யட்டும்" என்று எளிதாக சொல்லிவிடுவார்கள். இது முடிகின்ற காரியமா. (சிரிப்பு) . . . அமைச்சர்கள் வேண்டுமென்றால் இங்கு நகைக்கலாம், ஆனால் வெளியில் நாட்டுமக்கள் உங்களைப்பார்த்துத்தான் நகைக்கிறார்கள். ஒரு மொழி கட்டாயமாக திணிக்கப்படுவதை எதிர்த்துத் தான் திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டம் நடத்துகிறது. இதைப்பற்றி சர்க்காரில் இருக்கின்றவர்கள் சிந்திக்கவேண்டும். எங்களுக்கு எதையும் 'டிஸ்ரெஸ்பெக்ட்' செய்யவேண்டும் என்ற எண்ணம் இல்லை, ஆனால் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எதுவானாலும் கனம் அங்கத்தினர் அவர்கள் 'டிஸ்ரெஸ்பெக்ட்' செய்கின்றோம் என்று ஒத்துக்கொள்வதற்கு மகிழ்ச்சி.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: நான், டிஸ்ரெஸ்பெக்ட்' என்றகின்றோம் என்று சொல்லவில்லை. 'டிஸ்ரெஸ்பெக்ட்' என்ற வார்த்தையைப்பற்றித்தான் வியாக்கியானம் செய்து கொண்டிருக்கின்றேன். எங்களுடைய நோக்கம் அதாவது 'ஆப்ஜெக்ட்' இந்தி மொழி கட்டாயமாக திணிக்கப்படுவதை ஏற்படுத்துகின்ற அரசியல் சட்டப் பகுதியை கொளுத்துவது என்பது தான். இதில் அவமரியாதை எதுவும் கிடையாது. நாங்கள் எல்லாப் பகுதிகளையுமா கொளுத்தவேண்டும் என்று சொல்லுகிறோம், 'பண்டமெண்டல் ரைட்ஸ்' கொடுக்கின்ற பகுதியை கொளுத்துகின்றோமா, அல்லது வேறு பல விஷயங்களைப்பற்றி சொல்லியிருக்கின்ற பகுதிகளை கொளுத்தப் போகின்றோமா, கிடையவே கிடையாது. இந்தி கட்டாயமாக கொண்டுவரப்படவேண்டும் என்று சொல்லுகின்ற சட்டப் பகுதியை மட்டும் தான் கொளுத்தவேண்டும் என்று சொல்லுகின்றோம். இதில் எந்தவிதமான அவமரியாதையும் இல்லை என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். சாதாரணமாக எந்தக் குற்றத்தை செய்தாலும் அதற்கு ஒரு 'மோட்டிவ்' இருக்கவேண்டும். இதில் இருக்கின்ற மோட்டிவ் அவமரியாதை செய்யவேண்டும் என்பதல்ல. . .

17th January 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இவற்றையெல்லாம் கோர்ட்டில் விவாதிக்கவேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கோர்ட்டில் இவையெல்லாம் விவாதிக்கப்படும் என்றாலும், இந்த மன்றத்தில் நிறைவேறப் பட்ட . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது சம்பந்தமான பல வழக்குகள் கோர்ட்டில் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னால் இதைப் பற்றி இந்தவிதமாகத்தான் முடிவு எடுக்கவேண்டும் என்று சபை தீர்மானிக்க முடியாது, என்பதை தங்கள் கவனத்திற்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நான் சட்டத்தில் இருக்கின்ற சில பகுதிகளை மட்டும் எடுத்துக்கூற விரும்புகிறேன். . .

"Prevention of Insults to National Honour Act, 1957, Section 5—Whoever wilfully burns or desecrates or insults any copy or a copy of a part of the Constitution of India shall be punishable with imprisonment of either description for a term which may extend to three years or with fine or with both."

"Section 6—Whoever attempts to commit any offence punishable under this Act shall be deemed to have committed that offence".

என்று 5-வது ஷரத்தில் சொல்லியிருக்கிறார்கள். இதைத்தான் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன் . . .

MR. SPEAKER : The motive of the Hon. Member may be anything. But in his own interest, I request him not to proceed further and say that he is showing disrespect or anything like that.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஆகவே நாங்கள் நடத்திக் கொண்டிருக்கும் போராட்டத்தில் இந்திய அரசியல் சட்டத்தை அவமரியாதை செய்யவேண்டும் என்ற நோக்கம் கிடையாது. ஆனால் இது எந்த நோக்கத்திற்காக நடத்தப்படுகிறது என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சம்பவத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அரசியல் சட்டத்தில் ஃபண்டமென்டல் ரைட்ஸ் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி பார்த்தாலும்கூட நாங்கள் செய்வது எந்த முறையிலும் அவமரியாதை செய்வதாக இராது என்பதைத் தான் இந்த எடுத்துக்காட்டு மூலம் கூற விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். திரு. ராம் மனோகர் லோகியா அவர்கள் உத்திர பிரதேசத்தில் இது போன்ற ஒரு போராட்டத்தை நடத்தியபோது, இந்தியாவிலுள்ள மிகப் பெரிய கோர்ட்டாக இருக்கின்ற சுப்ரீம் கோர்ட் சில உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறார்கள்.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [17th January 1964

"a mere instigation without incitement to violence cannot be penalised."

மந்திரிகள் சொல்வார்கள், வேண்டுமென்றால் சட்டசபை உறுப்பினர்களாக வந்து எந்த மாற்றத்தை வேண்டுமென்றாலும் செய்யலாமே என்று. நமது மதியூக மந்திரிகள் எல்லாம் சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள். அது சாத்தியப்படுமா என்று கேட்கும்போது அமைச்சர்கள் நகைக்கிறார்கள். அவர்களுக்குத்தான் சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பினை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தியாவினுடைய மிகப் பெரிய நீதிமன்றமாக இருக்கக்கூடிய சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பில் சொல்லியிருப்பதானது . . .

"It is said that in a democratic set up there is no scope for agitational approach and that the only course is to get it modified by democratic process and that any instigation to break the law is itself a disturbance of the public order. If this argument without obvious limitations is accepted it would destroy the right to freedom of speech which is the very foundation of democratic way of life."

என்று முடிவு கட்டியிருக்கிறார்கள். ஆகையால் இந்தியைப் பொறுத்த வரையில் அது இந்த நாட்டுக்கு ஒவ்வாதது என்று சொல்லிச் சொல்லி அலுத்துப் போய்விட்டோம். அது இந்த நாட்டுக்குத் தேவையில்லை என்று பேசிப் பேசி அலுத்துப் போய்விட்டோம். அதைப்பற்றி மாநில மன்றத்தில் எடுத்துக் கூறிக் கூறி அமைச்சர்கள் கூட அலுத்துப் போய் விட்டார்கள். இந்த மன்றத்தை அவமதிக்கும் முறையில், இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அவமதிக்கும் முறையில் பண்டித நேருவின் உறுதி மொழியும் காற்றில் பறக்க விடப்பட்டு, அஃபிஷியல் லாங்குவேஜ் பில் என்று கொண்டு வந்து, 1965-க்குப் பிறகு இந்தி மொழி தான் ஆட்சி மொழி என்று சொல்லப்படுவதைத் தான், அதை எதிர்த்துத் தான் செய்கிறோமே தவிர வேறு அல்ல. நேற்றைய தினம் கூட, ராம் மனோஹர் லோகியா அவர்களைப் பற்றி ஒரு வழக்கில் பார்த்தேன். அவர்களுடைய நோக்கம் என்ன? **"The object of Dr. Lohia was to oppose English as the language of the country."** என்று தான் நேற்றைய தினம் குறிப்பிட்டு உயர் நீதி மன்றம் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. ஆப்ஜெக்ட் தான் கவனிக்கவேண்டும். அறிஞர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறவர்களும் அரசியல் சட்டத்தில் ஒரு பகுதியைக் கொளுத்துகிறார்கள் என்றால் . . .

(மணியடிக்கப்பட்டது)

***திரு. செ. மாதவன்:** மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். பொதுவாக, கவர்னர் அவர்களுடைய உரையிலே, இந்த அரசாங்கம் தங்களுடைய கருத்தை வலியுறுத்திக் கூறுவதுதான் இயற்கை

17th January 1964] [திரு. செ. மாதவன்]

என்பது அறிந்த செய்தியாகும். இந்த ஆண்டு ஆற்றப்பட்ட உரையிலே எங்களைப் பொறுத்த அளவுக்கு மகிழ்ச்சி தரக் கூடிய செய்தி எதுவும் இல்லை. அதற்கு மாறாக இந்த நாட்டு மக்களைப் புண்படுத்தவேண்டுமென்று ஒரு செய்தி கூட அவர்கள் உரையில் காணப்பட்டது கண்டு நாங்கள் வருத் தத்தைத் தெரிவிக்காமல் இருக்க முடியாது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒரு இயக்கம் தங்கள் கொள்கையை நாட்டு மக்களிடம் பரப்பும்போது ஆட்சியில் உள்ளவர்கள் கண்டிப்பது ஜனநாயக முறையில் ஒன்று என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். ஆனால் அந்த இயக்கத்தை அழித்து விடவேண்டுமென்ற எண்ணத்துடன் இந்த அரசாங்கம் தன்னுடைய செயல் திட்டங்களை ஆக்கினால் அதை எதிர் கட்சிகள் நிச்சயம் கண்டிக்க வேண்டிய நிலையில் இருக்கும் என்பதை இந்த மன்றத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தி எதிர்ப்புப் போராட்டத் தைப் பற்றி சூசகமாக கவர்னர் உரையில் குறிப் பிடப்பட்டிருக்கிறது. அந்த இயக்கத்தினுடைய, அந்தப் போராட்டத்தினுடைய விளைவு என்ன? அதனுடைய கொள் கைக்கு அரசாங்கம் தர இருக்கிற பதில் என்ன? இந்த நாட்டு மக்கள் உள்ளத்தில் எழுகிற புரட்சித் தீக்கு அரசாங்கம் என்ன பதில் தரப் போகிறது? மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையில், இந்த அரசாங்கம் தரும் உறுதி என்ன என்று நாட்டு மக்கள் எதிர் பார்க்கிறார்களேயொழிய, ஜன நாயகத்திற்கு உட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துத் தான் தீருவோம் என்று அந்த விதமான தொனி காணப் படுவதைக் கண்டு நாங்கள் மெத்த வருத்தப்படுகிறோம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் இன்னொன்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்த ஆட்சி இந்தி மொழி பற்றி, இந்திய ஆட்சி மொழி பற்றி தங்கள் கருத்துக்களை மக்கள் மன்றத்தில் எடுத்து வைக்க அச்சப்படுகிறது என்று எடுத்துக்காட்ட ஆசைப்படு கிறேன். நாங்கள் அதைப் பற்றி கவலைப்படவில்லை. அமைச் சரும், ஆட்சியும் அச்சப்படுகிற அதே நேரத்தில், போலீஸ் காரர்களைக் கொண்டு, சட்டத்திற்குப் புறம்பான வகையில், சட்டம் தங்கள் பக்கம் இருக்கிற ஒரே காரணத்தினால் அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுவது நியாயம்தானா என்று சிந்திக்கவேண்டுமென்று கேட்க ஆசைப்படுகிறேன். உதாரணத்திற்குக் கூறவேண்டுமென்று சொன்னால், நாட்டு மக்களுக்குள்ள பேச்சுரிமை தடைப்படுத்தி வைக்கப்பட்டிருக் கிறது. அரசியல் சட்டத்தில் உள்ள பேச்சுரிமை, கூட்டம்போடும் உரிமை எல்லாவற்றையும் அரசாங்கத்தினர் தடைப்படுத்தியிருக் கிறார்கள் என்ற குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் வைத்து இதை ஆட்சியில் இருக்கிறவர்கள் சிந்திக்கவேண்டுமென்று கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் கூறலாம். சட்டத்தை நிலைநாட்ட, சட்டத்திற்கு உட்பட்ட உத்திரவை பிறப்பிப்போம் என்று அவர்கள் கூறலாம். அது அல்ல

[திரு. செ. மாதவன்] [17th January 1964

உண்மை என்று கூற விரும்புகிறேன். ஒரு போராட்டம் எங்கேயோ நடக்க இருக்கிறது. ஒரு எரிப்புப் போராட்டம் எங்கோ நடக்கவிருக்கிறது, ஒரு மறியல் போராட்டம் எங்கோ எந்தத் தேதியிலோ நடக்க இருக்கிறது. ஆனால் அதைக் காரணமாக வைத்து நாட்டு மக்களுக்கெல்லாம், எந்த இடத்தில் போராட்டம் இல்லையோ அங்கெல்லாம் கூட, எந்த இடத்தில் எரிப்புப் போராட்டம் இல்லையோ அந்த இடத்திலெல்லாம் கூட தடை சட்டத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்களே, அதன் காரணம் என்ன? எந்தக் காரணத்திற்காகத் தடை சட்டத்தைப் போட முன் வந்தார்கள் என்று யோசிக்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்டத்தைக் காரணமாகக் காட்டி இந்த அரசாங்கம் வேறு உட்கருத்தைக் கொண்டு, நாட்டு மக்களிடத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பிரசாரம் செய்யக் கூடாது என்ற கெட்ட எண்ணத்துடன், அதைத் தடுக்க தடை சட்டங்களைப்போட முன் வருகிறது என்று நாங்கள் கூற ஆசைப்படுகிறோம். இன்னொரு உதாரணத்தை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மதுரையில் எரிப்புப் போராட்டம். அதற்கு முன் சென்னையில் எரிப்புப் போராட்டம். மதுரையில் நடந்த போராட்டம் சம்பந்தப்பட்ட வரையில் அமைச்சர்களுக்குள் கருத்து வேற்றுமை. அதன் காரணமாக அதிகாரிகள் தவறுதலாக நடந்திருக்கிறார்கள். மதுரையில் இன்ன தேதியில் இன்னரால் போராட்டம் நடைபெறப் போகிறது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அது அமைச்சருக்கும் தெரியும், போலீஸ் துறைக்கும் தெரியும். அமைச்சர்களுக்கு ஏற்பட்ட குழப்பமோ அல்லது ஒரு அமைச்சர் இன்னொரு அமைச்சரைக் கலக்காமல் செய்த காரணத்தினலோ அங்கு முறை வேறு விதமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால் வேடிக்கைப் பார்க்கப் போனவர்கள், மாலை போடப் போனவர்கள், கூட்டத்தில் இருந்தவர்கள் என்று கற்பனை செய்து அவர்கள் மீது பல நாட்கள் சென்ற பிறகு வழக்குகளைத் தொடர்ந்த காரணம் என்ன? அரசாங்கத்தின் தூண்டுதலால்தான் என்பதைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புவது, எத்தனை அடக்கு முறையை எங்கள் கட்சி மீது பாய்ச்ச முயன்றாலும் அதைப் பற்றி கவலைப்படவில்லை. ஆனால் வெகு சீக்கிரத்தில் கொள்கைப் பிரச்னையில், மொழிப் பிரச்னையில் அரசாங்கத்தின் நிலை என்ன என்று தெளிவாகக் கூறியாகவேண்டும். இந்த அரசாங்கம் இங்கே மக்களைப் பார்த்து 'இந்தி திணிக்கப்பட மாட்டாது, பயம் வேண்டாம், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் உங்களைத் தவறான பாதைக்கு அழைத்துச் செல்லப் பார்க்கிறார்கள்' என்று பேசுகின்றது. அதே முறையில் மேடைகளிலும் பேசப்படுகிறது. அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன், அப்படிப்பட்ட உறுதி மொழி வழங்கும் நேரத்திலேயே மத்திய அமைச்சர் வேறு தொனியில், வேறு பாணியில் பேசுகிறார்கள். மத்திய கல்வி அமைச்சர் அவர்கள் திட்ட வட்டமாக அண்மையில்

17th January 1964] *[திரு. செ. மாதவன்]*

கூறினார்கள், காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கிற காரணத்தினால், காங்கிரஸ் கட்சி அமைச்சர் ஆன அவர்களுடைய கருத்தைக் கண்டு நாட்டு மக்கள் பயப்படுகிறார்கள். அவர்கள் கொள்கையை காங்கிரஸ் அரசாங்கம் திணிக்கப் பார்க்கிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள், இந்தி நாட்டு மக்கள் மீது திணிக்கப்படவேண்டும், எல்லா இடங்களிலும் கட்டாயப்படுத்த வேண்டும், அப்படிச் செய்து கட்டாயப்படுத்தினால் தான் இந்திய ஒருமைப்பாடு என்ற கொள்கை வெற்றி பெறும் என்று தெரிவித்திருக்கிறார். இதைத் தான் நான் விளக்க ஆசைப்படுகிறேன். மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையில் யூனிட்டி—ஒருமைப்பாடு—என்பதற்காக இந்தி மொழியைத் திணிக்கிறார்களா? நம் சௌகரியத்திற்கு, வசதிக்கு இந்தி மொழியை ஒரு மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றால் அது வேறு வாதம். அதுபற்றி திட்டவட்டமாகச் சொல்லியாகவேண்டும். அங்கு உள்ள அமைச்சர் தெளிவாகச் சொல்லுகிறார், இந்தியா ஓரே நாடு, ஓரே பண்பாடு ஆகையால் இந்தி வேண்டும் என்று அங்கே இருக்கிறவர்கள் சொல்லுகிறார்கள், ஆனால் நம் அமைச்சர் அப்படி அல்ல என்று சொல்லுகிறார். இப்படிப்பட்ட முரண்பட்ட வாதங்களினால் மக்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அச்சம் ஏற்படுகிறது. எங்கள் அச்சத்தை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதற்கு அடுத்தபடியாக இந்த உரையில் மிக ஆவலாக எதிர்பார்த்தோம், நாட்டு மக்கள் மிக ஆவலாக எதிர்பார்த்தார்கள், அண்மையில் பேசப்பட்ட டெமாக்ராடிக் சோஷலிஸம் எப்படிச் செயல் படப் போகிறது, காங்கிரஸ் ஆட்சி எப்படி செயல் படுத்தப் போகிறது என்று அறிய, அதைப்பற்றி விளக்க உரை இருக்கும் என்று நாங்களெல்லாம் எதிர்பார்த்திருந்தோம், ஆனால் ஏமாந்தோம் என்று சொல்லித் தீர வேண்டியிருக்கிறது. இதிலே காமராஜ் பற்றி வானளாவ அங்கத்தினர்களெல்லாம் பேசினார்கள். அதைப் பற்றி நாங்கள் வருத்தப்படவில்லை. ஆனால் அதே சமயத்தில் அவரும் உட்பட இன்று ஜனநாயக சோஷலிஸத்தை பேச்சளவில் ஏன் விட்டுவிட்டார்கள்? எப்படி அதைச் செயல் படுத்தப் போகிறார்கள்? அதற்கு எங்கே விளக்கம் இருக்கிறது? ஏற்கனவே சொல்லப்பட்ட விளக்கம் தான்.

இந்தச் செல்வக் குவிப்பு எங்கேயோ ஒரு இடத்தில் குவிகிறது, ஏழை மக்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறவில்லை என்ற கருத்து பல ஆண்டுகளாக, பல அமைச்சர்கள் சுட்டிக்காட்டிய கருத்து தான். ஜனநாயக சோஷலிஸ அடிப்படையில் எவ்வாறு இந்தத் திட்டங்களை மாற்றி அமைத்து நாட்டு மக்கள் பயன் பெறக் கூடிய நிலையிலே இன்னென்ன செயல் திட்டங்களை நாங்கள் கொண்டுவரப்போகிறோம் என்று கூறுவதற்கு ஏன் தவறினார்கள்

[திரு. செ. மாதவன்] [17th January 1964

இந்த அரசாங்கம் என்பதை என்னுல் புரிந்துக் கொள்ள முடிய வில்லே. நான் நினைக்கிறேன், பணக்காரர்களைக் கண்டு, முதலாளி களைக் கண்டு இந்த அரசாங்கம் பயப்படுன்றது. அமைச்சர் அவை யில் உள்ள அமைச்சர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கிறது, முரண்பட்ட கருத்துக்கள் இருக்கிறது என்று நாங்கள் உணர்கி ருேம். ஜனநாயக சோஷலிஸத்தில் உண்மையிலேயே இந்த அமைச்சர் அவைக்கு நம்பிக்கை இருக்குமானுல், அதனுடைய செயல் திட்டங்களை தெளிவாக இந்த மன்றத்தில் எடுத்துக் கூற வேண்டும்.

விலைவாசி பற்றி எல்லா உரையிலும் தெரிவித்தார்கள், அமைச்சர் அவர்கள் பேச்சுக்களிலும் தொடர்ந்து தெரிவித்தார்கள். விலை வாசி உயர்வு இல்லை என்று ஒரு காலத்தில் பேசப்பட்டது. ஆனுல் விலைவாசி உயர்வு இருக்கிறது என்று அமைச்சர்கள் கவர்னர் அவர் களின் உரையின் மூலம் இப்பொழுது ஒப்புக் கொண்டிருப்பது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனுல், அதற்கு விளக்கம் தருவ தற்கு முயன்றிருக்கிருர்கள். பல ஆண்டுகளாக, பல பொரு ளாதார நிபுணர்களால் பேசப்பட்டு வந்த, எடுத்து வைக்கப்பட்டு வந்த விளக்கம் தான் அது. இதை மீண்டும் மீண்டும் திருப்பிச் சொல்லுவதில் பிரயோசனம் இல்லை. பண விக்கத்தினுல் தான் விலைவாசி உயர்கிறது என்பது பழைய கதை தான். அதையே திருப்பி திருப்பி பேசுவதில் பயனில்லை. விலைவாசி உயர்கிறது, அதை எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை அப்பட்ட மாக ஒப்புக்கொண்ட அமைச்சர் அவை தங்கள் செயல் திட்டங் களிலே இதை தடுப்பதற்கு என்ன செய்திருக்கிருர்கள்? ஒரே கருத்தைச் சொல்லியிருக்கிருர்கள். கூட்டுறவு மூலம் நாங்கள் விலை வாசியைக் கட்டுப்படுத்துவோம் என்று சொல்லுகிருர்கள். இதெல் லாம் பழைய கதைதான். திருப்பி திருப்பி இந்த மன்றத்தின் அமைச்சர்களால் தரப்பட்ட உறுதிதான் அது. அந்த உறுதி தான் இந்தப் பேருரையிலும் திருப்பித் தரப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட கூட்டுறவு முறை ஏற்பாடுகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டதற்குப் பின்னுலும் கூட விலைவாசி உயர்வை கட்டுப் படுத்த முடியவில்லை என்பது தெளிவாகின்றது. தங்களுடைய செயல் திட்டங்களை எந்தெந்த முறையில் மாற்றி அமைக்கப் போகிருர்கள் என்பதைக்கூட இந்த மன்றத்தில் தெளிவாகக் கூறவில்லை, அதற்கான விளக்கம் தரப்படவில்லை. இதைக் கண்டு மக்கள் நிச்சயமாக வருத்தப்படுவார்கள். இதைக் கண்டு மக்களும், நாங்களும் ஏமாந்து போயிருக்கிருேம். புதிய ஜனநாயக சோஷலிஸத்தை வகுத்துக்கொண்டு திரும்பி யிருக்கிருர்களே, இவர்கள் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்து வதற்கு எந்த சோஷலிஸத்தைக் கொண்டு செயல் திட்டங்களைத் தருவார்கள் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனுல், எதிர்பார்த்து ஏமாந்துவிட்டோம். பொது மக்களும் ஏமாந்து போய்விட்டார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட ஆசைப்படு கிறேன். இந்தப் பேருரையில், புதியகொள்கைகள், புதிய வாய்ப்பு வசதிகள் இந்த நாட்டு மக்களுக்கு ஏதாவது தரப்படும், அதைப்

17th January 1964] [திரு. செ. மாதவன்]

பற்றி இந்த உரையிலே ஏதாவது இருக்கும் என்று நாங்கள் சிந்தித்துக் கொண்டிருந்தோம். மத்திய அரசாங்கம், சென்னை போன்ற நகரத்தை ஒரு புதிய நிலைக்கு உயர்த்தி, மத்திய அரசாங் கத்தில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு புதிய சலுகைகளைக் கொடுக்கப் போகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதை உணர்ந்தாவது நம்முடைய அரசாங்கம் நம்முடைய அரசாங்க ஊழியர்களுக்கு ஏதாவது செய்து தரும் என்று எதிர்ப்பார்த்தோம். அதில் ஏமாற்றம் தான் பெற்றோம்.

நான் இன்னொன்றும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்த நாட்டில் கடந்த ஆண்டில் விவசாயப் பெரு மக்களுக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. மதுரை, ராமநாதபுரம் பகுதிகளிலே மழை இல்லாத காரணத்தினாலும், காலம் கடந்து மழை பெய்த காரணத்தினாலும், விவசாயிகளுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டிருக் கிறது. அதைப்பற்றி அமைச்சர்கள் நேரடியாக உணர்ந்திருக் கிறார்கள். அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. அவர்களுக்கு வரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்போகிறோம், அல்லது அவர்களுக்கு என்னென்ன வாய்ப்பு, வசதிகள் செய்து தரப்போகிறோம், அவர்களுடைய கஷ்ட நிலைமையை எப்படி தவிர்க்கப்போகிறோம் என்ற நல்ல வார்த்தைகள் இந்த உரையில் காணப்படும் என்று எதிர்பார்த்தோம். ஏமாந்தோம். குறிப்பாக கிழக்கு ராமநாதபுர மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே மிகுந்த அளவிலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த அர சாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதை அறிந்து கொள்வதற்கு நாங்கள் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தோம். ஆனால் ஏமாந்தோம் என்ற கருத்தை தெரிவித்துக்கொள்வதுடன், இந்த நிலையிலே, இந்த ஆண்டிலே மக்களுடைய எண்ணத்தை உணர்ந்து தரப்பட்ட உரை அல்ல இது என்ற கருத்தை நாங்கள் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் கடந்த பல ஆண்டுகளாக நம் மாநிலத்திலே வருட ஆரம்பத்திலே உரை ஆற்றியிருக்கிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக நான் இந்த சட்ட மன்றத்தில் இருந்திருக்கிறேன். அவர்கள் ஆற்றிய உரைகளில் எந்தக் குறைபாட்டையும் இந்த அரசாங்கம் விட்டு வைக்கவில்லை. அவர்கள் ஆற்றிய உரைகளிலுள்ள கருத்துக்களை படிப்படியாக நிறைவேற்றியிருப்பதை நாம் உணர்வோம்.

கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையிலே இந்த ஆண்டி னுடைய முக்கியத்துவம் என்ன என்பதைப்பற்றி விளக்கம் கொடுக்கும்பொழுது, தலைவர் காமராஜ் அவர்கள் ராஜிநாமா செய்ததுபற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். தலைவர் காமராஜ் அவர் கள் பதவி ராஜிநாமா செய்தது, இந்த பாரத நாட்டில் மட்டுமல்லா மல், அகில உலகத்திலும் காமராஜ் ப்ளான் என்று போற்றக்கூடிய ஒரு அளவிலே செயல்பட்டிருக்கிறது. அவர் ராஜிநாமா செய்த

தற்குக் காரணம் கட்சிக்குள்ளே ஏதோ குழப்பம் இருக்கிறதோ என்னவோ தெரியாது என்று ஒரு அங்கத்தினர் சொன்னார். காங்கிரஸுக்குள்ளே குழப்பம் ஒன்றும் இல்லை. காங்கிரஸ் கட்சி இந்த நாட்டில் உறுதியாக இருக்கிறது. ஏதோ காமராஜ் அவர்கள் ராஜிநாமா செய்தது திருவண்ணாமலையில் காங்கிரஸ் தோற்றுவிட்ட காரணத்திற்காகவோ என்னவோ என்று தனக்கே உரிய பாணியில் ஒரு அங்கத்தினர் பேசியிருக்கிறார். பாரதத்தில் காங்கிரஸ் இன்றைக்கு ஆட்சி புரிகிறது என்றால், எத்தனையோ ஆயிரக்கணக்கான திருவண்ணாமலை போன்ற இடங்களைப் பிடித்து பாரதத்தில் காங்கிரஸ் ஆட்சியை ஏற்படுத்தி யிருக்கும்பொழுது, சுண்டைக்காய் திருவண்ணாமலையில் ஏதோ காரணத்தினால் காங்கிரஸ் தோற்று விட்டது என்பதற்காக காமராஜர் அவர்கள் ராஜிநாமா செய்து விட்டார்கள் என்று யாராவது சொல்லுவார்களேயானால், உலகத்தில் இருப்பவர்கள், நாட்டு மக்களெல்லாம் இந்த நாட்டு மக்களை இப்படிப் பேசியிருக்கிறார்களே என்று கேலியாகச் சொல்லுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காமராஜ் அவர்கள் ராஜிநாமா செய்து

திரு. ப. உ. ஷண்முகம் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார், அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது "சுண்டைக்காய் திருவண்ணாமலை" என்று சொன்னார். அது அந்தத் தொகுதியை அவமதிப்பதுபோல் இருக்கிறது. அது முறைதானா?

கனம் சபாநாயகர் : அப்படிச் சொல்லுவது சரியல்ல.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் அந்தப்பக்கம் தேர்தலின் பொழுது சென்றபொழுது சுண்டைக்காய் நிறைய விளைந்திருந்தது. அதற்காக அப்படிச் சொன்னேன். (சிரிப்பு). காமராஜ் ப்ளான் எப்படி இருக்கிறது என்று பார்க்கப் போனால், ஒரு நாடு விடுதலை அடையும்பொழுது எப்படி அந்த நாட்டில் யாராவது ஒரு முக்கியஸ்தர், மிகவும் போற்றக்கூடியவர் ஒரு ப்ளானை நாட்டிற்கு சமர்ப்பித்தாரோ அந்த நிலையில் தான் இருக்கிறது. விடுதலை அடைந்த அமெரிக்க நாட்டில் மார்ஷல் என்பவர் ப்ளானை சமர்ப்பித்தார். மக்கள் சுபிட்சப் பாதையில் செல்வதற்கு உகந்ததாக அந்த மார்ஷல் ப்ளான் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த ப்ளான் அடிப்படையிலே திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது நாட்டு மக்கள் அந்த ப்ளான் சரியாக இருக்கிறது என்று அதற்கு ஆதரவு தந்தார்கள். அமெரிக்க நாட்டில் அம்மாதிரி ஒரு ப்ளான் தயாரிக்கப்பட்டு, அரசாங்கம் அதை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதே முறையில் நம்முடைய நாட்டில் காமராஜ் ராஜிநாமா செய்த ப்ளான் என்ன என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 'ஏதோ மக்களிடையே வோட்டு வாங்கி, சட்ட சபையில் அங்கத்தினராக வீற்றிருந்து, அதன் மூலம் மந்திரியாகி, அதன் மூலம் முதன் மந்திரியாக நான் வரவில்லை, நாட்டு மக்களுக்கு உழைக்கக்கூடிய ஒரு திட்டத்தை நான் சமர்ப்பிக்கிறேன், அதற்காக நான் என் பதவியைக் கூட

17th January 1964] *[திரு. ஜே. மாதா கவுடர்]*

துறந்து நாட்டு மக்களுக்கு சேவை செய்யக்கூடிய அளவிலே, ஜன நாயக சோஷலிஸம் என்ற பாதையிலே உழைப்பை ஏற்படுத்தி, அதை செயல்படுத்தும் முறையிலே, அதற்கு நான் வழி வகுத்துக் கொடுக்கக்கூடிய அளவிலே நான் இருக்கிறேன், நான் வருகிறேன்' என்று அவர் பேசியிருக்கிறார். ஜனநாயக சோஷலிச அமைப்பிலே 5-00 p.m.
இந்த நாடு முன்னேற முடியுமா அல்லது முடியாதா என்பதைப் பற்றி நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஒரு புறத்திலே எதிர்க் கட்சியிலே இருக்கக் கூடிய அங்கத்தினர்கள் "செல்வம் எல்லாம் ஒரு பக்கத்திலே குவிந்து கொண்டு இருக்கிறது" என்ற குற்றச் சாட்டை சுமத்துகிறார்கள். மறுபுறத்திலே ஜனநாயக சோஷலி ஸம் ஒன்றை காங்கிரஸ்காரர்கள் ஏற்படுத்தியதைப் பார்த்து பீதி அடைந்து வருகிறார்கள். செல்வம் ஒரு புறத்திலே குவிந்து கொண்டு இருக்கிறது என்று காங்கிரஸ்காரர்கள் மீது குற்றச் சாட்டை சுமத்தி ஜனநாயக சோஷலிசத்தை எப்படி அவர்கள் அமுல் நடத்தப்போகிறார்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் "நீங்கள் பொறுத்திருந்து பாருங்கள்" என்று நான் சொல்லுகிறேன். காங்கிரஸ்காரர்கள் ஏதாவதொரு காரியத்தைச் சொல்லிவிட்டால், அதை நிறைவேற்றாமல் விடுவதில்லை. நாங்கள் அவசரப்பட்டு ஒன்றிலும் இறங்க மாட்டோம். எந்த ஒரு காரியத் திலாவது இறங்கி விட்டால் அதை செய்தே தீருவோம். அந்த முறையிலே ஆட்சி பீடத்திலே இருக்கக் கூடியவர்கள் இந்த ஜன நாயக சோஷலிசத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய முயற்சி களிலே ஈடுபட்டு வருகிறார்கள்.

அடுத்தபடியாக, இந்தியைப்பற்றி சொன்னார்கள். கவர்னர் பெருமான் உரையிலே இந்தியைப்பற்றி குறிப்பிடாமல் இருக்கும் பொழுது, ஏதோ ஒரு அஜிடேஷன் என்பதைச் சொல்லிக் கொண்டு அதைப்பற்றி இங்கே பேசுகிறார்கள். இன்றைக்கு உள்ள இந்தி பிரச்னை என்ன? நாம் இந்த மன்றத்திலே பல முறைகள் இதைப் பற்றி விவாதித்து இருக்கிறோம். நம்முடைய அரசியல் அமைப்பு சட்டத்திலே 1965 வரையில் ஆங்கிலம் இருக்கும் என்று இருக்கிறது 1965-வது ஆண்டிற்குப்பிறகு ஆங்கிலம் என்ன ஆகும் என்பதைப் பற்றி நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். 1965-க்கு பிறகும்கூட ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் அந்த சட்டத்தை திருத்தி இருக்கும் பொழுது, இந்தியை புகுத்துவதற் காக சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்கள் என்று எதிர் கட்சியினர் சொல்லுகிறார்கள். ஆங்கிலத்திற்காக பரிந்து பேசக் கூடியவர்கள், ஆங்கிலேயரின் பழைய நண்பர்கள் கூட இந்தி எதிர்ப்புக்காக நாங்கள் போராடுகிறோம் என்று சொல்கிறார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டம், இந்தி எரிப்புப்போராட்டம் என்றெல்லாம் சொல் கிறார்கள். எதிர் கட்சியைச் சார்ந்த திராவிட முன்னேற்ற கழகத் தினர் "ஹிந்தி எதிர்ப்பு, ஹிந்தி எதிர்ப்பு" என்று எத்தனையோ முறைகள் சொல்லியிருக்கிறார்கள். எத்தனையோ முறைகள் "ஹிந்தி போராட்டம், ஹிந்திப்போராட்டம்" என்று வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏதோ இதற்கு ஒரு தடை விதித்து விட்டால் நின்று விடுமா என்று கேட்கிறார்கள். மக்களுக்கு

எடுத்துச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் டில்லியிலே பாராளு மன்றத்திலே வீற்றிருக்கும் தி.மு.க. அங்கத்தினர்கள் என்ன செய்தார்கள் என்று நான் கேட்கிறேன். பாராளுமன்றத்திலே இருப்பவர்கள் அங்கே இதை நிறைவேற்றக் கூடாது என்று சொல்லியிருக்க வேண்டும். ஜனநாயக நாட்டிலே மக்க ளுடைய ஆதரவைப் பெற்றுதான் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். மக்களுடைய ஆதரவைப் பெற்று வந்திருக்கக் கூடிய அமைச்சர் ஜனநாயகம் என்றால் என்ன என்பதை எடுத்துச் சொல்வதற்குத்தான் இருக்கிறார்கள். ஜன நாயக நாட்டிலே மக்களுடைய ஆதரவைப் பெற்றுத்தான் அர சாங்கத்தை அமைக்க வேண்டும். அந்த முறையிலே மெஜாரிடி அங்கத்தினர்கள் ஒரு சட்டத்தை இயற்றி விட்டால், இந்த நாட்டு மக்கள் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒரு சட்டம் அது என்று தான் அர்த்தம். அப்படி நாட்டு மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு சட்டத்தை யாராவது ஒருவர் எரிக்கும்போது, அதை சும்மா பார்த்துக் கொண்டிருந்தால் அது ஜனநாயகமா என்று நான் கேட்கிறேன். பேச்சு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கும் ஒரு அளவு உண்டு. நிதானித்துத்தான் பேச வேண்டும். கண்டவற்றை எல்லாம் பேச வேண்டும் என்று சொன் னால், அப்படி பேசுவதற்கும் ஒரு எல்லை இருக்கிறது. ஆகவே பேச்சு உரிமை இருக்கிறது என்பதற்காக அவர்கள் பேசிக் கொண்டே போவோம் என்று சொன்னால், இனியும் இந்த அரசாங் கம் அவர்களிடத்திலே எந்த தயாதாட்சண்யத்தையும் காண்பிக்கக் கூடாது.

எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர், மதுரைக்கு ஒரு சட்டமா, சென்னைக்கு ஒரு சட்டமா என்று கேட்டார். எல்லா இடங்களுக் கும் ஒரே சட்டம் தான். யார் யார் எந்தெந்த இடத்திலே ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்துகிறார்களோ அந்த இடங்களிலெல் லாம்—எங்களுடைய மாவட்டம் நீங்கலாக—தடையுத்தரவு விதிக் கப்பட்டிருக்கிறது. இப்படி விதிப்பதானது ஜனநாயகத்திற்கு முரண்பட்டது என்று வழக்கறிஞர் சொன்னார். அப்படி தடை யுத்தரவு விதிக்காமல் இருந்தால் இந்த சென்னை நகரத்தின் கதி என்ன ஆகியிருக்கும் என்று நான் கேட்கிறேன். விலைவாசி உயர்வு போராட்டத்தில் தி.மு.க. வினர் செய்த கிளர்ச்சியின் காரணமாக அரசாங்க பஸ்களுக்கெல்லாம் தீ வைக்கப்பட்டது. மக்களுக் கெல்லாம் கல்லடி கிடைத்தது. இது ரௌடித்தனம் இல்லையா? இந்த ரௌடித்தனத்தை பார்த்துக் கொண்டு இருப்பது தான் ஒரு அரசாங்கமா என்று நான் கேட்கிறேன்? ஆகவே 144 தடையுத்தரவு போட்டு மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கக் கூடாது என்று யாராவது சொன்னால், அவர்களைப் பார்த்து தமிழ் நாட்டு மக்கள் சிரிப்பார்கள். அப்படி தடையுத்தரவு விதித்ததனால் தான் இன்றைக்கு அமைதி நிலவி வருகிறது. சமீபத்தில் ஏற்பட்ட கல்கத்தா கலவரத்தைப் பாருங்கள். ஆகவே, 144 தடைச் சட்டத்தை விதித்திருப்பது தப்பு என்று யாராவது சொன்னால்

17th January 1964] [திரு. ஜே. மாதா கவுடர்]

அதிலே என்ன அர்த்தம் இருக்கிறது. மதுரையிலே அரசியல் சட்டத்தை எரித்த பிறகு கைது செய்யப்பட்டார்கள் என்பதை மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார்கள். சென்னை நகரத்திலே எரிப்பதற்கு முன்பே கைது செய்திருக்கிறார்கள், எரிப்பதற்கு முன்னால் கைது செய்தால் அதனால் கைது செய்யப்பட்டவருக்குத் தான் லாபம். ஆகவே எரிக்க விட்டுவிட்டு பிறகு கைது செய்தால் அவர்களுடைய தலைவருக்கு அதிக தண்டனை கிடைத்து இருக்குமே என்று அவர்கள் அங்கலாய்த்துக் கொள்கிறார்கள் போல் இருக்கிறது. இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே நமது அரசாங்கம் ரொம்பவும் கண்டிப்பாக இருக்க வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே கூட்சினர்கள் அபாயம் முற்றிலும் நீங்கிவிட்டதாக நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். அந்த நிலைமையிலே இந்த நாட்டு மக்களின் ஒற்றுமையை கண்காணிப்பதற்கு நாம் முயற்சிகள் எடுக்க வேண்டும். அரசியல் அமைப்பு சட்டத்தை அவர்கள் எரிக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் எரித்து விட்டு போகட்டுமே என்று நாம் சும்மா இருக்க முடியாது. அவர்களுக்கு கடும் தண்டனை கொடுக்க வேண்டும். சட்டம் இருந்தாலும் கூட சர்க்காரும் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஆனால் அந்த மாதிரி இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டவர்களுக்கு நாம் தாட்சண்யம் காண்பித்துக் கொண்டு இருக்கிறோம். நான் நம்முடைய அமைச்சர்களுக்கு சொல்ல விரும்புவதெல்லாம், இவர்களுக்கு எந்த விதமான தயாதாட்சண்யமும் கொடுக்க வேண்டியது அவசியம் இல்லை என்பது தான். நாட்டு மக்களுக்கு பாதகம் செய்யக் கூடியவர்களுக்கு, நாட்டிற்கு தீங்கு செய்யக் கூடியவர்களுக்கு, சிறையில் ஏன் ஏ-வகுப்பு கொடுக்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு ஏன் சிறையிலே ஏ-வகுப்பு கொடுக்க வேண்டும் என்று நான் கேட்கிறேன். இனியும் நாம் அப்படிச் செய்தால், ரோட்டில் போகிறவர்கள் கூட ஹிந்தி எரிப்புப் போராட்டத்தில் நாம் கலந்து கொண்டால் நமக்கு ஏ-வகுப்பு கிடைக்கும், நிறைய சாப்பிடலாம் என்று இதிலே கலந்து கொள்வார்கள். இதை நாம் கண்காணிக்க வேண்டும். ஜெயில் என்று சொன்னால் அங்கே இருக்கிறவர்கள் நல்ல வேலை செய்ய வேண்டும். குறிப்பாக கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் நன்றாக உழைக்க வேண்டும். அந்த மாதிரி ஒரு உணர்வை மக்களுக்கு ஏற்படுத்தினால் தான், ரோட்டிலே போகக்கூடியவர்களெல்லாம் இந்த போராட்டத்தில் ஈடு பட மாட்டார்கள். சாதாரண அரசியல் வாதிகளாய் இருந்தாலும் பரவாயில்லை. இப்பொழுது ஒரு மணி நேரத்திற்கு முன்பு வெளியிலே நடந்தது என்ன? கல்லூரி மாணவர்கள், ஏதோ அவர்களுக்கு இந்தியின் மீது வெறுப்பு இருந்தால் அமைச்சர் அவர்களிடம் வந்து மகசரை சமர்ப்பித்துவிட்டு போகலாம். அவர்களைக்கூட அரசியல்வாதிகளாக மாற்றியிருக்கிறார்கள். சென்னையில் இருக்கும் சில அரசியல் வாதிகள் கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவர்களையும்கூட அரசியலில் இழுத்து, அவர்களுடைய வாழ்க்கையைக் குட்டிச்சுவராக்கிக்

கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. கல்லூரிக்காக நமது அரசாங்கம் வாரி வாரி வழங்கிக்கொண்டிருக்கிறது. கோடிக்கணக்கான ரூபாய்களை நாம் ஒவ்வொரு ஆண்டும் கல்லூரிகளுக்காகச் செலவு செய்து கொண்டிருக்கும்போது, ஒரு சில அரசியல் கட்சியினர் கல்லூரி மாணவர்களின் பின்னால் இருந்து தட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கவர்னர் பெருமான் இந்த மன்றத்திலே ஆற்றிய உரைக்கு நாம் அவரை மனதார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். கவர்னர் பெருமான் இந்த மன்றத்தில் சென்ற ஆறேழு ஆண்டுகளாக ஆற்றி வந்திருக்கும் உரைகளில் கண்டுள்ள அத்தனையையும் நமது அரசாங்கம் படிப்படியாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. நமது கவர்னர் அவர்கள் இத்தனை ஆண்டுக் காலமாக தமிழ்நாட்டில், தமிழ் மக்களுக்காக உண்மையாக உழைத்துச் சேவை செய்து வந்திருக்கிறார் என்பது பெருமைக்குரிய விஷயம். அவர்கள் ஆற்றி வந்துள்ள சேவைக்காக அவரைப் போற்றிப் புகழ்ந்து, அவர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. எம். தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு கனம் அங்கத்தினர் திரு. பழனி அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து எனது இரண்டொரு கருத்துக்களை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கவர்னர் பெருமான் ஆற்றியிருக்கும் உரையில் நமது மதிப்பிற்குரிய முன்னாள் முதலமைச்சர் அவர்களின் திட்டத்தைப் பற்றியும் அவருடைய சாதனைகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த ஒரு நிலையை நம்முடைய சட்ட மன்றம் மட்டுமல்லாமல், ஏழை எளிய மக்கள் முதல் பல அயல் நாட்டுத் தலைவர்களும் பாராட்டுகின்றார்கள். முன்னாள் முதலமைச்சர் அவர்களின் அரிய சேவையைப்பற்றிக் கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பதை உண்மையிலேயே நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அடுத்தபடியாக, ஐந்தாண்டுத் திட்ட வேலைகளை நாம் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக சிறப்புற நிறைவேற்றி வருகிறோம் என்றும், அந்த அடிப்படையில் நாம் திட்டமிட்ட அளவைவிட அதிகமாகச் செலவு செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதையும் கவர்னர் உரையில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, நமது அரசு எவ்வளவு திறம்பட, திட்டமிட்டபடி முன்னேறிவருகிறது என்பது பாராட்டத்தக்கதாகும். அதோடு மட்டுமல்லாமல், நாம் பல

பெரிய திட்டங்களை மேற்கொண்ட காரணத்தினுல், எதிர்பாராத விதமாக அதிகமாக ஏற்பட்டிருக்கின்ற செலவுகளையும் ஈடுசெய்ய வேண்டிய நிலையிலே இன்று நாம் நிறுத்தப்பட்டிருக்கிறேம்.

அதற்கடுத்தபடியாக, அவருடைய உரையில் முக்கிய இடம் பெற்றிருப்பது அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி ஏற்ற மாகும். விலைவாசி ஏற்றத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, வளர்ந்து வரும் சமுதாயத்தில் விலைவாசி ஏற்றம் தவிர்க்க முடியாத ஒன்று என்பதையும் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறி இருக் கிறார்கள். அப்படி விலைவாசி ஏற்றம் தவிர்க்க முடியாததாக இருந்த போதிலும், ஓரளவு விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு நமது அரசாங்கத்தார் மேற்கொள்ளும் திட்டங்களையும் மிகவும் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், குறிப்பாக உணவுப் பண்டங்களின் விலையை நிர்ணயம் செய்து, வாங்குகிறவர்களுக்கு ஓரளவு நியாயமான விலைக்குக் கிடைக்க வேண்டிய வழி வகைகளும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, அரிசியைப் பொறுத்தமட்டில், இந்த ஆண்டு ஒரு லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்து, அதை நியாய விலைக்கு விற்க வேண்டும் என்று திட்டமிட்டிருப்பதாகவும் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஒரு லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்படுகிற முறையைப் பார்ப்போம். சென்ற ஆண்டு நாம் மேற்கொண்ட திட்ட அடிப்படையில் சரியான முறை யில் நாம் திட்டமிட்ட அளவு நமக்குக் கிடைக்காத காரணத்தால், இந்த ஆண்டு கொள்முதல் முறையை மாற்றியமைத்து, கட்டாய மாக ஒரு லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்படும் என்ற நிலை இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட ஒரு நிலையில் விவசாயிகளுக்கு எந்த அளவு பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிப் பல முறை இந்தச் சட்ட மன்றத்தில் நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறேம். நமது மதிப்பிற் குரிய முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் தஞ்சைக்கு வருகை தந்திருந்தபோது, இந்த கொள்முதல் திட்டத்தை எப்படி மாற்றியமைக்கலாம், எப்படி விவசாயிகளுக்கு சிரமம் இல்லாது நாம் திட்டமிட்டபடி கொள்முதல் செய்ய முடியும் என்பதைப் பரிசிலனை செய்தபோது, நாங்கள் பல கருத்துக்களை அவர்களிடம் எடுத்துக் கூறினேம். அந்தக் கருத்தின் அடிப்படையில் விலையை நெல்லுக்கு அதிகமாக ஏற்றுவது முடியாது என்ற நிலையைத் தெளி வாக நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் அந்தக் கூட் டத்தில் எடுத்துக்கூறினார்கள். குறிப்பாக, 20 சதவிகிதம் தஞ்சை ஜில்லாவிலும், 15 சதவிகிதம் மற்ற ஜில்லாக்களிலும் கொள் முதல் செய்யப்படும் என்ற ஒரு திட்டம் இப்பொழுது வெளியிடப் பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு 12 சதவிகிதம் கொள்முதல் செய்யவேண்டும் என்ற திட்டம் இருந்ததில், ஏறத்தாழ இராஜ்யம் பூராவிலும் 56,000 டன் கொள் முதல் செய்த காரணத்தால், இந்த ஆண்டு கட்டாயமாக தஞ்சை ஜில்லாவில் 20 சதவிகிதமும், மற்ற ஜில்லாக்களில் 15 சதவிகிதமும் கொள்முதல் செய்யப்படும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்முதல் திட்டம் மில்காரர்களிடத்திலும், நெல்

வியாபாரிகளிடத்திலும் ஒப்படைக்கப்பட்டிருக்கிற காரணத்தினுல், நிச்சயமாக கடந்த ஆண்டு எப்படி விவசாயிகளைப் பாதித்ததோ அதே நிலைதான் இந்த ஆண்டும் நிச்சயமாக ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏறத்தாழ ஒரு வார காலத்திற்கு முன்பாக ஒரு மூட்டை நெல் 21 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்தது. ஆனுல், கடந்த 15ந் தேதி யிலிருந்து, இந்தத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட திலிருந்து, மூட்டை நெல் 18 ரூபாய்க்கும், ரூ. 17-50 ந. பை-க்கும் வாங்கப்படுகிறது. எவ்வளவுதான் நாம் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமாஞலும், பொருளாதாரத்தில் முன்னேறவேண்டுமாஞலும் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்று நாம் பல திட்டங் களை நிறைவேற்றிஞலும், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய இந்தப் பொருள் நியாயமான விலைக்கு விற்காவிட்டால், எந்த அளவு நாம் முயற்சி எடுத்தாலும், அகில இந்திய ரீதியில் நாம் மேற் கொள்ளுகின்ற இந்த விவசாய உற்பத்தி நிச்சயமாக ஒரு சிறந்த நிலையை அடையாது, திட்டமிட்டபடி விவசாயத்தை நாம் பெருக்க முடியாது என்பதைத்தான் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக, தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தமட்டில், சென்ற ஆண்டு நம்முடைய நிதிநிலை அறிக்கை யின்போது விதித்த இந்தத் தண்ணீர்த் தீர்வை இந்த ஆண்டு வசூலிக்கப்பட இருக்கிறது. இந்த ஆண்டு வசூலிக்கப்படுகிற அந்தத் தீர்வையானது இந்தப் பசலிக்குள்ளது மட்டும் வசூலிக்கப் பட்டால் பரவாயில்லை. கடந்த ஆண்டு நிறுத்திவைக்கப்பட்டிருந்த காரணத்தால் இரண்டு ஆண்டுக்கும் சேர்த்து இந்த ஆண்டு வசூல் செய்வதற்கு வேண்டிய முயற்சி நடைபெற்று வருகிறது. இதற்கு முன்பே ஏக்கரா ஒன்றுக்கு 18 ரூபாய் கிஸ்தி கட்டிவந்த விவசாயி நாம் உயர்த்திய தீர்வை அடிப்படையில் ஆண்டொன்றுக்கு ரூ. 4.75 கட்டவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆண்டொன்றுக்கு ரூ. 4.75 கட்ட வேண்டிய விவசாயி இரண்டு ஆண்டுக் காலத்திற்கு சேர்த்துக் கட்டவேண்டுமென்ருல் ஏறத்தாழ ரூ. 9.50 அதிகமாகச் செலுத்தவேண்டும். 18 ரூபாய் கிஸ்தி கட்டிவந்த விவசாயி ஒரே ஆண்டில் 10 ரூபாய் அதிகமாக தண்ணீர் தீர்வை கட்டவேண்டிய நிலையில் நிறுத்தப்பட்டிருக்கிருன். இந்த நிலையில் நெல்லையாவது ஒரு நியாயமான விலைக்கு விற்கும்படியான நிலை இருக்குமாஞல் விவசாயிகளுக்கு ஓரளவு திருப்திகரமாக இருக்கும். நெல் விலை தலைகீழாக இருக்கும் நிலையில் கிஸ்தி ஒரே ஆண்டுக்கு ஏக்கருக்கு பத்து ரூபாய் வீதம் அதிகரித்தால் நிச்சயமாக அந்தப் பகுதியில் ஒரு பெருத்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை நமது அரசு நல்ல முறையில் பரிசீலனை செய்து, இந்த நெல் வாங்குகிறவர் களாவது மூட்டை ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் விலையை உயர்த்திக் கொடுத்தால் விவசாயிகளுக்குச் சௌகரியமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த ஆண்டு நிறுத்தி வைத்திருந்த இந்த தீர்வையை ஒரே ஆண்டில் வசூல் செய்யாமல் மூன்று ஆண்டுகளாகப் பிரித்து ஆண்டுக்குக் கொஞ்ச மாக வசூல் செய்தால் விவசாயிகளுக்குச் சிரமம் இல்லாத நிலை ஏற்படும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

17th January 1964] *[திரு. எம். தண்டாயுதபாணி]*

குறிப்பாக, தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில், உர உபயோகம் குறைவாக இருப்பதால் அங்கு விவசாயம் நல்ல முறையில் பெருகவில்லை என்றும் கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உரத்தின் விலை அதிகமாக இருப்பதால் அந்த உரத்தை வாங்கி உபயோகிக்கக்கூடிய தன்மை விவசாயிகளிடத்தில் இல்லாத காரணத்தால்தான் உரம் உபயோகிக்கும் முறை குறைவாக இருந்து வருகிறது. அந்த உரத்தின் விலை தற்போது டன் ஒன்றுக்கு 100 ரூபாய் குறைந்திருப்பதாகத் தெரியவருகிறது. இன்னும் அதிகமான அளவுக்கு சாதாரண விவசாயிகள் உரம் வாங்கக்கூடிய நிலையில் உரத்தின் விலை குறைக்கப்பட்டால் தான் ரசாயன உரத்தை அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய நிலை ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, விவசாயத்திற்கு அத்தியாவசியமான சிறிய நீர்ப்பாசன திட்டத்தை அபிவிருத்தி செய்வது பற்றியும் கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெரிய நீர்ப்பாசன திட்டங்களை நாம் சிறப்பாக நிறைவேற்றிவிட்டோம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்த சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அமுல் செய்யப்படுவதில் ஏற்படும் கால தாமதங்கள் நிவர்த்தி செய்யப்பட்டால் இன்னும் நல்ல முறையில் அமையும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறபடி மின்சார அபிவிருத்தியில் நமது மாநிலம் முதன்மையான ஸ்தாபனத்தைப் பெற்றிருக்கிறது என்று மகிழ்ந்தாலும், இன்னும் மின்சார விஸ்தரிப்பு அளிக்கப்படவேண்டிய கிராமங்களுக்கு எல்லாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே அளிக்கபட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். மின்சாரத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்கிற ஜில்லாக்களிலாவது உடனடியாக எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்படவேண்டும்.

இறுதியாக நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக பல முக்கியமான ஆஸ்பத்திரிக் கட்டிட வேலைகள் எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டன. அம்மாதிரி இரண்டாண்டு காலமாக நிறுத்தி வைக்கப்பட்ட ஆஸ்பத்திரிக் கட்டிட வேலைகளையும், பஞ்சாயத்துகள் கட்டுகின்ற பொது மன்றக் கட்டிடங்கள், ஹெல்த் சென்டர் கட்டிடங்கள் ஆகியவற்றின் வேலைகளையும் உடனடியாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கவர்னர் பெருமான் ஆற்றிய உரையை மனப்பூர்வமாக ஆதரித்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: கனம் மாமன்றத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கவர்னர் பெருமான் இந்த அவையில் ஆற்றிய உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த திரு. பழனி அவர்கள் கொண்டுவந்து பிரேரிபித்திருக்கிறார்கள். அதை ஆதரித்துப் பேசுகின்ற பலர் கவர்னர் உரையில்

[திரு. கோ. சி. மணி] [17th January 1964

உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எதிர்க்கட்சிக் காரர்களாகிய நாங்களும் அவரது உரையில் உள்ள குறைபாடுகளைத் தான் சுட்டிக்காட்டிப் பேசுகின்றோம். குறிப்பாக கவர்னர் பெருமான் ஆற்றிய பேருரைக்கு நன்றியைத் தெரிவித்திருக்கிற பலரும் அவரது உரையைப் பாராட்டிப் பேசுவதற்கான நிலைமைகள் எதுவும் அதில் குறிப்பிடப்படவில்லை என்பதை நன்கு உணர்ந்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற முறையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பலர் நாங்கள் நடத்துகின்ற இந்தி எதிர்ப்பு இயக்கத்தைத் தாக்கிப் பேசி, அதுபற்றி நாங்களும் குறிப்பிட வேண்டியதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக நமது கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் பதவியில் இருந்து விலகியதைக் குறித்துக் குறிப்பிடுகையில், கடந்த பத்தாண்டு காலமாக மிகத் திறம்பட நிர்வாகம் நடத்தி, ஒரு ஸ்திரமான நிர்வாக அமைப்பை அவர் நமக்கு ஏற்படுத்தித் தந்திருப்பது ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும், நமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதில் என்னுடன் நீங்களும் ஒன்று சேரவேண்டும் என்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு மட்டும் அல்ல, இன்னும் விரிவான பெரிய பொறுப்பை அவர் ஏற்றிருக்கிறார் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு மாநில கவர்னராகப் பதவியேற்று மாநிலத்திலுள்ள கட்சிகள் அனைத்திற்கும் நடுநிலை வகிக்க வேண்டிய ஒருவர் மாநில சட்டசபையில் உரையாற்றுகிறபோது, நமது முன்னாள் முதல் அமைச்சர் இப்போது ஏற்றுள்ளது ஒரு விரிவான பெரிய பொறுப்பு என்று சொல்லியிருக்கிறார். குறிப்பாக காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு அவர் ஏற்றுள்ளது பெரிய பொறுப்பாக இருக்கலாம். அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றிருப்பது பெரிய பொறுப்பாகத் தோன்றும். அதையே அவர் பெரிய பொறுப்பை ஏற்றுள்ளதாக காங்கிரஸ்காரர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று சொல்ல முடியாது. அதையே அவர் ஏற்றுள்ளது பெரிய பொறுப்பு என்று கவர்னர் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் எந்த அரசியல் கட்சிக்கும் சம்பந்தப்படாது, எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட மாநில கவர்னர் தம்முடைய உரையில், நமது காமராஜ் அவர்கள் இப்போது ஏற்றுள்ளது பெரும் பொறுப்பு என்று பாராட்டி, அந்தப் பெரும் பொறுப்பில் இருக்கிற அவர் நமக்கும் தொடர்ந்து பெரும் உதவியை அளித்து வருவார் என்பதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்.

அதேசமயத்தில் கடந்த பத்தாண்டு காலமாக திறம்படப் பணியாற்றிய அவர் நமக்கு ஒரு ஸ்திரமான நிர்வாகத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறார் என்பதை அவர் சுட்டிக்காட்டி இந்த மன்றத்தைச் சேர்ந்தவர்கள் அதற்காக தம்முடன் சேர்ந்து நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லையென்றால் இந்தப்

17th January 1964] [திரு. கோ. சி. மணி]

பத்தாண்டுக் காலத்திற்கு முன்பாக இந்த ராஜ்யத்தில் ஒரு ஸ்திரமற்ற ஆட்சி நடந்ததா? இந்த பத்தாண்டு காலத்திற்கு முன்பாக வேறு எந்த அரசியல் கட்சியாவது இந்த ராஜ்யத்தை ஆண்டதா? இதே காங்கிரஸ் கட்சிதானே நாடு விடுதலை பெற்றதில் இருந்து இந்த ராஜ்ய நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தி வருகிறது. அப்போதும் திரு. காமராஜ் அவர்கள் இருந்தார்கள். அதே நேரத்தில் பல முதல் அமைச்சர்கள் அமைச்சரவைப் பொறுப் பேற்றுக்கொண்டிருந்தார்கள். அப்போதெல்லாம் நிர்வாகத்தில் ஒரு ஸ்திரமற்ற தன்மை இருந்திருக்கிறது என்று கருதுகிறார்களா? பொதுவாக நிர்வாகப் பொறுப்பை உயர்தர அதிகாரிகள்தான் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். அமைச்சர்கள் அவ்வப்போது இன்னவாறு காரியங்கள் நடைபெறவேண்டும் என்று ஆலோசனை கூறிவருகிறார்கள். ஆட்சியாளர்கள் மாறுபட்டாலும் அரசியல் கட்சிகள் மாறுபட்டாலும் நிர்வாகம் சீராகத் திறம்பட நிர்வாகிகளால் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் பத்தாண்டு காலத்திற்கு முன்னுள் வேறு எந்த அரசியல் கட்சியும் இந்த நிர்வாகத்தில் இருந்து நிர்வாகச் சீர்குலைவையும் அமைதியற்ற தன்மையையும் ஏற்படுத்தவில்லை. காங்கிரஸ் கட்சியேதான் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயல்பட்டு வருகிறது. அப்படி இருக்க கடந்த பத்தாண்டு காலத்தில்தான் நிர்வாகத்தில் ஒரு ஸ்திரத்தன்மை ஏற்பட்டது என்று கவர்னர் குறிப்பிட்டிருப் பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

மேலும் விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கிறது என்பது உண்மை என்பதை கவர்னர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இருந்தும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு உருப்படியாக எந்த நடவடிக்கையாவது எடுத்துக்கொள்வதற்கு வழிவகைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால் எதுவும் இல்லை. கூட்டுறவு மளிகைக் கடைகள், நியாயவிலைக் கடைகள் ஆகியவை அதிகமாகத் திறக்கப்படும் என்று மட்டும்தான் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். வேறு எந்தவிதமான பரிகாரமும் சொல்லப்படவில்லை. இது ஒரு இடைக்கால பரிகாரமாக இருக்கலாமேதவிர ஒரு ஸ்தரமான பரிகாரமாக ஆகாது என்பதை அவரே ஒத்துக்கொண்டிருக்கிறார். தவிர, மக்களுக்குத் தேவையான அத்யாவசியப் பண்டங்கள், மக்களுக்குத் தேவைப்படுகிற காலத்தில் கூட்டுறவு சங்கங்களில் கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை. பல நேரத்தில் தேவைப் படுகிற பொருள் அங்கே இருப்பதில்லை. நியாயவிலைக் கடைகளில் கண்ட்ரோல் விலைக்குக் கிடைக்கிறபோது மற்ற கடைகளில் தேவைப்படுகிற அளவு கிடைப்பதுபோல இங்கு தேவைப்படுகிற அளவு கிடைப்பது இல்லை. மேலும் அது நல்ல ரகமானதாகவும் இருப்பது இல்லை. இந்த ஆண்டு மழை பெய்த நேரத்தில் அரிசியின் விலை ஒரு ரூபாய் பன்னிரண்டணு விற்றது. அதே நேரத்தில் ஒரு ரூபாய் ஏழணு, ஒரு ரூபாய் எட்டணு வரையில் இங்கேயும் விற்றிருக் கிறார்கள். ஆக மக்களைப் பொறுத்தவரையில் விலைவாசி ஏற்றத் திலிருந்து அவர்களுக்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் கிடைப் பதற்கு வழிவகைகளைக் காணோம். அதுமட்டுமல்ல. இவ்வாண்டு

[திரு. கோ. சி. மணி] [17th January 1964

கொள்முதல் கட்டாயமாகச் செய்யப்படவேண்டும் என்கிறபோது தஞ்சை மாவட்டத்தில் 20 சத விகிதம் என்றும், மற்ற மாவட்டங்களில் 15 சத விகிதம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது ஓரளவு தஞ்சை மாவட்டத்திற்குப் பெருமை அளிக்கக்கூடியதுதான் என்றாலும் எதற்காக தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 20 சத விகிதம் கொள்முதல் செய்யவேண்டும்? அண்மையில் ஏற்பட்ட பெரும் புயலால், அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தால் தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக பாபநாசம், சீர்காழி போன்ற பல தாலுக்காக்களில் பயிர்கள் சேதம் அடைந்திருக்கிறது. விவசாய மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இதுபற்றி அமைச்சர்களிடத்தில் சொன்ன போது, கொடுத்த கடன்களை இவ்வாண்டு தரவேண்டாம், அடுத்த ஆண்டு தாருங்கள் என்றார்களே தவிர வஜா செய்தார்களா? அல்லது வரியையாவது இவ்வாண்டு வேண்டாம் என்று வஜா செய்தார்களா? அதுபற்றி எதுவும் கவர்னரது உரையில் காணப்பட வில்லை. ஆனால் அந்த ஜில்லாவில் மட்டும் 20 சத விகிதம் கட்டாயக் கொள்முதல் செய்யப்படும், மற்ற மாவட்டங்களைவிட, 5 சத விகிதம் அதிகமாகக் கொள்முதல் செய்யப்படும் என்று குறிப்பிட்டிருக் கிறார்கள் என்றால் இது நியாயமற்றது. அந்த மாவட்டம் மழை யினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. புயலினால் பாதிக்கப்பட்டிருக் கிறது. நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி யெல்லாம் அரசாங்கத்திற்குப் பல புகார்கள் அனுப்பப்பட்டிருக் கின்றன. அமைச்சர்களும் அதைக் கவனித்து ஆவன செய்வதாக உறுதி தந்திருக்கிறார்கள். இருந்தும், அவற்றுக்குப் பரிகாரமாக உதவியாக எதுவும் இதுவரை செய்யப்படவில்லை. அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடாது, அந்த மாவட்டத்தில் மட்டும் 5 சத விகிதம் அதிகக் கொள்முதல் செய்யப்படும் என்று சொன்னால் அது அந்த மாவட்ட விவசாய மக்களுக்கு நன்மை செய்ததாக ஆகாது.

5–30 p.m. ". . . நாடு முழுவதும் போற்றப்படுகின்ற இந்த ஒற்றுமை உணர்ச்சி தொடர்ந்து நீடிக்கவேண்டுமென நான் வேண்டுகிறேன். இதையொட்டி அரசாங்கமும் பலதரப்பட்ட அரசியல் கட்சிகளுக் கும் பூரண பேச்சுரிமையையும் செயலுரிமையையும் தொடர்ந்து வழங்கி வரும். ஆனால், நமது அரசியல் சாசனத்தில் பொறிக்கப் பட்டுள்ள இந்த உரிமையை, அச்சாசனத்திற்கே அவமதிப்பு காண் பிக்க முயலும் எக்கிளர்ச்சிக்கும் அளிக்க முடியாது" என்று கவர்னர் பெருமான் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த முறையில், அரசியல் சட்டத்தின்படி கொடுக்கப்பட்டுள்ள உரிமையை அளிக்க முடியாது என்று அரசியல் சட்டத்தில்கூடக் குறிப்பிடப்படவில்லை. அப்படி அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் அரசியல் சட்டத்திற்கோ, தேசியச் சின்னங்களுக்கோ அவமதிப்புத் தரக் கூடியவர்களைத் தண்டிப்பதற்கென்று தனியாக ஒரு சட்டம் அவசியமே இல்லை. ஆனால் அரசியல் சட்டத்தையே கேவலப்படுத் தும் முறையில், அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் விதத்தில் நம்முடைய மாநில கவர்னர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டம் 19-வது பிரிவில் ஒரு மனிதன் எண்ணியதை எடுத்துப் பேசவும்,

எழுதிக்காட்டவும், ஆயுதமின்றிக் கூட்டம் கூட்டி, சங்கங்கள் அமைத்துக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் கொடுக்கப் பட்டிருக்கும் அடிப்படை உரிமையைப் பறிக்கும் விதத்தில் நம்முடைய மாநில கவர்னருடைய பேச்சு அமைந்து இருக்கிறது. கவர்னர் பெருமான் அவர்கள் எல்லோருக்கும் பொதுவானவர் என்று எண்ணிக் கொண்டிருக்கும் சமயத்தில், அவர் போகிற போக்கில்தான் ஒரு கட்சிக்குச் சொந்தக்காரர் என்பதைப் போல் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மன்றம் நிறைவேற்றிய ஒரு சட்டப்படி அரசியல் அமைப்புச் சட்டத்தை அவமதிப்பது குற்றமாகும். அதைப்பற்றிக் கவர்னர் பெருமான் குறிப்பிட்டிருந் தால் என்ன தவறு? அதற்காகக் கவர்னர் பெருமான் ஒரு கட்சியை ஆதரிக்கிறார்கள் என்று பேசுவது முறையல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : இதையொட்டி இந்த மன்றத்திலே பலர் பேசுகிறபோது, இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்துகிற எங்களுக்கு எவ்வளவு கடுமையான தண்டனை கொடுக்கவேண்டுமோ அவ்வளவு கடுமையான தண்டனை அளிக்கப்பட வேண்டுமென்று பேசியபோதெல்லாம் முதலமைச்சர் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, நாங்கள் அதுபற்றிப் பேசும்போது 'இந்த விஷயம் கோர்ட்டிலே இருக்கிறது, ஆகவே அது பற்றிப் பேசக் கூடாது' என்று முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நான், கவர்னர் பெருமானைக் குறைத்துப் பேசவேண்டுமென்ற எண்ணம் கொண்டு கூறவில்லை.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அவர்கள் பொதுவாகப் பேசலாம். கவர்னர் அவர்களை ஒரு கட்சிக்குச் சொந்தக்காரர் என்று சொல்லக்கூடாது.

திரு. கோ. சி. மணி : 'சொந்தக்காரர் போல' என்று சொன் னேன்.

கனம் சபாநாயகர் : 'சொந்தக்காரர் போல' என்றால் என்ன அர்த்தம்? 'கள் குடிப்பவர் போல' என்று சந்தேகப்படுகிற அளவுக்குச் சொல்வது மாதிரிதான். அது சரியல்ல.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் கவர்னரை அவமதிப்பதோடுகூட, அவருடைய பேச்சு இந்த மன்றத்தையே அவமதிப்பதாக இருக்கிறது. அவர் அதைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்.

MR. SPEAKER : What the Governor has stated is that any disrespect to the Constitution cannot be tolerated. But the hon. Member wants to take it that he meant 'me' or the ruling party and therefore he has joined the party. He did not mean that. Governor has told the policy of Government. The hon. Member

can say that he is not agreeable to that. He can condemn the policy of Government. But to go on saying as if the Governor has sided with the ruling party, viz., Congress Party is absolutely baseless and undesirable to be spoken in this Assembly.

திரு. கோ. சி. மணி: சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றிக் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இந்த இலாகா சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் சென்ற தடவை பேசும்போது 'தஞ்சை மாவட்டத்தில் சிறு நீர்ப்பாசனத் திட்டத்தைப்பற்றி அதிகப்படியான கவனம் இதுவரை செலுத்தப்படவில்லை, அது பற்றிய நடவடிக்கைகளை உடனே எடுத்துக் கொள்ளவேண்டும்' என்று பேசிய அமைச்சர் அவர்கள் ஓராண்டுக்குப் பிறகும் என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் இதுவரை சிறு நீர்ப்பாசனத் திட்டம் எதுவும் தஞ்சை மாவட்டத்திலே நிறைவேற்றப் படவில்லை. இதுபற்றி அமைச்சர் அவர்கள் உடனடியாக அதிகாரிகளுடன் கலந்து பேசி எங்களுடைய ஜில்லா பலன் அடையக்கூடிய வகையில் திட்டங்களை உருவாக்கித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

* **திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தகுதிமிக்க சட்டமன்றத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையில், விவசாயிகளுடைய குறைகளைப் போக்குவதற்கு வேண்டிய மார்க்கங்களைச் சொல்லாமல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய பல திட்டங்களை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு சீன ஆக்கிரமிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் எல்லாக் கட்சியைச் சேர்ந்த அரசியல் கட்சித் தலைவர்களும் ஒத்துழைத்ததைப் பாராட்டி பேசியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் அகவிலை குறையவேண்டுமென்று போராட்டம் நடத்தி அதன் காரணமாக சட்டமன்ற உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் பலரும் சிறையில் இருந்த நேரத்தில், கம்யூனிஸ்டு சீன வெறியர்கள் இந்த நாட்டில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற பெரும் போரைத் தொடங்கிய காரணத்தால், நாங்கள் அடைந்த கொடுமைகளையெல்லாம் மறந்து. வேற்று நாட்டானுக்கு என்றைக்கும் நாங்கள் காட்டிக் கொடுக்க மாட்டோம் என்ற தமிழ்ப் பண்போடு, தமிழன் என்ற உணர்ச்சியோடு சீனரை விரட்ட எல்லா வகையிலும் ஒத்துழைக்க முன்வந்தோம். அதைக் கவர்னர் பெருமான் பாராட்டவில்லையே என்ற வருத்தம் எனக்கு இல்லை; ஆனால் சென்ற ஆறாண்டு காலத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் மிகக் கண்ணியத்தோடு நடந்து ஒற்றுமையை நிலைநிறுத்திக் காட்டியிருக்கிறார்கள் என்று கவர்னர் பெருமான் அவர்கள் பெருமையோடு சொல்லி, அதற்குக் கீழே நாங்கள் சட்ட எரிப்புக் கிளர்ச்சியிலே ஈடுபட்டால் அதை அனுமதிக்க முடியாது என்ற வகையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் தங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன்—இந்த நாட்டிலே தமிழ் உணர்ச்சியுள்ள ஒவ்வொருவரும் நிச்சயமாகத் தமிழுக்காகப்

17th January 1964] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

போராடுவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய போராட்டத்தைப்பற்றி ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தங்கள் மூலமாகக் கவனப்படுத்த விரும்புகிறேன். நம்முடைய மதிப்புக்குரிய காமராஜ் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராகி, புவனேஸ்வரத்திலே தமிழிலே பேசியபோது அங்கு இருந்த இந்தி வெறியர்களும் மற்றவர்களும் காது கொடுத்துச் சகித்துக்கொண்டு கேட்டிருக்கிறார்கள் என்றால், அது நாங்கள் நடத்துகிற போராட்டத்தின் வெற்றியே தவிர வேறு ஒன்றும் இல்லை. நேற்றுகூடப் பார்த்தேன்—'பாராளுமன்றத்திலே குடியரசுத் தலைவர் அவர்கள் ஆற்றவேண்டிய பேச்சு ஆங்கிலத்திலே இருந்தால் நாங்கள் வேறு விதமாக நடப்போம்' என்று இந்தி வெறியர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மதிப்புக் குரிய காமராஜ் அவர்கள் தமிழிலே பேசியதை அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் அது எங்களால்தான் என்பதைத் தயவுசெய்து எல்லோரும் நினைத்துப் பார்க்கவேண்டும்.

அடுத்து, நம்முடைய மதிப்புக்குரிய முன்னாள் முதலமைச்சர் காமராஜ் அவர்களை கவர்னர் பெருமான் அவர்கள் பாராட்டியிருக் கிறார்கள். நாம் எல்லாம் சேர்ந்து அவர்களைப் பாராட்டத் தவறிய ஒரு காரியத்தைக் கவர்னர் பெருமான் செய்திருக்கிறார் என்றே நான் நினைக்கிறேன். நாம் செய்யாததை அவர்கள் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். ஆனால் கனம் காமராஜ் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்திலே, 'பதவியைத் துறக்கிறேன்' என்று அறிவித்திருந்தால் நாமும் இந்த மன்றத்திலே பாராட்டி யிருக்கலாம்.

அடுத்து கவர்னர் பெருமான் அவர்கள் திட்ட வேலைகளைப்பற்றி குறிப்பிட்டு திட்டமிட்டதைவிட அதிக அளவுக்குச் செலவு செய் திருக்கிறோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதிக மான பணம் செலவழித்த அளவுக்குத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு பலன் கிடைத்திருக்கிறதா என்பதையும் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது செலவு செய்யப்பட்ட அளவுக்குப் பலன் கிடைக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். பொதுவாக, விவ சாயிகளுக்காக அதிக உரங்கள் தரப்படுகிறது. அவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பல காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. அதாவது விவசாயி களுக்கு வழங்கப்பட்டிருக்கும் கடன் வசூல்பற்றி என்னுடைய மாவட்டத்தில் பெரும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அதாவது 14—5—1963-க்குப் பிறகு பம்பு செட்டுகளுக்கு வாங்கப்பட்ட கடன் களை பத்தாண்டுத் தவணைகளில் கொடுக்கலாம் என்றிருக்கிறது. அதற்கு முன்னர் வாங்கிய கடன்கள் மூன்று ஆண்டுகளில் கொடுக் கப்படவேண்டுமென்றிருக்கிறது. விவசாயிகள் மிகப் பாடுபட்டும் அவர்களால் தற்போது கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. ஆனால் 1963-க்குப் பிறகு வாங்கியவர்கள் பத்து ஆண்டு தவணைகளில் கடனைத் திருப்பிக் கொடுக்கலாம் என்றிருப்பது கண்டு அவர்கள்

வேதனை அடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது பேச்சோடு பேச்சாக பேசுவதுதான் சட்டசபை பேச்சு என்றிருக்காமல் காரியத்தில் இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, 14—5—1963-க்குப் பிறகு கொடுக்கப்பட்ட கடன்களை பத்து ஆண்டுத் தவணையில் கொடுக்கலாம் என்றிருக்கிறது. அதற்கு முன் வாங்கிய கடன்களை மூன்று ஆண்டுத் தவணையில் கொடுக்கவேண்டு மென்று இருக்கிறது. எனவே அதையும் பத்து வருடத் தவணை யாக நீடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, கவர்னர் அவர்கள் உரையில் தஞ்சாவூரில் 20 சத விகிதம் என்றும், பிற மாவட்டங்களில் 15 சத விகிதம் என்றும் இருக்கிற கொள்முதல் திட்டத்தை தயவுசெய்து கை விட்டுவிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன். அது நீக்கப்பட்டால்தான் விவசாயிகள் நல்ல பலனைப் பெற முடியும். இதனால் விவசாயிகளுக்கு ஏதாவது அதிக மான தொகை வருகிறதா என்று பார்த்தால் வரவில்லை. அவர்களிட மிருந்து வியாபாரிகளும் கொள்முதல் செய்கிறார்கள், மில்காரர் களும் கொள்முதல் செய்கிறார்கள். அரசாங்கத்திற்கு இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று விதி இருக்கிறது என்று கூறி கொள்முதல் செய்கிறார்கள். இதனால் விவசாயிக்கு என்ன லாபம்? ஆகவே இந்த 20 சத விகிதம், 15 சத விகிதம் என்பதை எடுத்துவிட்டால் விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும். ஆக விலை உயர்வை கட்டுப்படுத்த கூட்டுறவு முறை பின்பற்றப்படுவதாக சொல்லப்படு கிறது. நியாய விலைக் கடைகள் திறக்கப்படுகிறது என்று சொன்னாலே நாட்டில் அநியாய விலைக் கடைகள் இருக்கிறது என்று தான் அர்த்தம். அநியாய விலைக் கடைகள் இருந்தால்தான் நியாயவிலைக் கடைகள் திறக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி நடந்துகொண்டு இருக்கின்றன என்றால், சர்க்கரை வேண்டுமென்றால் அதோடுகூட உளுத்துப்போன கோதுமை நான்கு கிலோ வாங்கினால்தான் இரண்டு கிலோ சர்க்கரை கொடுப் போம் என்று சொல்கிறார்கள் அங்கு. ஓட்டு இன்றி சாமான்களை விற்பதில்லை என்ற முறை சில கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து வருகிறது. எல்லோருக்கும் எல்லாப் பொருள்களும் சரியான விலையில் கிடைக்கிறது என்ற நிலை இல்லை. ஆகவே 500 நியாய விலைக் கடைகள் திறந்தால் எல்லாம் சரியாகப் போய்விடுமென்று சொல்வது சரி அல்ல. எங்கள் இந்தி எரிப்புப் போராட்டத்தைப் பற்றி குறிப்பிடும்போது மதிப்பிற்குரிய மாதா கவுடர் அவர்கள் ஆத்திரத்தோடு இப்படித்தான் இருக்கவேண்டும், நாங்கள் ரவுடி ஸத்தை எப்படி அடக்கினோம் பார்த்தீர்களா என்று சொன்னார்கள். அது ரவுடிஸம் அல்ல. நல்ல பண்புள்ளவர்கள், பண்போடு இருக் கிறார்கள் என்று கவர்னர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே கவர்னர் வேண்டாமென்று மறைமுகமாக எங்களோடு சேர்ந்து அவர்கள் சொல்கிறார்களோ என்று நினைக்கிறேன். அமைதியான கிளர்ச்சியை ரவுடிஸம் என்கிறார்கள் அவர்கள்.

கனம் சபாநாயகர் : கிளர்ச்சியை ரவுடிஸம் என்று சொல்ல வில்லை. அப்படி சொல்லியிருந்தால் நானே பிடித்திருப்பேன். பஸ்களுக்கு தீ வைத்தார்கள். இதுமாதிரி ரவுடிஸம் நடந்தது, தக்க தண்டனை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

17th January 1964]

திரு. அ. பெ. தர்மலிங்கம் : கல்கத்தாவில் நடப்பதுபோல் தமிழ் நாட்டில் அப்படி

கனம் சபாநாயகர் : பெர்ஸனலாக ஆரம்பித்திருந்தால் நான் விட்டிருக்கமாட்டேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது மட்டும் நாங்கள் இந்தியை எதிர்க்கவில்லை. இந்த நாட்டில் இந்தி திணிக்கப்படும்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் அதை எதிர்த்து வந்திருக்கிறது. 1938-ல் ஆச்சாரியார் மந்திரி சபை இருந்த காலத்தில் அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் இல்லாவிட்டாலும், பெரியார் ராமசாமி அவர்கள் தலைமையில் 1,100 பேர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து சிறை சென்றிருக்கிறோம். 1944-ல் இந்தி திணிக்கப்பட்டபோது கும்பகோணம் தெருக்களில் எங்கள் குருதியைக் கொட்டி இந்தி திணிப்பை தடுத்து நிறுத்தினோம். அதே போன்று இப்போது இந்த முறையை பின்பற்றியிருக்கிறோம் இந்தித் திணிப்பைத் தடுக்க. இது பலருக்கு பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் அமைதியாக எல்லா மாவட்டங்களிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிற முறையில் போராட்டம் நடந்து வருகிறது. எங்கள் நடவடிக்கைகள் ஒரே மாதிரியாக இருந்தாலும் எக்காரணத்தினலோ அரசினரின் நடவடிக்கைகள் அவ்வப்போது மாறிக் கொண்டேயிருக்கிறது. தூண்டிவிட்டார்கள் என்று எங்கள் சட்டமன்ற கட்சித் துணைத் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இப்படி இப்படி போக வேண்டும், அமைதியாகச் செல்ல வேண்டும் என்று கூறி 17-வது பிரிவைத்தான் கொளுத்துகிறார்களா என்று பார்த்து அதன் பிறகு கொளுத்தி எரிவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போலீஸார் இதை தூண்டி விட்டதாகாதா ? இந்தியால் தமிழுக்கு ஆபத்தா என்ற வாதத்திற்கு இடமில்லை. மாதா கவுடர் அவர்கள் தமிழ் கெடாது என்பதைப் பற்றிச் சொன்னார்கள்.

"இந்தியை நம் நாட்டில் நுழைய விடுவோமானால் இந்த இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சி, நாகரிக முற்போக்கு வளர்ச்சி பூராவும் அழிந்துபோகும் . . . ஆகவே கடைசி மூச்சுள்ளவரை ஒவ்வொரு தமிழனும் இதை எதிர்த்தே தீரவேண்டும்".

—தமிழ்த் தென்றல்—திரு. வி. க.

"இப்பொழுது அரசினர் கட்டாயப்படுத்துகிறார்களென்பதற்காக தமிழர்கள் இந்தியை ஏற்றுக்கொண்டால் அது தமிழருக்கு மிகப் பெருங்கேடாக முடியும்."

—முது பெரும்புலவர்—மயிலை சிவமுத்து.

"எந்த மொழி நுழைக்கப்பட்டாலும் தமிழர்களின் உயிரியல் உரிமைக்கு அது மிகுந்த ஊறுபாடு விளைப்பதாகவே இருக்கும்."

—பன்மொழிப் புலவர்—கா. அப்பாதுரை.

"இந்தி மறைமுகமாகவோ, அன்றி கட்டாயமாகவோ புகுத்தப்பட்டால் தமிழ் கெடுமென்பதில் ஐயமில்லை."

—பெரும்புலவர்—மயிலை சீனிவேங்கடசாமி.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [17th January 1964

"இந்தியைப் பொது மொழியாக்க முயல்வோர் நம்மனோர்க்கு உண்மையில் உதவி செய்வோர் ஆவரோ ? ஓர்ந்து பார்மின் !"

—தமிழ்க்கடல்—மறைமலேயடிகள்.

"இந்தி ஆட்சி மொழியாகத் திணிக்கப்படுவதால் தமிழ் கெடுமா என்ற கேள்வி, 'நஞ்சுண்டால் சாவானா ?' என்பது போலாகும்."

—பேராசிரியர்—சி. இலக்குவனர்.

இப்படிப்பட்டவர்களைவிட இவர் தமிழ் தெரிந்தவர், தமிழுக்காக பாடுபடுபவர் என்று நான் சொல்லமுடியாது. இப்படிப்பட்டவர்கள் சொன்ன பிறகும் அதை மாதா கவுடர் அவர்கள் ஏற்றுக் கொள்ளமுடியாது என்று சொன்னால் வேதனைப்படத்தான் வேண்டியிருக்கிறது. பொங்கல் திருநாளை எல்லோரும் கொண்டாடிக் கொண்டிருக்கும்போது தமிழ் காக்க இந்த சட்டமன்றத்திலே இருக்கவேண்டிய திரு. மதியழகன் அவர்களும், மேல் சபையில் இருக்கவேண்டிய பேராசிரியர் அன்பழகன் அவர்களும் சிறையில் நலிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தோழர்கள் சிறையிலே வாடுகிறார்கள். தமிழ் காக்கும் உணர்ச்சியில் அவர்கள் சிறையில் இருக்கிறார்கள், எங்களுக்கும் அந்த உணர்ச்சியை கொடுக்கும் அவர்களுக்கு என் நன்றியையும் வீர வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. சி. பொன்னுசாமி:** கனம் சபாநாயகர் **அவர்களே,** கவர்னர் பெருமான் அவர்கள் நிகழ்த்திய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நமது மதிப்பிற்குரிய முன்னாள் முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் தலைமையில் பத்து ஆண்டு காலமாக என்னென்ன முறையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை புள்ளி விவரங்களோடு எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள் கவர்னர் அவர்கள் தமது உரையில். அதில் எதுவும் தப்பு என்று எதிர் கட்சியினர் யாரும் சொன்னதாக தெரியவில்லை. புள்ளி விவரத்திற்கு செல்லாமல் பொதுவாக பேசுவதினால் என்ன தெரிகிறது? நம் தமிழ் நாட்டில் விவசாயம் நல்லமுறையில் முன்னேறியிருக்கிறது என பதை யாராலும் மறுக்க முடியாது. ஆகவே மேலும் முன்னேற வேண்டுமென்றால், இன்னும் சில புதியத் திட்டங்களை கொண்டுவரவேண்டும் என்ற என்னுடைய சில கருத்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக பாசனத் துறையில் நாம் வளர்ச்சி அடைந்து வருகிறோம். அதேபோன்று விவசாயத்திற்கு வேண்டிய பல கருவிகள் விலை அதிகமாக கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. பல கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இவ்விதம் கடன்கள் கொடுக்கப்படுவதற்கு பதிலாக, விவசாயத்திற்கு வேண்டிய பொருட்களை எல்லாம் ஸப்ஸிடி விலையில் (குறைந்த விலையில்) விவசாயிகளுக்குக் கொடுப்பது மிகவும் நலமாக இருக்கும் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

17th January 1964] *[திரு. சி. பொன்னுசாமி]*

நீர்ப்பாசன விஷயமாக இப்போது இருக்கிற நிலைமையை எடுத்துக்கொண்டு பார்த்தால், இப்போதுள்ள குளங்கள், ரிசர்வாயர்கள் இவைகளில் எல்லாம் சாதாரணமாக மழை காலங்களில் வெள்ளம் பெருகும்போது, அதிக அளவில் தண்ணீர் சேதப்படுகிறது. இதை தடுக்கின்ற முறையில் பல புதிய குளங்களை அமைக்க முடியுமா என்பதை அரசாங்கம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். பல இடங்களிலும் குளங்கள் அமைப்பதற்கேற்ற பல இடங்கள் இருக்கின்றன. இந்த இடங்களில் குளங்கள் அமைத்தால் தண்ணீர் அதிகமாக வரும் போது அதை தேக்கி வைத்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

மேலும் வருங்காலத்தில், சேலம் இரும்புக்கனி, நெய்வேலி நிலக்கரி இவைகளைக் கொண்டு நமது பொருளாதாரத்தை முன்னேற்றிக்கொள்ள முடியும் என்று நாம் நம்பலாம். சாதாரணமாக ஒரு நாட்டுக்கு மூன்று முக்கிய அம்சங்கள் தேவை. ஒன்று நிலக்கரி, இரண்டு இரும்புக்கனி, மூன்று எண்ணெய். இந்த மூன்றும் நம் நாட்டில் இருப்பதால், நிச்சயமாக வருங் காலத்தில் நம் நாடு வளர்ச்சி அடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நம்முடைய நாட்டிலேயே வேண்டிய அளவிற்கு இரும்புகிடைத்துவிட்டால், விவசாய மக்களுக்கு புதிய முறையில், நவீன முறையில் கலப்பைகளை நாம் தயாரித்து கொடுக்க முடியும். அதன் மூலமாக இப்போது விவசாயம் செய்யாத இடங்களை எல்லாம் விவசாயத்திற்கு கொண்டு வர முடியும். விவசாய உற்பத்தியை பெருக்குவதற்கான வாய்ப்பு ஏற்படும். அந்த முறையில் சேலம் இரும்புக்கனி, நெய்வேலி நிலக்கரி, காவேரிபடுகையில் கிடைக்கும் என்று கருதப்படுகிற எண்ணெய் இவைகள் எல்லாம் பிற்காலத்திற்கு நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்பதற்கு ஐயமில்லை.

அடுத்ததாக, தொழில் வளத்தை எடுத்துக்கொண்டால், பஞ்சாப்பும், சென்னையும் சரி சமமாக இருக்கிறது என்று சொல்லியிருப்பதைப்பார்த்தால், தமிழ்நாடு தொழில் துறையில் வளருகின்றது என்பதை நாம் காணமுடிகிறது. இதைப் பார்த்து நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் நாம் முன்னேறி வருகிறோம். பல தொழில் திட்டங்களை தீட்டி, அதன்படி நாம் வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட சில விஷயங்களில் நாம் கவனமாக இருக்கவேண்டும். அதாவது சில தினங்களுக்கு முன்னால் ஒரு மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறியிருப்பதை பார்த்தால், . . . என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்றால் . . . அணுக்குண்டுக்கோ அல்லது ஹைட்ரஜன் குண்டுக்கோ நாம் பயப்படவேண்டியதில்லை. மக்கள் பெருக்கத்தைப்பார்த்துத்தான் நாம் பயப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டின்மீது சமீபத்தில் சைனா நடத்திய பயங்கரமான தாக்குதலை நாம் பார்த்தோம். காரணம் அந்த நாட்டில் ஜனப் பெருக்கம் அதிகம்; அவர்

[திரு. சி. பொன்னுசாமி] [17th January 1964

களுக்கு வேறு கதியும் கிடையாது. சுமார் 70 கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்களை எங்கே மோத விடுவது என்று தெரியாமல் இருந்தார்கள். மக்கள் அதிகமானால் இம் மாதிரியான நிலை ஏற்படக்கூடும். ஆகவே மக்கள் பெருக் கத்தை குறைக்கின்ற அளவில் 'பாமிலி பிளானிங்' முறையை மக்கள் சரியாக கடைபிடிக்கவேண்டும். ஜப்பான் போன்ற தேசங்கள் எல்லாம் இம்முறையில் ஜாக்கிரதையாக இருந்த காரணத்தினால்தான் இன்று நல்ல முறையிலே முன்னேறி இருக்கிறார்கள். அந்த முறையில் நாமும் வாழ்ந்தால்தான் எதிர்காலத்தில் நமது சந்ததியார்கள் நல்வாழ்வு வாழ முடியும் என்பதை எடுத்துச்சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள், மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள், முதல் மந்திரியாக இருந்த திரு. காமராஜ் அவர்கள் பெரிய பதவிக்குச் சென்றிருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். அகில இந்திய ரீதியில் இப்பெரிய பதவியை ஏற்றிருப்பது மிகவும் பெருமைக்குரிய விஷயமாகும். கவர்னர் அவர்கள் கட்சி சார்பற்ற முறையில் இதை சொல்லி யிருக்கிறார்கள். அதோடு எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும்கூட, அரசியல் சட்டத்தை எல்லோரும் மதித்து நடக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் இங்கு பேசிய பல நண்பர்கள் சட்ட எரிப்பு போராட்டத்தைப் பற்றி சொன்னார்கள். நாட்டுப்பிரிவினை சட்டம் வந்தபோது யாரும் அதை கொளுத்த முன் வரவில்லை, ஆனால் இப்போது இந்திச் சட்டத்தை மட்டும் எரிக்க முன் வருகிறார்கள். இது என்ன விபரீத வேடிக்கையாக இருக்கிறது என்றுதான் நாம் எண்ணவேண்டியிருக் கிறது. நாம் எல்லோருமே சட்ட மன்றத்திற்கு வரும்போது, இங்கு மட்டுமல்ல, மத்திய பார்லிமென்டில் போகின்றவர்களும் 'ஓத் ஆஃப் அலிஜியன்ஸ்' எடுக்கிறார்கள். ஆண்டவன் பெய ரால், ஆண்டவன் மீது நம்பிக்கையில்லாதவர்கள்—மனசாட்சி யின் பெயரால் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு பணியாற்று வேன் என்று பிரமாணம் செய்துதான் இங்கு வந்திருக் கிறார்கள். அவர்களே இப்போது அரசியல் சட்டத்தைக் கொளுத்தப் போகிறோம் என்று சொல்வதைப்பார்த்தால் இது எந்த ஜனநாயகத்தைச் சேர்ந்தது என்று தெரியவில்லை. மக் களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள், மக்கள் ஆட்சி யில் மக்களுக்காக இயற்றப்பட்ட சட்டத்தை கொளுத்து வோம் என்று சொன்னால் அது வேடிக்கையாகத்தான் இருக் கிறது. இது ஜனநாயகமா அல்லது சர்வாதிகாரமா, அல்லது சர்வாதிகாரத்தைத் தூண்டுவதற்காக நடைபெறுகிறதா என்ப தைத்தான் நம்மால் தெரிந்து கொள்ள முடியவில்லை. நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்வது, இனிமேலாவது தயவுசெய்து உங்கள் மனதை மாற்றிக் கொள்ளுங்கள். இந்த நாட்டின் பல கோணங்களிலிருந்தும் எதிரிகள் நம் நாட்டின்மீது வருவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதமான ஒரு அபாய நிலை ஏற்பட்டிருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். இதை நீங்களும் ஒத்துக்கொண்டீர்கள். ஆனால் இப்போது

17th January 1964] [திரு. சி. பொன்னுசாமி]

நீங்களே இதற்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய முறையில் செயலாற்றுவது சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சமயத்தில் நமது ஒற்றுமையைத்தான் நாம் பலப்படுத்த வேண்டும். அதுதான் இப்போது நமக்கு தேவை என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்......

கனம் சபாநாயகர் 'நீங்கள், நீங்கள்' என்று சொல்வது சபாநாயகரைத்தான் குறிக்கும். ஆகவே அங்கத்தினர் அவர்கள் பிற அங்கத்தினர்களை 'நீங்கள், நீங்கள்' என்று குறிப்பிட்டுப் பேசக் கூடாது.

திரு. சி. பொன்னுசாமி: மன்னிக்க வேண்டும், "நீங்கள்" என்று நான் தங்களைக் குறிப்பிடவில்லை. உங்கள் மூலமாகத்தான் அவர்களுக்குச் சொல்லுகிறேன். ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்வது, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கின்றவர்கள், நன்றாகப் படித்தவர்கள், சட்டம் தெரிந்தவர்கள். நமது தேசத்தின் பார்டரில் எதிரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரிப்பட்ட நிலையில் நம் நாட்டுக்குள்ளேயே எந்தவிதமான குழப்பமும் ஏற்படுத்தக்கூடாது. அது நமது நாட்டுக்கு மிகவும் கெடுதியை விளைவிக்கும் என்பதை வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 1938-ல் கொண்டு வந்ததுபோல் இப்போது கட்டாய இந்தி கொண்டு வரப்படவில்லை. இதை அவர்களும் ஒத்துக் கொள்வார்கள். இப்போது இந்தியை யாரும் கட்டாயமாக கொண்டு வரவில்லை. 1975 வரைக்கும் ஒத்தி வைத்திருக்கிறார்கள். மக்கள் விரும்பும்போதுதான் இது கொண்டு வரப்படும். இதைப்பற்றி தலைமை அமைச்சர் பண்டித நேரு அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதில் இப்போது எந்தவிதமான மாற்றமும் ஏற்படுத்தவில்லை. ஆகவே இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தவேண்டியதில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் பல திட்டங்களைப் போட்டு வெகுவாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். நாம் இன்னும் பல துறைகளில் முன்னேற வேண்டியிருக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மத்திய சர்க்காரிடத்தில் நம் மாநில சர்க்கார் சில திட்டங்களை எடுத்துக் கூறினால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதாவது மதிப்பிற்குரிய நண்பர் திரு. சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் போக்குவரத்து முன்னேற்றத்தைப்பற்றி சொல்லும்போது, கங்கை நதியை கன்னியாகுமரியோடு சேர்க்கவேண்டும் என்று சொன்னார்கள். அது இப்போது நடைபெறாவிட்டாலும், கன்னியாகுமரியிலிருந்து பம்பாய் வரைக்கும் பெரிய அளவில் போகின்ற நேஷனல் ஹைவேஸ் பாதையையும், அதேபோன்று கன்னியாகுமரியிலிருந்து கல்கத்தாவுக்கு பெரிய பாதையையும் சரியாக அமைத்தாக வேண்டும். 6-00 p.m.
இதற்காக சில பாலங்கள் அமைக்கவேண்டியிருந்தால் அவைகளையும் அமைத்துக் கொடுத்து இந்த பாதைகளை ஏற்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும். அதே நேரத்தில் கங்கை நதியை

[திரு. சி. பொன்னுசாமி] [17th January 1964

கன்னியாகுமரிக்கு கொண்டுவருவதற்கு பதில் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை 200 அடி அகல ரோடு எங்கெங்கே வேண்டுமோ போட்டால் போக்குவரத்து துரிதமாக நடக்க, குறைந்த செலவில் பண்டங்களைக் கொண்டுவர வாய்ப்பு இருக்கும். அதேபோல குறுக்கு ரோடுகள் 300 அல்லது 400 மைல் அளவுக்கு போட்டால் துரிதமாகப் பொருள்களைக் கொண்டு போக, நிலத்தின் மூலமாகக் கொண்டு போக வசதி இருக்கும் என்று கூற ஆசைப்படுகிறேன். இது போன்ற ஒரு கருத்தை நமது மத்திய சர்க்காருக்குக் கூற முடியுமானால் கூறும்படி தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முன்னால் பேசிய நண்பர்கள் பேசும்போது நமது காமராஜ் அவர்களைப் பற்றிப் புகழ விரும்பவில்லை. ஆனால் அவர்கள் தலைமையில் இருந்த மந்திரிகள் எல்லோரையும் புகழ்ந்து பேசினார்கள். ஆங்கிலத்தில் 'க்ரோ காட்சிங்' என்று சொல்லுவார்கள். காரணம் இது வரையில் மதிப்புக்குரிய நண்பர்கள் எந்த மோஷனையும் எதிர்ப்பது என்று இருந்தவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஆதரவு தெரிவித்தார்கள் என்றால், தமிழில் 'காக்காய் பிடிப்பது' என்றும் ஆங்கிலத்தில் 'க்ரோ காட்சிங்' என்றும் சொல்லுவார்களே அந்த முறையில் இருக்குமோ என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. இந்த நாட்டு மக்களின் பண்பு கெட்டுப் போகாமல் இருக்க வேண்டும். இந்த நாட்டின் புகழ் அன்னிய நாடுகளில்கூடப் பரவியிருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்துதான் உலகத்திற்கே நாகரிகம் பரவியது என்றுகூடச் சொல்லப்படுகிறது. காங்கிரஸ் மாநாட்டிலே காமராஜ் அவர்கள் தமிழிலேயே பிரசங்கம் செய்தது தமிழின் பண்பை எடுத்துக் காட்டுகிறது, தமிழனின் தைரியத்தை எடுத்துக் காட்டுகிறது. பாரத நாடு ஒன்று என்ற முறையில் பல பாஷைகள் பேசுகின்றவர்கள்கூடி நடவடிக்கைகளை நிறைவேற்றும்போது, தமிழை கேட்டுக் கொண்டு இருந்தது அங்கே இருந்தவர்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது, நாகரீகத்தைக் காட்டுகிறது என்று சொல்லிக்கொண்டு, இது போன்ற சிறிய காரியங்களில் நண்பர்கள் தலையிடவேண்டாம், அவைகளைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை ஆதரிக்கும் வகையில் ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள முற்படுகிறேன்.

இந்த அறிக்கையில் முதன் முதலாக கனம் காமராஜ் அவர்கள் பல ஆண்டுகள் நல்ல முறையில் திறம்பட நிர்வாகத்தை நடத்தியதைப் பற்றி பெருமை பாராட்டிக் குறிப்பிட்டிருக்கிறார். அறிக்கையிலே இதற்குப் பொருத்தமாக முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி இதில் எல்லா அங்கத்தினர்களுடனும் சேர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன். நம் ராஜ்யத்திற்கு மட்டு மல்ல, இந்தியாவிலே உள்ள எல்லா ராஜ்யங்களுக்கும் எடுத்துக் காட்டாக விளங்கி திறம்பட நிர்வாகத்தை நடத்தி வந்தார்கள். எல்லோருக்குமே அவர்கள் வழி காட்டியாக இருந்தார்கள் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

17th January 1964] [திரு. வை. சங்கரன்]

அடுத்தபடியாக அறிக்கையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக அஃபிஷியல் லெவலில் வொர்க்கிங் குரூப் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் போடும்போது ஓரளவுக்கு அஃபிஷியல் லெவல் மட்டுமல்லாமல், நான்-அபிஷியல்ஸ் எல்லோரையும் சேர்த்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாகக் குறிப்பிட்டுப் போடவேண்டும். போன ஐந்தாண்டுத் திட்டம் போட்டபோதுகூட மாவட்டத்தைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்கள் சேர்க்கப்பட்டார்கள். அதேபோல இந்த ஆண்டு ஒரு சில எம்.எல்.ஏ. என்று இல்லாமல் மாவட்டங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கும் வகையில் தனியாக நான்-அஃபிஷியல் க்ரூப் போட்டு, அதிலே மாவட்டத்தில் உள்ள முக்கியமானவர்களைச் சேர்த்து, தொழிலில் ஈடுபட்டவர்கள், அபிவிருத்தியில் அக்கரை கொண்டவர்கள் எல்லோரையும் சேர்த்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை வரைவதில் ஈடுபடுத்த வேண்டும். அஃபிஷியல்ஸ் மட்டும் இருந்தால் பூர்ணமாகத் தெரிய வாய்ப்பு இருக்காது. நான்-அஃபிஷியல்ஸையெல்லாம் சேர்த்து, மாவட்ட எம்.எல்.ஏ.-க்களையெல்லாம் எடுத்து அந்த முறையில் ஒரு க்ரூப் போட்டு எந்த முறையில் அபிவிருத்தி வேலைகளைச் செய்யவேண்டுமென்று கணிக்க நான்-அஃபிஷியல்ஸுக்கு இடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போன தடவை இருந்தது. அதே மாதிரி செய்யவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ப்ரொக்யூர்மெண்ட் சம்பந்தமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய தனிப்பட்ட கருத்து, நம் ராஜ்யம் மார்ஜினல் டெஃபிஸிட்தான், ஆந்திராவிலிருந்து அரிசி வரும்போது ப்ரொக்யூர்மெண்ட் அவசியம் என்பது சர்ச்சைக்குரிய விஷயம்தான். இது பாலிஸி மாட்டர் என்று வைத்துக் கொண்டால், ப்ரைஸ் லெவலை எடுத்துக் கொண்டு பார்த்தால் 16 ரூபாயிலிருந்து 17 ரூபாய் வரையில் கொடுப்பதாக இருக்கிறது. யூனியன் டெபுடி மினிஸ்டர் திரு. ஏ. வி. தாமஸ் அடக்க விலை 19 ரூபாய் ஆகும் என்று கூறியிருக்கிறார். அதற்குக் குறைவாக நிர்ணயிப்பது பொருத்தம் ஆகாது. இப்போதுள்ள நிலையில் மார்க்கெட் விலையைப் பார்த்தால் 23 ரூபாய்க்கு விற்கும்போது 16 அல்லது 17 ரூபாய்க்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் 7 அல்லது 8 ரூபாயை இழப்பது அல்லலைக் கொடுப்பதாக இருக்கும். விலை 21 அல்லது 22 ரூபாய் ஒரு மணங்குக்கு என்று வைத்தால் பாதிப்பு இல்லாமல் இருக்கும் என்பதால் ப்ரொக்யூர்மெண்ட் வைத்துக் கொண்டால் அந்த மாதிரி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி கேன் ப்ரைஸ் நம் ராஜ்யத்தில் ரூ. 1.47 என்று வைத்திருக்கிறார்கள். வெளி ராஜ்யங்களில் ரூ. 2.00. ஏன் நம் ராஜ்யத்தில் மட்டும் குறைவு என்று கேட்கும்போது 'ஃப்ரைட்' குறைவு என்று சொல்லுவதாகத் தெரிகிறது. ஃப்ரைட் சார்ஜ் குறைவாக இருக்கும் அனுகூலம் மில் ஓனருக்குப் போகிறதே தவிர, கேன் ப்ரைஸைக் குறைத்து வைக்கும்போது ப்ரொட்யூஸருக்கு பாதிப்பு ஏற்படுகிறது. ப்ரொட்யூசருக்குக் கொடுக்கும்

[திரு. வை. சங்கரன்] [17th January 1964

கேன் பைரைஸைக் குறைப்பது என்பது ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. மில் ஓனர் அனுகூலத்தைக் கணக்கில் வைத்து கேன் ப்ரொட்யூஸருக்குக் குறைப்பது தவருன கருத்து. மற்ற ராஜ்யங்களைப் போல மணங்கு ரூ. 2.00 ஆக மாற்ற மத்திய சர்க்காரிடம் எடுத்து வாதாடிச் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பழுப்பு நிலக்கரியை உருக்கு இரும்பு செய்ய நேரடியாக உபயோகப்படுத்த முடியும் என்று அமெரிக்காவில் பரிசோதித்ததன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது வரவேற்கத் தகுந்த அம்சமே. ஆனல் இதிலே தாமதத்தை என்னல் புரிந்து கொள்ள முடியவில்லை. ஐந்தாறு ஆண்டுகளாக பரிசோதனை கட்டத்திலேயே இருக்கும் நிலைமை இருக்கிறது. உருக்கு இரும்பு தயாரிக்கும் கட்டம் வராத நிலையில் இருக்கிறது என்பது வருந்தத்தக்க விஷயம். இதிலே முடிவு ஏற்பட்டு சீக்கிரத்தில் ஆரம்பித்தால் நலமாக இருக்கும். இன்னும் பரிசோதனை நிலையில் இருக்கிறது என்று சொல்லுவது அவ்வளவு நன்ருக இருக்காது. தயாரிக்கும் வேலையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இன்னென்று சொல்லப்படுகிறது. நெய்வேலி சம்பந்தப்பட்டவரையில் 6—7 திட்டங்கள் இருக்கின்றன. அவை களெல்லாம் ஒரே சமயத்தில் நடைபெற்று அவைகளுக்கான கன்ஸம்ப்ஷனுக்கு நிலக்கரி எடுத்தால்தான் அந்த அளவுக்கு பூர்ண மாக வெட்டியெடுக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. பூர்ண மான அளவுக்கு வெட்டி எடுத்தால்தான் காஸ்ட் ஆஃப் ப்ரொடக் ஷனைக் கட்டுப்படுத்த முடியும். எல்லாம் ஒரே சமயத்தில் வொர்க் பண்ணுமல் இருக்கும் நிலையில் காஸ்ட் ஆஃப் ப்ரொடக்ஷன் அதிக மாக ஆகும் என்று சொல்லப்படுகிறது. சீக்கிரத்தில் எல்லாவற் றையும் ஆரம்பித்து நடத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை யூனிவர்ஸிட்டி சம்பந்தமாக இந்த ஆண்டு ஆரம்பிப்ப தாகச் சொல்லப்பட்டது. அது சம்பந்தமாக ஒரு பிரஸ்தாபத் தையும் காணும். சீக்கிரமாக அதை இந்த ஆண்டிலேயே ஆரம் பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சைனிக் ஸ்கூலை அமராவதியில் வைத்திருக்கிருர்கள். அதை கோடைக்கானலில் வைப்பதாக இருந்தது. அது இன்னும் அங்கேயே இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஹெவி இண்டஸ்ட்ரீஸ் சம்பந்தப்பட்ட மட்டில் மதுரை மாவட்டம் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. மற்ற மாவட்டங்களைப் போலல்லாமல் மதுரையில் பப்ளிக் செக்டாரில் ஹெவி இண்டஸ்ட்ரிஸ் இல்லாமல் இருக்கின்றது. மற்ற மாவட் டங்கள் விஷயத்தில் காட்டும் அக்கறைகூட இதற்குக் காட்டப் படவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். தனிப்பட்டவர்கள் நடத்தும் டெக்ஸ்டைல் மில்ஸ் இருக்கிறதே தவிர பப்ளிக் செக்டா ரில் எதுவும் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

17th January 1964] [திரு. வை. சங்கரன்]

ஹவுஸிங் ஸ்கீம் என்று எடுத்துக் கொண்டால் அது எமர்ஜென்ஸி என்று நிறுத்தப்பட்டிருக்கிறது. எமர்ஜென்ஸிதான். அதே நேரத்தில் அக்காமடேஷனும் முக்கியம்தான். அது நிறுத்தப்படாமல் இருக்கவேண்டும். சமீபத்திலே சென்ட்ரல் மினிஸ்டர்ஸ் கூட பல கோடிக்கணக்கான ரூபாய் தேங்கிக் கிடக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் ஹவுஸிங் ஸ்கீமை சீக்கிரமாக எடுத்து நடத்தவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

ராஜ்யத்திலுள்ள லெவல் கிராஸிங்குகளை எடுத்துக்கொண்டால் மத்திய கவர்மெண்ட் 'அதற்கான தொகையை நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம், ஸ்டேட் கவர்ன்மெண்டு ஆக்ஸெஸ் உள்ள அப்ரோச் ரோடுகளை அவர்கள் சீக்கிரம் போட்டுக் கொடுக்கும் பட்சத்தில், நாங்கள் லெவல் கிராஸிங் வேலைகளை சீக்கிரம் நிறைவேற்றித் தருகிறோம்' என்று சொல்லுகிறார்கள். அப்ரோச் ரோடுகள் சிறு பகுதிகளாகத்தான் இருக்கின்றன. அவைகளைப் போட்டுக் கொடுப்பதற்கு ஸ்டேட் கவர்ன்மெண்டு தயங்கக்கூடாது. குறிப்பாக மதுரையில் இரண்டு, மூன்று லெவல் கிராஸிங்குகள் இருக்கின்றன. அதனால் பொது மக்களுக்கு கஷ்டமும், காலதாமதமும் ஏற்படுகிறது. கவர்னர் அவர்கள் வந்தார்கள், முதல் அமைச்சர் அவர்கள் வந்தார்கள். அப்பொழுதுகூட, லெவல் கிராஸிங்கில் 15, 20 நிமிஷங்கள் தாமதம் ஏற்பட்டது. ஆகவே, இது சம்பந்தமான வேலைகளை சீக்கிரம் எடுத்து நடத்திக்கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சக்தி உற்பத்தி சம்பந்தப்பட்ட வரையில், அணுசக்தி நிலையம் ஆரம்பிப்பதாக இருந்தது. அதுபற்றி உரையில் பிரஸ்தாபிக்கப்படவில்லை. அனல் மின்சார நிலையம் தனியார் துறையில் ஏற்படுத்த வேண்டும். நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரை இது சம்பந்தமாக அப்ரோச் செய்து வற்புறுத்தி, அனல் மின்சார நிலையம் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓல்டு ஏஜ் பென்ஷன் ஸ்கீமைப் பொறுத்தவரையில், உதாரணமாக கைவிடப்பட்டவர்கள் இருக்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பாகவே தங்களுடைய பிள்ளைகளினால் கைவிடப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும், அவர்களுக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக பென்ஷன் மறுக்கப்படுகிறது. பைத்தியம் பிடித்தவர்களுக்கும் வேலைக்கு லாயக்கு இல்லாத முதியோர்களுக்கும் இந்தப் பென்ஷன் முறை வரவேண்டும். மேலும், இந்த பென்ஷன் தொகை கிடைப்பதற்கு காலதாமதம் ஆகிறது. மணியார்டர் பாரங்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக, இன்ஸ்டால்மெண்டுகளாக பூர்த்தி செய்து அனுப்புகிறார்கள். அதனால் பென்ஷன் கிடைப்பதற்கு மாதக்கணக்கில்கூட காலதாமதம் ஆகிறது. சீக்கிரம் இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தூத்துக்குடி துறைமுகம் அபிவிருத்தி சம்பந்தமாக 'அக்விஸிஷன்' டிலே ஆவதாகத் தெரிகிறது. அந்த வேலைகள் சீக்கிரம் செய்யப்படவேண்டும். திருச்சி, தூத்துக்குடி

லைனை பிராட்கேஜ் லைனாக மாற்றினால், டெவலப்மெண்டு ஆவதற்கு நல்ல உபயோகமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எஸ். ஜே. ராமசாமி:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருந்தகையார் அவர்கள் நேற்று ஆற்றிய உரையில் பாராட்டவேண்டிய அம்சங்கள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்த்தால், நாட்டில் உள்ள 100-க்கு 95 பகுதி மிகுதியாக உள்ள விவசாயிகளுக்கு ஏமாற்றத்தையே அளிக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

கவர்னர் பெருந்தகையார் உரையில் ரசாயன உரத்தைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உரம் வந்து சேர்ந்து 4, 5 மாதங்கள் ஆகின்றன. கிராமங்களில் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களில் போய்ப் பார்த்தால், உரம் எங்கே இருக்கிறது என்றுகூட தெரியவில்லை. அப்படிப்பட்ட நிலைமை அங்கு இருக்கிறது. இந்த உரையிலே பார்க்கப்போனால் மிக மிக தித்திக்கும் அளவுக்கு ரசாயன உர விலையைக் குறைத்திருக்கிறோம் என்று கவர்னர் பெருந்தகையார் குறிப்பிட்டிருக்கிறார். நான் உங்கள் மூலமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கம் மூலமாகக் கொடுத்து, அது தாலூகாவுக்கு வந்து, தாலூகாவில் இருக்கக்கூடிய சங்கங்கள் கிராமங்களுக்குக் கொடுத்து உதவி, பிறகு விவசாயிகளுக்கு உரத்தை விநியோகம் செய்கிறார்கள். உங்கள் மூலமாக சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், சர்க்காரே நேரடியாக கிராம சங்கங்களுக்குக் கொடுத்து விட்டால், இடையிலே இருக்கக்கூடிய சங்கங்களெல்லாம் அடிபட்டுப் போய்விடும். இடையிலே இருக்கக்கூடிய சங்கங்களில் மூட்டைகளை அங்கங்கே வைக்கும்பொழுது, ஒவ்வொரு மூட்டையிலிருந்தும் ஒரு படி, இரண்டு படி குத்து ஊசியைப் போட்டு எடுத்து விற்று விடுகிறார்கள். ஆகவே, ஒரு மூட்டை உரம் வாங்கினால், அதில் இரண்டு படி, மூன்று படி குறைந்து விடுகிறது. இந்த நிலைமையைப் போக்க சர்க்கார் முயலவேண்டும் என்று உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு விவசாயி மின்சார பம்ப் செட்டு வைப்பதற்கு அப்ளிகேஷன் போட்டால், சர்க்காரில் அது சீக்கிரம் சாங்ஷன் ஆவது கிடையாது. ஆனால், கவர்னர் பெருந்தகையார் அவர்கள் உரையில் உற்பத்தி பெருகவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்களும் உற்பத்தி பெருகவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திட்டக் கமிஷனும் அவ்வாறே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் உற்பத்தியை பெருக்கக்கூடிய அளவுக்கு விவசாயிகளுக்கு நன்மை செய்கிறார்களா என்று பார்த்தால் இம்மி அளவு கூட அவர்களுக்கு அந்த நன்மைகள் நேரிடையாகப் போய்ச் சேரவில்லை. குறிப்பிட்ட அளவுக்கு செலவழிக்கக்கூடிய பணங்

17th January 1964] [திரு. எஸ். ஜே. ராமசாமி]

களெல்லாம் வீணாகப் போகிறதே தவிர, கண்ணுக்குப் புலப் படாமல் தப்பிப் போகிறதே தவிர, நேரிடையாக விவசாயி களுக்கு வந்து சேருகிறதா என்று பார்த்தால், கிடையவே கிடையாது. அந்த அளவுக்கு உர விநியோகம் செய்வது, மற்றபடி பொருள் செலவு செய்வது மூலம் நேராக விவசாயி களுக்கு பலன் கிடையாது. மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் சுற்றுப்பிரயாணம் வரும்பொழுது, விவசாயப் பெருங்குடி மக் களைப் பார்த்து 'இந்த போகம் எப்படி விளைந்திருக்கிறது, கண்டுமுதல் திருப்திகரமாக இருக்கிறதா' என்று கேட்டு அறிந்திருந்தால், அவர்கள் அதை நினைத்து சங்கடப்பட்டிருப் பார்கள். அந்த அளவுக்கு கண்டுமுதல் பயன் உள்ளதாக இருக்கவில்லை. பல காலத்துக்கு முன்பே பெய்யவேண்டிய காலத்தில் பெய்யாமல், மழைபெய்த நேரத்தில் நடவு செய்த இடங்களிலெல்லாம், பூச்சிகள் பயிரைத் தாக்கி ஒரு பயனும் இல்லாமல், சில இடங்களில் பூச்சி அடித்து சாவியாகப் போய் விட்டுவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் போதுமான கண்டுமுதல் கிடைக்கவில்லை என்பதை இந்த சர்ந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு விவசாயி கிணறு தோண்டவேண்டுமென்றால், கிணறு தோண்டுவதற்கு கலெக்டர் பெர்மிஷன் தேவை. அவர் உத்தரவு வாங்கித்தான் கிணறு அங்கே தோண்டவேண்டும். அம்மாதிரி துரதிருஷ்டவசமான நிலை என்னுடைய மாவட் டத்தில் இருக்கிறது. அதற்குப்பிறகு பாலாறு பேஸின் விதி களின்படி எலக்ட்ரிஸிடி ஆபீஸரிடம் மனு செய்துகொள்ள வேண்டும். அவர் அதற்கு ஓனர்ஷிப் அத்தாட்சி தேவை என்று சொல்லுகிறார். ஓனர்ஷிப் அத்தாட்சிக்கு அங்கே இருக்கிற தாசில்தாருக்கு அப்ளிகேஷன் கொடுத்தால், சொந்த மா, இல்லையா என்று அத்தாட்சி கொடுப்பதற்கு 4, 5 மாதங்கள் காலதாமம் ஆகிறது. மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் தொகுதியாகிய ஸ்ரீபெரும்பூதூர் வட்டத்தில் தாசில்தார் ஆபீஸில் ஒரு விவசாயி ஓனர்ஷிப் அத்தாட்சி தேவை என்று மனுச்செய்துகொண்டால், 5, 6 மாத காலம் ஆகியும் ஓனர்ஷிப் அத்தாட்சி கிடைக்கவில்லை. அவ்வளவு கால தாமதம் ஆகிறது. சாகுபடி செய்துவிட்டு எலக்ட்ரிஸிடி சப்ளை இல்லாமல் அவதிப் படுகிற நேரத்தில் இம்மாதிரி கால தாமதத்தைத் தவிர்க்க சர்க்கார் வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகள் மேலும் அவர்களை கடனாளிகளாக ஆக்கிக்கொண்டு வருகின்றனவே தவிர, அவர்கள் முன்னேற வழி செய்யவில்லை. கவர்னர் பெருந்தகையார் அவர்கள் உரையில் விவசாயிகளுடைய நிலைமை உயர ஒரு வழியும் கூறப்படவில்லை என்பதை உங்கள் மூலம் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவு சங்கத்தில் ஒரு விவசாயி ஒரு வருடத்திற்கு ரூபாய் 1,000 கடன் வாங்குகிறான் என்றால், அதை அடுத்த

[திரு. எஸ். ஜே. ராமசாமி] [17th January 1964

ஆண்டில் அவன் திருப்பிக் கட்டவேண்டும். அதற்கு குறுகிய காலக் கடன் என்று பெயர். அடுத்த ஆண்டிலாவது அதைக் கட்ட முடிகிறதா என்றால் முடியவில்லை. எப்படியாவது இருக்கக்கூடிய நெல்லை அல்லது வேறு தான்யத்தை விற்று அந்தக் கடனை திருப்பிக் கட்டிவிட்டு, அதே சொஸைடியில் மறுபடியும் லோன் தேவை என்று திருப்பி கடன் வாங்கிக்கொண்டு, இதே மாதிரி ஆண்டுக்கு ஆண்டு விவசாயி கடனாளியாகத்தான போய்க்கொண்டிருக்கிறான். விவசாயிகளின் நிலைமை உயரவில்லை. மாறாக அவர்களுடைய நிலைமை கீழ் நோக்கித்தான் போய்க் கொண்டிருக்கிறது. விவசாயி உற்பத்தியை பெருக்கவேண்டுமென்று தான் நினைக்கிறானே தவிர, உற்பத்தி கீழ் நோக்கிப் போக வேண்டுமென்று எந்த விவசாயியும் விரும்பமாட்டான். அன்னிய நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இங்கே இறக்குமதி செய்யமாட்டோம், இங்கு இருக்கக் கூடிய உணவுப் பொருள்களைத்தான் அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம் என்று அரசாங்கம் பறை சாற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால், அதை நிறைவேற்ற எந்த அளவுக்கு உற்பத்தி திட்டம் இருக்கிறது என்று கூறவில்லை. நாட்டில் பற்றாக்குறை இருந்துகொண்டிருக்கிறது. அன்னிய நாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகிறது. இங்கு இருக்கக்கூடிய உணவுப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாவிட்டாலும், நம் நாட்டில் சுய தேவையை பூர்த்தி செய்யக் கூடிய நிலைமை இருக்கிறதா என்று பார்த்தால், அதுவும் இல்லை. புலிப் பால் கிடைத்தாலும் கூட கிடைத்துவிடும். விவசாயி பம்பு செட்டு வைப்பதற்கு ஒரு மூட்டை சிமெண்டு கிடைக்காது. புலிப் பால் வேண்டுமானாலும் கிடைத்து விடும். ஆனால் ஒரு படி செமென்ட் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. கவர்னர் பெருந்தகையார் உரையில் இந்தக் கஷ்டங்களை எல்லாம் போக்குவதற்கு வழி வகையில்லை என்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரையின் பேரில் சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, கவர்னர் அவர்களின் உரையில் கட்சிக் கண்ணோட்டத்தோடு நிகழ்த்தப்பட்ட அம்சங்கள் தான் துவக்கத்திலும், இறுதியிலும் அமைந்துள்ளன. அவை இல்லாமல் இருந்தால் சட்ட மன்றத்திலே இவ்வளவு தூரம் விவாதம் நடைபெற வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்திருக்கும். நான் அதை குறையாகச் சொல்லவில்லை.

அடுத்தபடியாக, பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். பொருளாதார வளர்ச்சி என்று சொன்னால், நம்முடைய மாநிலத்தைக் காட்டிலும், ஏனைய மாநிலங்கள் அதிகமான நன்மைகளை அடைந்திருக்கின்றன. அந்த அளவுக்கு நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்துடன் வாதாடி அதிகமான நன்மைகளைப் பெற வேண்டும்

17th January 1964] *[திரு. வி. எஸ். எஸ். மணி]*

என்பதுதான் என்னுடைய ஆசை. மத்திய அரசினுல் கிழித்த கோட்டைத் தாண்டுவது இல்லை என்ற கொள்கையை நம்முடைய அரசாங்கம் கடைப்பிடித்து வந்தால் நிச்சயமாக நம்முடைய மாநிலம் அதிக நன்மைகளை அடைய முடியாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசி ஏற்றத்தைப் பற்றி எல்லோருமே ஒப்புக் கொண்டிருக்கிறுர்கள். கடந்த இரண்டு ஆண்டுகாலமாக அதற்குச் சரியான பரிகாரம் தேடமுடியவில்லை. பொருளாதார வளர்ச்சிக்கு, கைத்தொழில் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல லட்சக்கணக்கான மக்கள் ஈடுபட்டுள்ள கைத்தறி ஜவுளிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அதே சமயத்தில் கதர் திட்டத்திற்கு பிரதான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. "கோடிக்கணக்கான பணத்தைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறுர்கள், என்றும்—கதர்த் திட்டம் ஒரு கட்சியின் லட்சியத்திற்காக, கொள்கைக்காக இருக்கிறதே தவிர, உண்மையிலே பொருளாதாரக் கண்ணேட்டத்தோடு பார்க்கும் பொழுது லாபகரமான திட்டம் என்று சொல்வதற்கில்லை, என்றும் மாஜி ஆடிட்டர் ஜெனரல் திரு. ஏ. கே. சந்தா அவர்கள் கூறியுள்ளார். "Khadi is a philosophy" என்றும் சொல்லியிருக்கிறுர். ஏதோ ஒரு காலத்தில் அவசியம் இருந்தது. இப்பொழுது நம்முடைய நாட்டில் நாமே ஏராளமாக உற்பத்தி செய்யக் கூடிய நிலையில் இருக்கும் பொழுது, ஏற்றுமதி செய்து, அந்நியச் செலவாணியைச் சம்பாதிக்கக் கூடிய நிலைமை இருக்கும்பொழுது, கண்மூடித்தனமாக பல கோடிக்கணக்கான ரூபாயை பாழ்படுத்தியிருக்கிறுர்கள் என்று திரு. சந்தா அவர்களே சொல்லியிருக்கிறுர்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதே மாதிரித்தான் எதற்காக கைத்தறி துணி வேண்டும், சுலபமாக இயந்திரத்திலேயே துணியை நெய்யலாமே, அது நயமாகக் கிடைக்குமே என்று பைத்தியக்காரத்தனமாகச் சொல்லிக் கொண்டிருக்கிற சிலரும் இருக்கிறுர்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி: புவனேசுவரம் மாநாட்டில் கூட காங்கிரஸ் உறுப்பினர்கள் கதர் கட்டலாமா, கூடாதா என்ற சர்ச்சை இருந்ததாகப் பத்திரிக்கையிலே படித்தேன்.

கனம் சபாநாயகர்: அவர்கள் கைத்தறியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி: கதர்த் திட்டத்திற்குக் கொடுக்கக் கூடிய ஆதரவையும் சலுகையையும் கைத்தறி ஜவுளிக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

கனம் திரு. எம். பக்தவச்சலம்: கதரும் கைத்தறிதான் என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[17th January 1964

திரு. வி. எஸ். எஸ். மணி : கைத்தறியானது பல மக்களுடைய பிரச்னை ஆகும். கதர் ஆனது ஒரு கட்சியினுடைய பிரச்னை.

அடுத்தபடியாக, அரசாங்கம் பலபல அரசியல் கட்சிகளுக்கும் பூரண பேச்சு உரிமையும், செயல் உரிமையும் கொடுக்கப்பட்டிருப்பதாக கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மக்களின் கருத்துக்களை வெளியே பேசவோ, எழுதவோ முடியாத அளவில், சட்டங்களைக் கொண்டு வந்து பேச்சு உரிமையையும், எழுத்து உரிமையையும், கருத்து உரிமையையும் பறிக்கின்ற அளவுக்கு சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. எங்கே இருக்கிறது பேச்சு உரிமை ? அடிப்படை உரிமைகளைப் பறிக்கக்கூடிய அளவுக்கு அரசியல் சட்டத்தையே திருத்தி, மக்களிடையே அதிகமான செல்வாக்குப் பெற்ற ஒரு கட்சியின் அமைப்பையே சீரழியச் செய்ய, ஒழித்துக் கட்டுவதற்காக, திட்டமிட்டு சட்டங்கள் கொண்டு வந்திருக்கும்போது, எங்கே எழுத்துரிமை, பேச்சுரிமை இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். ஜனநாயகத்தையே குழி தோண்டிப் புதைக்கும் அளவுக்கு சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை எல்லாம் நாம் எப்படி ஒப்புக்கொள்ளுவது என்று தெரியவில்லை.

அடுத்தபடியாக, நமது மாநிலத்தின் மக்கள் இந்தி மொழிப் பிரச்னையில் ஈடுபட்டு, குழம்பிக்கொண்டும் எதிர்ப்பு இயக்கம் வளர்ந்து கொண்டிருக்கிற நேரத்தில், இந்தி மொழிப் பிரச்னை பற்றி கவர்னர் அவர்கள் உரையிலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இந்தி மொழிப் பிரிவை எரிக்கும் முகத்தான், அதற்கு அதிருப்தி காட்டும் முகத்தான், இந்தி மொழிப் பிரிவு சம்பந்தமான அரசியல் சாசனத்தை தீயிட்டுக் கொளுத்துவதற்கு முனைந்துள்ளதை, அரசியல் சட்டத்தையே அவமதிப்பதாகிறது என்று சொல்லுவது நியாயமாகாது. தங்களுடைய அதிருப்தியைக் காட்டும் முறையில், எதிர்க்கும் வகையில்தான் அதனைத் தீயிட்டுக் கொளுத்துகிறார்கள். அவமதிக்க வேண்டுமென்ற நோக்கம் கிடையாது. அரசியல் சாசனத்தைப் பூராவும் கொளுத்தவில்லை. மொழிப் பிரிவு சம்பந்தமான பகுதியைத்தான் கொளுத்தினார்கள். தங்களுடைய அதிருப்தியை, எதிர்ப்பை தெரிவிக்கும் பொருட்டு, அதனால் மற்றவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காகத்தான் அவ்வாறு செய்கிறார்களே தவிர, அவமதிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யவில்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தவறுதலாக மற்றொருவரை அடித்துவிட்டால், அதற்காக அந்தக் கையையே வெட்டிவிடலாமா?

திரு. வி. எஸ். எஸ். மணி : அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய உதாரணம் இதற்குப் பொருந்தாது என்று நான் கருதுகிறேன். கடந்த டிசம்பர் மாதத்திலே மதுரையிலே இந்தி மொழிப் பிரிவைக் கொளுத்துவதற்காக கழகத் தோழர்கள் போன சமயத்தில், அவர்களை வாழ்த்தி வழியனுப்புவதற்காகச் சென்ற சில கழகத் தலைவர்களை போலீசார் கைது செய்து, சிறைப்படுத்தி கேஸ்

17th January 1964] [திரு. வி. எஸ். எஸ். மணி]

போதும் அளவுக்கு இன்றைய நிலைமை இருக்கிறது. போலீசார் எதேச்சாதிகாரமாகச் செய்த செயலா இது, அல்லது உள்துறை அமைச்சரைக் கலந்து செய்தார்களா, அல்லது உள்துறை அமைச்சர் முதல் அமைச்சர்களைக் கலந்தார்களா, அல்லது உள் துறை அமைச்சர் வேறு மேலிடத்தின் கட்டளைக்கு உட்பட்டு செய் தாரா என்ற விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. எந்தக் காரணத்திற்காக அவர்களைக் கைது செய் தார்கள்? திட்டமிட்டு, குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் நாங்கள் அந்தக் காரியத்தைச் செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கும் நேரத்தில், ஏதோ மாலையிட்டு, வாழ்த்தி வழியனுப்புவதற்காகச் சென்றிருந்த சில தலைவர்களைத் திடீரென்று முன் எச்சரிக்கை இல்லாது கைது செய்வது என்றால், இது எந்த ஜனநாயக ரீதியில் ஒப்புக்கொள்ளக் கூடியது என்று நான் கேட்கிறேன். இதுதான் ஜனநாயகமா? 6-30 p.m.

MR. SPEAKER: The hon. Member can argue that the whole thing is not an offence. But if he says that for burning alone, a person can be arrested, then the person who appreciates or incites or induces it can also be arrested. That is the general law. I am not referring to the particular case mentioned by the hon. Member. I leave it to the hon. Member for consideration.

திரு. வி. எஸ். எஸ். மணி: மதுரையில் கழகத் தோழர்கள் அரசியல் சாசனத்தில் ஒரு தாளைக் கொளுத்துவதற்காகச் சென்ற போது, நடை பாதையில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மக்களை போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததாகச் சொல்லப் படுகிறது. அது எந்த அளவுக்கு ஜனநாயகத்திற்கு ஒத்தது என்று நான் கேட்கிறேன். இந்தவிதமாகப் பொது மக்களுக்குத் தொல்லை கொடுக்கும் அளவிலே போலீசார் நடத்துவது என்றால் அது நல்லது அல்ல என்றுதான் நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத்தைப்பற்றி சில வார்த்தைகள் பேச நான் ஆசைப்படுகிறேன். மின்சாரமானது உணவு உற்பத்தி செய்யும் மக்களுக்கு நல்ல சாதனமாக இருந்தபோதிலும், கிணற்றில் அதிகமான பங்கு பாத்தியமுள்ள விவசாயி ஒருவர் பம்ப் செட் வைப்பதற்கு மின்சாரம் வேண்டும் என்று கோரும்போது, குறைந்த பங்கு பாத்தியமுள்ள ஒருவர் சம்மதம் கொடுக்காவிட் டால் அவர்கள் பம்ப் செட் வைக்க முடியாத நிலை இருக்கிறது. அதற்காக இன்டெம்னிடி . பாண்டு எழுதிக்கொடுக்கவேண்டும் என்று அந்த அதிகாரிகள் சொல்கிறார்கள். அப்படி இன்டெம்னிடி பாண்டு எழுதிக் கொடுத்து பம்ப் செட் வைத்தாலும், கோர்ட்டிலே போனால் அவர்களுக்கு பாதகமாக தீர்ப்பு சொல்லப்படுகிறது. சர்க்காரிலே நிரந்தரமான ஒரு ஸ்டாண்டிங் ஆர்டர் பிறப்பித்து, கிணற்றில் அதிகமான பங்கு பாத்தியம் உள்ளவர்கள் மின்சாரம் வேண்டுமென்று மனுச் செய்தால், அவர்களுக்கு பம்ப் செட்

வைத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்ற நிலையை உண்டாக்குமாறு நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. அ. ராமச்சந்திர ராயர்** : கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் நமது கவர்னர் பெருமான் ஆற்றிய உரையை நான் வரவேற்றுப் போற்றி என் மனமார்ந்த நன்றியைத் தங்கள் முன்னிலையில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்களுடைய அரிய சேவைகளைப் பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், எதிர்க் கட்சியினர் அநேக குறைபாடுகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அது நியாயம் அல்ல. திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் கொண்டுவந்த பல சீர்திருத்தங்களினால் நம்முடைய மாநிலம் முற்போக்கு நிலையை அடைந்து வந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதுவும் குறிப்பாக . . .

MR. SPEAKER : The hon. Member can refer to other matters. Shri Kamaraj has become a subject matter for discussion. Just a mere word of appreciation will do.

திரு. அ. ராமச்சந்திர ராயர் : இனி, மற்ற விஷயங்களைக் குறித்துப்பேச முற்படுகிறேன். சென்ற ஆண்டு கவர்னர் பெருமான் பிரசங்கம் நிகழ்த்திய நேரத்தில் நம்முடைய நாடு சீன ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்டு, அந்த நிலைமையைச் சமாளித்து வந்தோம். அந்த நிலைமை இப்பொழுது ஓரளவுக்கு மாறியிருக்கிறது என்றாலும், சீனர்களினால் அபாயம் முற்றிலும் நீங்கிவிட்டது என்று நினைக்கக்கூடாது என்று கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நாட்டின் பாதுகாப்பிலும் நம்நாடு அக்கறை செலுத்திக்கொண்டிருக்கும் இதே நேரத்தில், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக நாம் நிறைவேற்றிவிட்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் முற்போக்கான நிலையில் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதைக் குறித்து யாரும் வியப்படையாமல் இருக்க முடியாது. அயல் நாட்டினரும் நம்முடைய முற்போக்கை நல்ல முறையில் பாராட்டுகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். அப்படி இருக்க, நம்முடைய எதிர்க் கட்சித் தோழர் திரு. மணி அவர்கள் பேசும்போது, கதர் அபிவிருத்தித் திட்டத்தைக் குறை கூறிச் சொன்னார்கள். கதர் அபிவிருத்தித் திட்டம் நம்முடைய தேச பிதா மகாத்மா காந்தியடிகளினால் நிர்மாணத் திட்டமாக வகுக்கப்பட்டு, அதன் காரணமாக நாம் சுதந்திரம் அடைந்திருக்கிறோம் என்பதையும், அந்த வகையில்தான் நண்பர் திரு. மணி போன்றவர்களும் இந்தச் சபையில் வீற்றிருக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அவர்கள் மனதில் கொள்ள வேண்டும். அப்படியிருக்க, கதர் அபிவிருத்தித் திட்டமானது வெறும் பிற்போக்குத் திட்டம் என்றும், அதற்காகக் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கிறார்கள் நமது அரசாங்கம் என்று குறை சொல்வது பொருத்தமல்ல என்று நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

17th January 1964] *[திரு. அ. ராமச்சந்திர ராயர்]*

அடுத்தபடியாக, நாம் திட்டமிட்டபடி நமது திட்ட வேலைகள் செவ்வனே நடந்து வருகின்றன என்பது போற்றுதற்குரிய விஷயம். அதிக அளவில் உற்பத்தி பெருக்க வேண்டும், விலைவாசிகள் உயராமல் தடுக்கப்படவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உணவுப் பண்டங்களைக் கட்டுப்பாடான விலைக்கு விநியோகம் செய்ய வேண்டும் என்ற வகையில் நமது அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது. இதெல்லாம் மக்களுக்கு நன்மை செய்வதற்கான திட்டங்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்பொழுது நம்முடைய இராஜ்யத்தில் அரிசிக் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கொள்முதல் செய்யும்போது, தஞ்சை ஜில்லாவில் 20 சதவிகிதம் கொள்முதல் செய்யவேண்டும் என்றும், மற்ற ஜில்லாக்களிலிருந்து 15 சதவிகிதம் செய்யவேண்டும் என்றும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அது சற்று வரவேற்கத்தக்கது தான். இந்தப் பொறுப்பு மில்காரர்களுக்கும் வியாபாரிகளுக்கும் விடப்பட்டிருக்கிறது. மில்காரர்களும், நெல் ப்ரோக்கர்களும் நெல்லாக விவசாயிகளிடமிருந்து வாங்கி, அரிசியாக மாற்றி சர்க்காருக்கு வேண்டியதைக் கொடுத்துவிடக்கூடும். இதனால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படும். ஆகையால், நெல்லாகவே விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் நேரடியாக வாங்கிக்கொள்ளலாம் என்ற வகையில் கொள்முதல் திட்டத்தை திருத்திக் கொள்ளலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும்.

உற்பத்தி செய்து அறுவடை ஆகும் சமயத்தில் கொள்முதல் செய்யும்போது விவசாயிகள் குறைந்த விலைக்குத் தானியங்களைக் கொடுத்து விடுகிறார்கள். காரணம், சர்க்காருக்குக் கிஸ்தி செலுத்த வேண்டியிருப்பதும், ஏற்கெனவே பட்ட கடனை அடைக்கவேண்டிய நிர்பந்தமும்தான். விவசாயிகளுக்கு நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைத் தவிர வேறு வருமானம் இல்லாததால், நெல்லை உடனுக்குடன், அறுவடையானவுடனேயே, குறைந்த விலையானாலும் விற்றுவிடக்கூடிய கஷ்டம் அவர்களுக்கு இருக்கிறது. இந்த நிலைமையை மில்காரர்களும் இடைத் தாகர்களும் பயன்படுத்திக்கொண்டு, சர்க்கார் நிர்ணயித்திருக்கும் 20 சதவிகிதம், 15 சதவிகிதம் என்கிற கோட்டா அளவுக்குச் சர்க்காருக்குக் கொடுத்துவிட்டு, பாக்கியைத் தங்களிடம் வைத்திருந்து, பிற்பாடு நல்ல விலை வரும் வரையில் காத்திருந்து விற்க ஏதுவாகும். இதையெல்லாம் பார்க்கும்போது, வியாபாரிகள்தான் முன்னுக்கு வர முடியுமே தவிர, விவசாயிகள் முன்னுக்கு வர முடியாது. அவர்கள் நிலை பின்னுக்கு போகக்கூடியதாகத்தான் இருக்கும். இதை சீர்தூக்கிப் பார்த்து அரசியலார் நல்லதொரு திட்டம் வகுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். அறுவடையான உடனேயே குறைந்த விலையில் யார் யார் எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு, அப்படிப்பட்டவர்களுக்கு போனசாக இரண்டு, மூன்று ரூபாய் விதம் கொடுத்தால் சரிகட்டி

[திரு. அ. ராமச்சந்திர ராயர்] [17th January 1964

விடலாம். இரண்டு மூன்று மாதங்கள் ஆனுல், மூட்டையின் விலை 20, 25 ரூபாய் அளவுக்குக்கூட ஏறிவிடும். அப்பொழுது ஏழை விவசாயிகள் கஷ்டப்படுவார்கள். அதைக் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளு கின்றேன்.

சென்ற சிலமாதங்களுக்கு முன்பு பெரு மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் தென்னுற்காடு ஜில்லா சிதம்பரம் தாலூக்கா மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. வீராணம் ஏரியில் ஜலம் அதிகப்பட்டு, வடிகால் வசதி இல்லாததால், தண்ணீர் தேங்கி ஏராளமான சம்பாப் பயிர் சீர்கெட்டுவிட்டது. புவனகிரி தொகுதி யில் வையகொண்டான் நெல் சாகுபடி செய்ததில் இந்த ஆண்டு 50 சதவிகிதம்தான் ஒப்படி கண்டது. இதனுல் அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயிகள் துன்பம் அடைகிருர்கள். சேத்தியாத் தோப்பு அணைக்கட்டு ஜலம் பரமனுறு வழியாக வடிய வேண்டி இருக்கிறது. இந்த பரமனுறு சீர்கெட்டிருப்பதால் 20,000 ஏக்கரா பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பரமனுறு வடிகாலைச் சீர்திருத்திக் கொடுத்தால் உதவிகரமாக இருக்கும். சிறுபாசனத் திட்டங்களைக் கவனிக்கும்போது, வடிகால் திட்டத்தையும் இணைத்துக் கவனிக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

விவசாயத்திற்கு வேண்டிய உரங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செவ்வனே விநியோகிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. என்றுலும், தென்னுற்காடு ஜில்லாவில் ரசாயன உரம் தவிர, கடலைப் பிண்ணுக்கும் மிகவும் அவசியமான பொருளாகப் பயன் படுத்தப்பட்டு வருகிறது. அதில் விவசாயச் சத்து அதிகமாக இருக்கிறது. ரசாயன உரங்களை விநியோகம் செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே கடலைப் பிண்ணுக்கையும் விநியோகம் செய்வது நல்லது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக நமது சென்னை மாநிலத்தில் கல்வி வசதி அதிக மாக ஏற்பட்டிருக்கிறது. அதிலும் 1,500 ரூபாய்க்கு வருஷ வருமானம் குறைந்தவர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்க வசதி செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. நம் முடைய குறிக்கோள் எல்லோருக்குமே இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்பதுதான். ஜனநாயக சர்க்கார் நாட்டு மக்கள் எல்லோரையுமே பாரபட்சமின்றி நடத்தக் கடமைப்பட்டிருக் கிருர்கள். ஆகவே இந்நாட்டில் பிறந்த எல்லாக் குழந்தை களுக்கும் இலவசக் கல்வி அளிக்க வசதி செய்ய வேண்டுமென்ப தாகக் கேட்டுக் கொண்டு, கவர்னர் பெருமான் ஆற்றிய உரையை வரவேற்று அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. கி. இரா. சம்பந்தம்** கனம் சபாநாயகர் அவர்களே, திரு. பழனி அவர்கள் கொண்டு வந்துள்ள நன்றி அறிவிப்புத் தீர்மானத் தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

17th January 1964] *[திரு. கி. இரா. சம்பந்தம்]*

கவர்னர் பெருமான் அவர்கள் இரத்தினச் சுருக்கமாக நமது மாநிலத்தில் நடக்கக் கூடிய அபிவிருத்திகளைப் பற்றியும், நடக்க வேண்டிய விஷயங்களைப் பற்றியும் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நடைமுறையில் செய்ய வேண்டிய ஒன்றிரண்டு காரியங்களை மாத்திரம் சொல்லி என் உரையை முடித்துக் கொள் கிறேன்.

குறிப்பாக தஞ்சை மாவட்டம் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தி னாலும், புயலினாலும் பாதிக்கப்பட்டபோது அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் சென்று பார்த்த கனம் அமைச்சர் அவர்கள் அந்த மாவட்ட விவசாயிகளுக்கு வேண்டிய ஆதரவை அளிப்பதாகச் சொன்னார்கள். வேண்டிய ஆதரவையும் கொடுத்தார்கள். ஆனால் வெள்ளம் ஏற்பட்ட ஆறுகளுடைய உடைப்புகளை அடைக்கவும், அதனால் பாதிக்கப்பட்ட ரோடுகளைச் செப்பனிடவும், விவசாயி களுக்கு விதைகள் கொடுக்கவும் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கொடுக்கப்பட்ட விதைகளைக் கொண்டு ஓரளவுக்கு விவசாயிகளின் நிலத்தைத் தரிசாகப் போடாமல் இவ் வாண்டு சாகுபடி செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இரண்டு மாதம் தண்ணீர் கொடுத்தால்தான் பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். குறைந்த விலையில் எரு கொடுத்திருக்கிறார்கள். மழையினாலும், வெள்ளத்தினாலும் பாதிக் கப்பட்ட அந்தப் பகுதி மறுபடியும் சரியான நிலையை அடைவதற்கு எந்த எந்த வகையில் எல்லாம் உதவி செய்ய வேண்டுமோ அந்த அந்த வகையில் எல்லாம் உதவி செய்தாக வேண்டும். குறிப்பாக தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்குள்ள ஆறுகள் சாதாரண காலத்தில் பாசன ஆறாகவும் வெள்ளக் காலத்தில் வடி காலாகவும் அமைந்திருக்கிறது. அந்த வடிகால்களை சரியானபடி தூர் எடுக்காமல் கவனிப்பாரற்று இருப்பதால் மழை காலங் களில் வெள்ளம் ஏற்படுகின்றன. அதுபற்றி கனம் அமைச்சர் அவர்கள் கூட கவனம் செலுத்தப் போவதாகக் கூறியதாகக் கேள்விப்பட்டேன். அதாவது 19 லட்சம் ரூபாய் ஒதுக்கி, தஞ்சை ஜில்லாவில் உள்ள பாசன வசதிகளையும், வடிகால் வசதிகளையும் செப்பனிடப்போவதாக கேள்விப்பட்டேன். அதைப்பற்றியும் பெருமைப்படுகிறேன். அதோடு அந்த மாவட்டத்தில் பொறை யாறு தொகுதியில் நத்தலாறு, வீரசோழியன், கடலாழி, உப்பனாறு, போன்ற ஆறுகள் எல்லாம் வந்து வடிகின்றன. வெள்ள காலத்தில் இவை அத்தனையும் கரையை உடைத்துக் கொண்டு வெள்ளம் ஏற் படுகின்றன. அவற்றுக்கு உடனடியாக ரிவிட்மெண்டாவது கட்ட வேண்டும். திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டிணம் சீர்காழி போன்ற இடங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்து இப்போது விவசாயிகளுக்கு பாக்கேஜ் மூலமாக லோன் கொடுக்கப்படுகிறது. அந்தப் பகுதி விவசாயிகள் வெள்ளத் தினால் பாதிக்கப்பட்டிருப்பதனால், ஒரு வருஷத் தவணையில் அந்தக் கடனைத் திருப்பித் தர வேண்டுமென்ற நியதி இருக்குமானால் இந்த

[திரு. கி. இரா. சம்பந்தம்] [17th January 1964

வருஷம் அதை ஒத்தி வைக்க வேண்டும். இல்லாவிடில் இந்த வருஷம் கடனை அடைப்பது முடியாது என்றால் குத்தகையும் அளக்க முடியாத நிலைமை ஏற்படும். குத்தகை பாக்கிக்காக வெளியேற்றப்படுகிற நிலை உண்டாகும். ஆகவே குத்தகை பாக்கி ஏற்பட்டால் அடுத்த வருஷம் கொடுக்க தவணை கொடுத்து, அவர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படாது இருக்க பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

மேலும் அந்த மாவட்டத்தில் நீர்ப்பாசனத்திற்கும் பெட்டாம் (Beddam) கட்டி விடுகிறார்கள். கல்லாலே கட்டிவிடுவதினால் தண்ணீர் அதற்கும் மேலாகத் தான் வழிந்து போகவேண்டியிருக்கிறது. வெள்ள காலத்தில் தண்ணீரை வடிக்க முடியாமல் தேக்கம் ஏற்பட்டு எதிர்க்கிறது. அப்படியின்றி ஸ்க்ரு ஷட்டர்ஸ் (Screw Shutters) ஏற்படுத்தினால் ஷட்டர்ஸைத் தூக்கி தண்ணீரை வடிய வைத்துவிட முடியும். அந்த வேலைகளையும் அறுவடை காலத்திற்குப் பிறகு உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் பேசும் போது இந்தி எதிர்ப்பு இயக்கத்தை ஒடுக்குவதற்காக சர்க்கார் அடக்குமுறைகளை கையாள்கிறது என்று சொன்னார்கள். இந்தி எதிர்ப்புக்காக அல்ல. சட்டத்தை மீறுவதற்காகத்தான் அத்தகைய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. முன்பும் கூட பல சமயங்களில் இந்தி எதிர்ப்பு இயக்கம் நடை பெற்றிருக்கிறது. சர்க்கார் இத்தகைய நடவடிக்கைகளைமேற்கொண்டது கிடையாது. ஆனால் நாமே நம்முடைய அரசியல் நிர்ணய சபையில் கொண்டு வந்த சட்டத்தை, நாமே எரிப்பது நல்லதல்ல. இந்தநாட்டில் பிறந்த அத்தனை மக்களும் மதிக்கக் கூடிய ஒரு சட்டம் அது. அதை ஒப்புக்கொண்டு, அதற்கு முரண்படாமல் நாம் நம்முடைய கடமைகளை ஆற்றுவதற்கு விஸ்வாசப் பிரமாணமும் செய்து இங்கே வந்திருக்கிற போது அதையே அவமதிக்கும் வகையில் அதைக் கொளுத்துவது என்று செய்கிற முயற்சியானது மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். ஆகவே தான் அத்தகைய காரியத்தில் ஈடுபடுகிறவர்கள் மீது அரசாங்கம் கடுமையாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி வடநாட்டுப் பத்திரிகை ஒன்றில் வந்திருக்கக்கூடிய செய்தியையும் கவனிக்கவேண்டும். "பிரிவினையைக் கோருவது குற்றம் என்று சட்டம் கொண்டுவந்தவுடன் அவர்கள் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுவிட்டார்கள். அதைப் போலவே இந்தி எதிர்ப்பும் குற்றம் என்று சட்டம் கொண்டுவந்துவிட்டால் இதையும் கைவிட்டுவிடுவார்கள்" என்று அந்த ஏடு எழுதியிருக்கிறது. இதை எதிர்க் கட்சிக்காரர்களும் நினைவில் கொள்ளவேண்டும். இத்தகைய நிலையின்றி நாமே ஏற்றுக் கொண்ட அரசியல் சட்டத்தை மதித்துச் செயல்பட நாம் முன்னுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசி ஏறிவிட்டது என்று ஒரே கூக்குரல் போடுகிறார்கள். பலதுறைகளிலும் நாம் வளர்ச்சி அடைந்து

17th January 1964] [திரு. கி. இரா. சம்பந்தம்]

கொண்டிருக்கிறபோது, தொழில்கள் பெருகி, தொழிலாளர்களுடைய கூலி விகிதம் எல்லாம் உயர்ந்து கொண்டிருக்கிற காலத்தில் விலைவாசி உயர்வு ஏற்படுகின்றது. மற்ற நாடுகளோடு ஒப்பிடும் போது இங்கே விலைவாசி மிகவும் அதிகம் என்று சொல்ல முடியாது. மற்ற நாடுகளுடைய நிலையையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கனம் நிதி அமைச்சருடைய பி.ஏ. அமெரிக்கா சென்றிருந்தார். அங்கே எல்லாம் ரெடிமேட் ஆகாரம் தான். "எனக்கு சமைத்த ஆகாரம் வேண்டும்" என்று அவர் உத்தரவு கொடுத்தாராம். அதற்கு 35 ரூபாய் அவர்கள் சார்ஜ் பண்ணினார்கள் என்று சொன்னார்". இங்கே கன்னியாகுமரியில் இருந்து இமாலயம் வரை சென்றாலும் ஒன்னேகால் ரூபாயில் ஒருவர் ஒரு வேளை உணவை முடித்துக்கொள்ள முடியும். இப்படி எந்தச் சாமானை எடுத்துக் கொண்டாலும் மேல்நாட்டில் விற்கக்கூடிய நிலைமை இங்கு இல்லை. அவர்கள் தாங்கள் உற்பத்தி பண்ணுகிற சாமான்களுக்கு உள்நாட்டில் ஒரு விலை, வெளிநாட்டில் ஒரு விலை என்று நிர்ணயித்துவிடுகிறார்கள். நாம் அவர்களுடைய நாட்டில் ஒரு பொருள் விற்கிற விலையை எடுத்துப் பார்த்தால் தெரியும். இங்கே 50 ரூபாய்க்கு விற்கிற ஒரு ஜோடி பூட்ஸ் வாங்கி ரஷ்யா 250 ரூபாய் வரையில் விற்கிறது. அப்படி இருக்க பணவீக்கமோ, மற்ற காரணமோ இந்த நாட்டில் விலை உயர்வுக்குக் காரணமாக அமைகிறது என்று முழுக்கச் சொல்ல முடியாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

சற்று முன்பு பேசிய உறுப்பினர், காமராஜ் அவர்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். சாதாரணமாக இன்றைக்கு ஒரு பஞ்சாயத்து போர்டு பதவியைக் கூட விட முடிவதில்லை. சட்ட சபை அங்கத்தினர் பதவியை என்னால் விட முடியவில்லை.

MR. SPEAKER: I am going to ask all hon. Members belonging to all Parties not to refer to that. So the hon. Member need not go into it too much and he can refer to any substantial points mentioned in the Governer's Address.

நம்முடைய மாகாணம் தொழிற்துறையிலும் சரி, கல்வித் துறையிலும் சரி, விவசாயத் துறையிலும் சரி, மற்ற மாகாணங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. நம்முடைய மதிப்புக்குரிய நேரு அவர்கள் எந்த மாகாணத்திற்குப் போனாலும் 'சென்னையைத் திரும்பிப் பார்' என்று சொல்லக் கூடிய அளவுக்கு நாம் முன்னேறி இருக்கிறோம். நம்முடைய மாகாணத்தில் அமைச்சர்கள் ஒட்டு மொத்தமாகத்தான் வேலை செய்து வருகிறார்கள். ஆனால் இங்கே பேசிய ஒரு உறுப்பினர் அமைச்சர்களுக்கிடையேயும் பிரிவினையைக் காட்டும் வகையில் பேசினார்கள். அமைச்சர்களுக்கிடையே எந்த விதமான பிரிவினையும் இல்லை.

இன்றைக்கு மாணவர்கள் வந்து கோட்டைக்கு எதிரே இந்தி வேண்டாமென்று கூக்குரல் போட்டார்கள். நான் அவர்களிடம் சென்று, 'மாணவர்கள் அரசியல் பிரச்சினைகளிலே தலையிடக் கூடாது, அதற்கு அரசியல்வாதிகளாகிய நாங்கள் இருக்கிறோம்

[திரு. கி. இரா. சம்பந்தம்] [17th January 1964

என்று சொன்னேன். அவர்கள் நான் சொன்னதைக் கேட்கவில்லை. ஏனென்றால் அவர்கள் எல்லாம் 'அந்த' எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள். இந்த மாதிரி மாணவர்களை அரசியலில் பயன்படுத்தக் கூடாது என்று எதிர்க் கட்சித் தோழர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. சி. ம. அம்பிகாபதி :** மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, நமது பெருமதிப்புக்குரிய கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கடந்த ஆண்டிலே அவர்கள் உரையாற்றியபோது நாடு இருந்த நிலைமையையும், இன்று அவர் உரையாற்றுகின்றபோது எவ்வளவு வலிமை பெற்றிருக்கிறோம் என்பதையும் அவர் குறிப்பாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார். மதிப்புக்குரிய காமராஜ் அவர்களுடைய பெருமையைப் பற்றியும் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மதிப்புக்குரிய காமராஜ் அவர்களுடைய பெருமையை உலக அறிஞர்களும், பெரியவர்களும் பாராட்டுகிறார்கள். அந்த முறையில் நாமும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, விவசாய உற்பத்தியில் நாம் கவனம் செலுத்தவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். நம்முடைய நாடு விவசாய நாடு. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தமட்டில் திட்டங்கள் எல்லாம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுவிட்டன. தற்போது சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமல் படுத்தும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். சரியான வடிகால் இல்லாத காரணத்தால் பல பகுதிகளில் விவசாயம் பாதிக்கப்படுகிறது. தஞ்சை ஜில்லாவில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 4-ம் தேதியிலிருந்து பெய்த மழையாலும், புயலாலும் அந்த மாவட்டத்தில் சீர்காழி, நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடியில் ஒரு பகுதி ஆகிய இடங்களில் 30,000 ஏக்கர் நிலங்களில் பயிர்கள் சேதமடைந்திருக்கின்றன. இதை மதிப்புக்குரிய கனம் அமைச்சர் அவர்களும் நேரிலேயே வந்து பார்த்தார்கள். அவர்கள் வந்தபோது ஏறத்தாழ 34 மைல் நீளத்திற்கும் 15 மைல் அகலத்திற்கும் ஒரே வெள்ளக்காடாக இருந்த காட்சியைப் பார்த்தார்கள். வடிகால் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று முன்பொரு முறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதை கருத்தில் ஏற்று, ஆண்டுதோறும் கடலோரப் பகுதிகளில் ஏற்படும் வெள்ளத்தைத் தடுக்க பல கோடி ரூபாய் செலவானாலும் தயங்காது திட்டத்தில் எடுத்து வடிகால் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக 100 முதல் 1,000 ரூபாய் வரை கடன் உதவி செய்து வந்திருக்கிறார்கள். டிசம்பர் மாதம் 4-ம் தேதி பெய்த மழையின் காரணமாக பத்து நாட்கள் வரை தண்ணீர் தேங்கி நின்றதால் தாளடி பயிர்களும், நாற்றங்கால் பயிர்களும் சுத்தமாக அழிந்து விட்டது. சம்பா கதிர்கள் எல்லாம் பதராக இருக்கிறதே தவிர, அதில் நெல் இல்லை. ஒரு வயலில் 15 மேனி வரும் என்று எதிர் பார்த்து, அறுத்துப் பார்க்கும்போது 5 மேனி கூடத் தேறவில்லை.

17th January 1964] *[திரு. சி. ம. அம்பிகாபதி]*

கனம் தண்டாயுதபாணி அவர்கள் பேசும்போது 21 ரூபாய்க்கு ஒரு மூட்டை நெல் விற்றது இப்போது 16 ரூபாய்க்குக் கூட வியாபாரிகள் வேண்டாமென்று சொல்லும் நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மில்காரர்களிடமிருந்தும் வியாபாரிகளிடமிருந்தும் கட்டாய கொள்முதல் செய்ய வேண்டுமென்று முடிவு செய்த பிறகு, அவர்கள் வேண்டுமென்றே விலையைக் குறைத்து சில வியாபாரிகள் மூட்டை ஒன்று 15 ரூபாய் வீதம் ஆயிரக்கணக்கான மூட்டைகளை ஒரு வாரத்திற்குள் வாங்கி அடுக்கி வைத்துக் கொண்டார்கள். இந்த நிலைமையில் விவசாயிகள் வாங்கிய கடன்களை எவ்வாறு திருப்பிக் கொடுக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாயிகளுக்கு இந்த ஆண்டு நிவாரணம் கொடுக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். இதுவரை எந்தவித நிவாரணமும் அளிக்காதது வருந்தத்தக்கதாகும். டெனன்ட்ஸ் கோவாப்பரேடிவ் சொஸைடிகள் கிழக் தஞ்சை ஜில்லாவில் ஏறத்தாழ 23 இருக்கின்றன. வருஷா வருஷம் இவ்விதமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு குத்தகை பாக்கி இருந்து வருகிறது, இந்த பாக்கியை சம்பந்தப்பட்ட தேவஸ்தானங்களின் மூலம் தள்ளுபடி செய்யும்படி கேட்டால் விதிவிலக்கு இல்லை, தள்ளிக் கொடுக்க முடியாது என்று பாக்கி வைத்துவிடுகிறார்கள். விவசாயி பாக்கி வைத்திருந்தால் சட்டப்படி நிலத்திலிருந்து வெளியேற்ற உரிமையுண்டு. இவ்வாறு பாதிக்கப்படுபவர்களை காப்பாற்ற வேண்டும் என்றால் இவ்விதமான சந்தர்ப்பங்களில் 10 சதவிகிதம் அல்லது 5 சதவிகிதம் தள்ளுபடி செய்ய சட்ட மூலம் உரிமை ஏற்படுத்தினால் விவசாயிகளுக்கு பெரிதும் நலமாக இருக்கும் என்று கூறி அந்த வகையில் தக்க முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த நேரத்தில் பேசச் சந்தர்ப்பம் அளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இர. பொன்னப்ப நாடார்:** கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய அங்கத்தினர் உயர்திரு பழனி அவர்கள் 7-00 p.m கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற முற்படுகிறேன். இங்கு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றி பல அங்கத்தினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். நம் மாநிலத்தில் இந்தி கட்டாய பாடமாக திணிக்கப்படவில்லை என்பது நாம் அனைவரும் உணர வேண்டிய விஷயமாகும். தென் மண்டலத்தில் உட்பட்ட ஏனைய ராஜ்யங்களில் எல்லாம் இந்தி கட்டாய பாடமாக இருக்கிறது. கேரளாவில் இந்தியை கட்டாய பாடமாக மாணவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் மைசூரிலும், ஆந்திர மாநிலத்திலும் இந்தி படித்துக் கொண்டிருக்கிறார்கள் மாணவர்கள். நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் சென்ற சட்டசபையில் என்று நினைக்கிறேன், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வின் விகிதாசாரத்தைப் பற்றியும், அதில் எவ்வளவு பேர்கள் இந்தி படித்திருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தையும் இந்த மன்றத்தில் கொடுத்தார்கள். ஆகவே, இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் அவசியமா என்று நாம் நிதானமாக சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம் நாட்டில் நெருக்கடியான நிலை இருந்து

[திரு. இர. பொன்னப்ப நாடார்] [17th January 1964

கொண்டேயிருக்கிறது. ஒருவேளை சீன ஆக்கிரமிப்பு அகன்றிருந் தாலும் அண்டை தேசமான பாகிஸ்தானிடமிருந்து எப்போது ஆபத்து நேரிடுமோ என்று அஞ்சவேண்டிய நிலையில் இருக் கிறோம். அப்போது உள்நாட்டில் பூசலும் கலகமும் இல்லாமல் நிதானமாக இருக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நம்மைச் சார்ந்தது. இலங்கையில் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியை நான் எதிர்கட்சி அங்கத்தினர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அங்கு அவர்களுக்கு ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்தது. இப் போது ஆங்கிலத்தை விட்டுவிட்டு அவர்கள் சிங்களத்தை ஆட்சி மொழியாக பிரகடனம் செய்திருக்கிறார்கள். நீண்ட காலமாக பின்பற்றி வந்த ஆங்கிலத்தை அவர்கள் இப்போது விட்டிருக் கிறார்கள். ஆகவே இந்தியாவிலுள்ள பெருவாரியான மக்கள் பேசுகிற இந்தியை விரும்பும் இருந்தால் நம் மாணவர்கள் கற்றுக் கொள்ளுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன். உயர்ந்த உத்தியோகங்களில் அமர வேண்டுமென்றால் கட்டாயம் நம் மாணவர்கள் இந்தி கற்றுத்தான் ஆக வேண்டும் என்று மத்திய சர்க்கார் விதி இருக்கிறது. கிளர்ச்சி செய்கிற காரணத்தால் இதை ஏற்றுக் கொள்ள தயக்கம் இருந்தா லும் நிதானமாக சிந்தித்துப் பார்த்தால் நம் வாலிபர்கள் நல்ல நல்ல உத்தியோகங்களில் அமர வேண்டுமானால் இந்தியை கட்டாயம் கற்றுத்தாக வேண்டும். இப்பிரச்னையை நாம் வெறுப்பு மனப்பான்மையோடு, குரோத மனப்பான்மையோடு அணுகக் கூடாது. இந்தமாதிரியான கிளர்ச்சி அவசியமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தை எரிப்பது குற்றமென்று சட்டம் இயற்றியிருக்கிறோம். இப்போது கிளர்ச்சி அவசியம் இல்லை என்பதுதான் என் போன்றோரின் கருத்து. இம்மொழிக்கிளர்ச்சியை கைவிட்டு விட்டு நம் தேசம் முன்னேற்றம் அடைய பாடுபட வேண்டியது நம் எல்லோருடைய கடமையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த படியாக எங்கள் கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சிற்றார்-பட்டணங்கால் திட்டத்திற்காக முன்னாள் முதல் அமைச்சர் அவர் கள் கல் நாட்டு விழா நடத்தினார்கள். அதற்காக அந்த ஜில்லா மக்கள் சார்பாக இந்த அரசாங்கத்திற்கு என் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிற்றார்-பட்ட ணங்கால் திட்டத்திற்காக ஏழு கோடி ரூபாய் செலவழிக்கப் போவ தாக திட்டமிடப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ள வரண்ட பிரதேசங்களுக்கும் ராதாபுரத்திற்கும் இது ஒரு நல்ல வரப்பிரசாதம் என்றுதான் நாங்கள் கருதுகிறோம். ஆகவே இதை விரைவில் உருவாக்க வேண்டிய முயற்சிகள் எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டம் குமரிப் பகுதிக்கும், ராதாபுரம் பகுதிக்கும் ஒரே சமயத்தில் துவங்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். கோதையார் ஹைடல் ப்ராஜக்ட்க்கு எட்டு கோடி வரை யில் மதிப்பீடு செய்திருக்கிறார்கள். அது உருவாக பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. டிஸம்பர் 22-ம் தேதி நம் மின் இலாகா அமைச்சர் அவர்களும் முன்னாள் முதல்

17th January 1964] [திரு. இர. பொன்னப்ப நாடார்]

அமைச்சர் உயர்திரு காமராஜ் அவர்களும் இதற்கு அடிக்கல் நாட்ட விஜயம் செய்வதாக இருந்தது. ஆனால் அங்குள்ள சில சிக்கல்கள் காரணமாக இன்று வரை அந்த அடிக்கல் நாட்டும் வேலை நடைபெறவில்லை. அதை துரிதமாக நடத்த அங்குள்ள அதிகாரிகள் விரைந்து வேலை செய்ய உத்தரவிட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, ஒரு கோடி ரூபாய் செலவில் நெய்யாறு இடதுகரைச் சானல் உருவாக்கப்பட்டிருக்கிறது. கேரளத்திலிருந்து தண்ணீர் சப்ளை ஆகிறது. இம்மாநில முதல் அமைச்சர் அவர்களும், கேரள முதல் அமைச்சர் திரு. சங்கர் அவர்களும் இதை திறந்து வைத்தார்கள். இந்தக் கால்வாயில் இதுவரை நிரந்தரமாக தண்ணீர் கொடுக்காததன் காரணமாக அங்குள்ள விவசாயிகளுக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நம் அமைச்சரிடமும், கேரள அமைச்சர் இடமும் உடனடி தண்ணீர் விடும்படி பன்முறை வேண்டிக் கொண்டோம். இதில் சிக்கல்கள் இருப்பது எனக்குத் தெரியும். அங்கு நிரந்தரமாக தண்ணீர் விடப்பட்டால்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். இத்திட்டத்தினால் நெல் விளைச்சல் ஒன்றும் அதிகப்படியாக ஏற்படவில்லை என்று ஐயப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே இதற்கு ஒரு முடிவு காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொரு முக்கியமான விஷயம் என்னவெனில் எங்கள் ஜில்லாவில் சுமார் 75-க்கு மேல் உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் இரண்டு கல்லூரிகள்தான் அந்த ஜில்லாவில் இருக்கின்றன, அதுவும் நாகர்கோவில் பகுதியில்தான் அவை இருக்கின்றன. ஆகவே கல்குளம், விளவங்கோடு போன்ற ஜன நெருக்கடி உள்ள பகுதியில் உள்ள மாணவர்களுக்கு இந்தக் கல்லூரிகளில் இடம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இக்கல்லூரிகள் தனியார் நிறுவனங்களாக இருக்கின்றன. ஒன்று கிருஸ்தவர்கள் கண்காணிப்பில் இருக்கிறது, இன்னொன்று இந்துக்கள் கண்காணிப்பில் இருக்கிறது. நாகர்கோவில் பகுதியில் உள்ள மாணவர்களுக்குத்தான் இதில் அதிகம் இடம் கிடைக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே பெண்களுக்கானாலும் சரி, அல்லது ஆண்களுக்கானாலும் சரி கல்குளம் விளவங்கோடு பகுதியில் அரசாங்கத்தின் சார்பில் ஒரு கல்லூரி அமைத்துத் தருமாறு வேண்டிக் கொள்கிறேன். அடுத்தபடியாக கன்னியாகுமரி ரயில் இணைப்பு. ரயில்வே இல்லாத ஜில்லா அது. ஆகவே கன்னியாகுமரிக்கும் திருவனந்தபுரத்திற்கும் இடையே ரயில் இணைப்பு ஏற்படுத்தித் தர மாட்சிமை தங்கிய முதல் அமைச்சர் அவர்கள் தக்க ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. அதை விரைவில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எவ்வளவோ சீரிய முறையில் முதல் அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தை நடத்திச் செல்கிறார்கள். ஆகவே இந்த ரயில் இணைப்பு விரைவில் உருவாகும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இக்கூட்டத்தில் சட்டங்கள் இயற்றுவதாக இல்லை என்றிருக்கிறது. சட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டு விஷயங்களைக் கூற வேண்டியிருக்கிறது. எங்கள் ஜில்லாவில் மணியம்கரம் என்ற ஒரு வரி இருக்கிறது. திருவனந்தபுரத்தில் பத்மநாபசுவாமி ஆலயம் இருக்கிறது, அந்த சுவாமிக்கு சொந்தமான பல ஆயிரக்கணக்கான

[திரு. இர. பொன்னப்ப நாடார்] [17th January 1964

நிலங்கள் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிறது. அதில் பாட்டத்திற்கு மேலான வரி சுவாமிக்கு செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அரசாங்கத்திற்கும் வரி செலுத்த வேண்டியிருக்கிறது. இதை ரத்து செய்ய வேண்டுமென்று பன்முறை அந்த ஜில்லா பிரதிநிதிகள் எடுத்துக் கூறியிருக்கிறோம். அந்த வரியை கேரளாவில், திருவனந்தபுரம் ஜில்லாவில் இருக்கிற பகுதிகளுக்கு நிறுத்தல் செய்து சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அதேபோல் நம் அரசாங்கமும் உடனடியாக அப்படி சட்டம் ஏற்படுத்த உடனடி வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு ஏக்கர் விவசாயம் செய்யும் விவசாயி 5, 6 கோட்டை நெல் இந்த ஆலயத்திற்கு கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. இது விஷயமாக கோர்ட்டுக்கு சென்று ஸ்டே வாங்கி இது பல ஆண்டுகள் கொடுக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. ராஜப்பிரமுகரோடு, திருவிதாங்கூர் மன்னரோடு கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருப்பதாகவும் விரைவில் இதற்குரிய சட்டம் உருவாகும் என்றும் முன்பே பன்முறை அமைச்சரால் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்காக உடனடி ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஸிட்டி டெனன்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்டை (City Tenants Protection Act) எங்கள் பகுதிக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல டிரஸ்ட் நிலங்களிலும் பலர் பெரிய கட்டிடங்களை கட்டியிருக்கிறார்கள். இப்போது அந்த கட்டிடங்களை எல்லாம் இழக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே எங்கள் ஜில்லாவிற்கும் ஸிட்டி டெனன்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட்-டை கொண்டு வந்தால் இக்கஷ்டத்தை நீக்க முடியும் என்று நம்புகிறேன். ஆகவே இந்தச் சட்டத்தை எங்கள் பகுதியிலுள்ள நகரங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், முக்கியமாக சர்வீஸ் இணைப்பு இன்னும் எங்கள் மாவட்டத்தில் பூர்த்தியாகவில்லை. பொதுவாக சில இலாக்காக்களில் சர்விஸ் இணைப்பு பூர்த்தியாகி இருக்கிறது என்றாலும், இன்னும் பல இலாக்காக்களிலும் இணைப்புப் பூர்த்தியாகாமல் இருந்து கொண்டிருக்கிறது. 1956 நவம்பர் 1-ம் தேதி இணைப்பு ஏற்பட்டது. ஏழு வருட காலமாகியும் இன்னும் மாற்றப்பட்ட ஊழியர்களின் சர்விஸ் இணைப்பு நடந்தாக வில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது. ஆகவே அரசாங்கம் இந்த விஷயத்தில் உடனடியாக வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று மிகவும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். சமீபத்தில் உயர் நீதிமன்றத்தில், தலைமை ஆசிரியர் பதவியிலிருந்து வெறும் ஆசிரியர் பதவிக்கு தாங்கள் தாழ்த்தப்பட்டார்கள் என்று அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தி ஒரு ரிட்-டை பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கொடுத்திருந்தார்கள். அவர்களது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவர்களை தாம் தாழ்த்தக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருந்தது. இதன் அடிப்படையில் ரிட்-கொடுத்திருந்த ஆசிரியர்களுக்கு மீண்டும் அதிகாரிகள் உத்தியோக உயர்வு கொடுத்தார்கள். ஆனல் - அதேமாதிரியான சலுகை,

17th January 1964] *[திரு. இர. பொன்னப்ப நாடார்]*

பாதிக்கப்பட்ட மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்க மறுக்கப்படு கிறது. இது சரியல்ல. உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை ஒட்டி, பலன் அளிக்கின்ற வகையில் தகுதியுள்ள பிற ஆசிரியர் களுக்கும் இது போன்ற நியாயத்தை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, முதியோர் பென்ஷன் திட்டம் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எங்கள் பகுதியில் ஏற்கனவே பலருக்கு பென்ஷன் கொடுக்கப்பட்டு வந்தது. ஏதோ காரணத்தை சொல்லி, இப்போது திடீரென்று சலுகை நிறுத்தப் பட்டிருக்கிறது. இதனல் பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் கஷ்டப் படுகிருர்கள். ஆகவே இதைப்பற்றி உடனடியாக புனர் பரிசீலனே செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னெரு விஷயம் என்னவென்ருல், அரிஷ்டம் என்ற பெயரில் மது பெரிய அளவில் உற்பத்தியாகிறது. இது எங்கள் பகுதியில் மட்டுமல்ல, பிற பகுதிகளுக்கும் விற்பனே செய்யப்படுகிறது. இந்த அரிஷ்டத்தை அருந்துவதன் காரணமாக மது போதை இருக்கின்ற நிலே ஏற்படுவதால், இதன் காரணமாக பல கேஸ்களும் போடப்பட்டிருக்கின்றன. இந்த அரிஷ்டம் தயாரிப்பதின் மூல மாக பல லட்சக்கணக்கான ரூபாய்கள் கேரளாவிலுள்ள பார்மஸிக் காரர்கள் சம்பாதித்திருக்கின்றனர். பெரிய பெரிய கார்கள் எல்லாம் கூட வாங்கியிருக்கிருர்கள். குறிப்பாகக் கூறினுல், மதுவை வேறு ஒரு வகையில் உற்பத்தி செய்கிருர்கள் என்று தான் சொல்ல வேண்டும். ஆகவே இதைத் தடுப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** அவைத் தலைவர் அவர்களே, இன்று நடந்து கொண்டிருக்கிற இந்த கவர்னர் உரை மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நானும் கலந்து கொண்டு என்னு டைய கருத்தையும் சொல்லிக்கொள்வதற்கு சந்தர்ப்பம் அளித்த தற்காக கனம் மன்றத் தலைவர் அவர்களுக்கு முதன்முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் ஐந்தாண்டுத் திட்டங்களே தீட்டி, திட்டங்களின் மூலமாக பல கோடி ரூபாய்களே செலவு செய்து நாட்டுக்கு பல நன்மைகள் ஏற்பட்டிருப்பதாக கவர்னர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிருர்கள். திட்டங்களின் மூலமாக ஏற்பட்டிருக்கும் பலன்களேப்பற்றி பரி சீலனே செய்து பார்க்கும்போது, என்னுடைய வானூர் தொகுதியில் எந்தவிதமான பலனும் ஏற்படாததுதான் எனக்குத் தோன்று கிறது. நேரு பிரான் அவர்கள் தொழில் வளத்தைப்பற்றி, அல்லது நமது திட்டங்களேப்பற்றி சொல்லும்போது அடிக்கடி "சென்னே யைப் பார்" என்று சொல்லுகிருர்கள். ஆனல் நம் நாட்டைப் பொறுத்த வரையில் திட்டத்தினல் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி பார்க்கவேண்டும் என்ருல், "வானூரைப் பாருங் கள்" என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்து மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் வானூர் பகுதியில்

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [17th January 1964

எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை தெரிவித்து, அந்தப் பகுதிக்கு ஏதாவது செய்து கொடுங்கள் என்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசி உயர்வைப்பற்றி கவர்னர் அவர்கள் மிகவும் அழகாக கூறியிருக்கிறார்கள். விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று நாங்கள் சொன்ன நேரத்தில், எங்கே உயர்ந்திருக்கிறது என்று கேட்டவர்கள் இன்றைக்கு விலைவாசியைக் குறைப்பதற்காக வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று சொன்னதற்காக நான் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்தில் விலைவாசியைக் குறைப்பதற்காக நியாயவிலைக் கடைகளை திறப்போம் என்றும், கிராமப் பகுதிகளில் அதிகமான அளவில் நியாயவிலைக் கடைகளை திறப்பதற்கு முயற்சி எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இந்த நியாயவிலைக் கடைகள் எல்லாம் அநியாய விலைக் கடைகளாக மாறிவிடக்கூடாது என்பது தான் என் அடிப்படையான வேண்டுகோள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் வளர்ச்சியைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக தொழில் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில், எங்கள் பகுதியைப் பொறுத்தளவில், எந்தக் கடையில் விற்கிறது என்றுதான் கேட்க வேண்டியிருக்கிறது. எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் பல திட்டங்களைப்பற்றி பேசப்பட்டு வந்ததே தவிர ஒன்றும் நடைமுறையில் வந்ததாகத் தெரியவில்லை. திருவாக்கரை என்கின்ற கிராமத்திலுள்ள மலைப் பகுதியில் பொன் கிடைப்பதற்கான கனிப்பொருட்கள் கிடைப்பதாகவும், ஆராய்ச்சி செய்து, முடிவு எடுத்திருப்பதாகவும் இந்தப் பகுதியை பாதுகாப்பதற்காக மாதம் 110 ரூபாய் சம்பளத்தில் ஒருவர் காவல் காத்துக்கொண்டிருக்கிறார். இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, இதைப்பற்றி தனியாக எழுதி அனுப்பினால் கவனிக்கலாம் என்று சொன்னார்கள். இது என்ன ஆகும் என்று சொல்ல முடியவில்லை.

அடுத்தபடியாக, உப்புவேலூர் என்ற பகுதியிலுள்ள காட்டில் வெள்ளை களிமண் கிடைப்பதாகவும், இதைக்கொண்டு பீங்கான் தொழிற்சாலை ஏற்படுத்தலாம் என்றும் சொல்லப்பட்டது. அதுவும் இப்போது என்ன நிலைமையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அதே போன்று, கடப்பேரிக்குப்பம் பகுதியில் சுண்ணாம்புக் கற்கள் கிடைப்பதாகவும், இதை உபயோகித்து சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. கடைசியில் இது 34 லட்சம் டன்னுக்கு குறைவாகத்தான் இருக்கிறது, ஆகவே இந்த இடத்தில் தொழிற்சாலை ஏற்படுத்த முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

அடுத்தபடியாக, காட்டாம்பக்கம் என்ற பகுதியில் 'போர்வெல்' போட்டுப் பார்த்ததில் நிலக்கரி இருப்பதாக தெரிந்தது. இதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதும் தெரியவில்லை. ஆகவே தொழிற்சாலைகளை ஏற்படுத்தும்போது, தயவு செய்து என்னையும் ஒரு பார்வை பார்த்து, என் தொகுதி மக்களையும் ஒரு பார்வை பார்த்துக்கொள்ளவேண்டும் என்றும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

17th January 1964] *[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]*

நீர்ப்பாசனத்தைப்பற்றி சொல்லும்போது, எங்கள் பகுதிக்கு எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் செய்து தரப்படவில்லை. ஏன் எங்களை மட்டும் நீக்கி வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நாங்கள் மட்டும் வரி கொடுக்கவில்லையா, சர்க்காருடன் ஒத்துழைக்க வில்லையா, என்ன காரணத்தினால் எங்கள் பகுதி மக்களுக்கு நீர்ப் பாசன வசதிகள் கிடைக்கவில்லை என்று தெரியவில்லை. வேண்டு மென்றேதான் இந்த வசதிகள் செய்து கொடுக்கவில்லையோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே இந்த சந்தேகம் போகின்ற வகையை தயவுசெய்து பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எப்போது தான் இந்த வசதியை செய்து கொடுக்கப்போகிறார்களோ என்று தெரியவில்லை.

வீடூர் நீர்த்தேக்க திட்டத்தைப் பொறுத்தவரையில், நான்கு மைல் பக்கத்தில்தான் நாங்கள் இருக்கிறோம். ஆகவே நாங்கள் இந்தத் திட்டத்தின் மூலமாக பலன் கிடைக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். கடைசியில் அது பயனற்றுப் போய் விட்டது. இதைப்பற்றி பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி எங்கள் பகுதிக்கு வந்தபோது விசாரித்தது. அப்போது அங்கிருந்த எக்ஸிக்யூட்டீவ் எஞ்சினியர் அவர்களை கேட்டபோது, இந்தத் திட்டத்தின் மூலமாக 3,200 எக்கர்களுக்குத்தான் பாசன வசதி செய்து கொடுக்க முடி யும் என்றும், அந்த விதத்தில்தான் இதைக் கட்டுப்படுத்தி இருக் கிறது என்றும், இன்னும் இதை அதிகப்படுத்தவேண்டுமென்றால் இப்போது ஒருபக்க பாய்ச்சலாக இருப்பதை, இருபக்க பாய்ச்ச லுக்கு மாற்றவேண்டும் என்றும் சொன்னோம். இருபக்கம் பாய்ச் சலுக்கு வசதியிருக்கிறதா ? இல்லையா ? என்பதை ஆலோசித்து, நல்ல பலன் தரத்தக்க முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தளவில், கழிந்த எலக்ட்ரிஸிட்டி போர்ட் பட்ஜெட் விவாதத்தில் நான் சற்று வேகமாக பேசி விட்டேன். அதற்காக மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மின்சாரம் இல்லாத நிலைமையில் நாங்கள் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். மின்சாரத்தை கொண்டுவர வேண்டும் என்று என்ன முயற்சிகள் எடுத்தாலும், அந்தப் பகுதிக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு பல கட்டுப்பாடுகள் இருப்பதாக சொல் கிறார்கள். அதாவது அதிக ஹார்ஸ்-பவர் செலவு செய்தால்தான் எங்கள் பகுதிக்கு மின்சாரத்தை கொண்டு வர முடியும் என்று சொல்லுகிறார்கள். எங்கள் பகுதியை எடுத்துக்கொண்டால், 200 அடி, 300 அடி தோண்டினாலும்கூட தண்ணீர் கிடைப்பது கஷ்ட மாக இருக்கிறது. இவ்விதம் அதிக ஆழத்திலிருந்து தண்ணீர் எடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே இந்த விஷயத்தில் ஏதாவது கட்டுப்பாடுகள் இருந்தாலும் அவைகளை நீக்கி குறைந்த அளவில் ஹார்ஸ்-பவர் இருந்தாலும் அதை அனுமதித்து எங்கள் பகுதிக்கு உடனடியாக மின்சாரத்தை விஸ்தரிக்கவேண்டும் என்று மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாகச் சொல்லப்படு கிறது. விவசாயம்தான் நாட்டுக்கு முதுகெலும்பு போல் உள்ளது. விவசாயத்திற்கு முக்கியமானது நீர்வளம், நில வளம், உர வளம்

ஆகியவையாகும். இந்த மூன்றும் எங்களுக்கு ரொம்பவும் தூரம் என்ற நிலையில் இருக்கிறது. ஆகையால் எந்த அளவுக்கு, யார் தான் எந்தக் காலத்தில் தான் செய்யப் போகிறார்களோ தெரிய வில்லை. எந்தக் காலத்தில் உருவாகுமோ, எந்தக் காலத்தில் வரு மோ என்று காத்துக்கொண்டிருக்க வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கிறோம்.

அடுத்தபடியாக விவசாய அபிவிருத்திக்காகக் கடன் கொடுப்ப தாகச் சொல்லுகிறார்கள். உண்மையிலேயே கடன் கொடுப்பதைப் பொறுத்த வரையில் வட்டார வளர்ச்சியில் இருக்கும் அதிகாரிகள் கிராமப் பகுதிகளில் இன்ன இன்னதற்குக் கடன் கொடுக்கிறார்கள், இதையிதைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று சொல்லக் கூடிய வாய்ப்பும், வசதியும் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் வேண்டிய வர்களுக்குச் சொல்கிறார்கள். வேண்டாதவர்கள் பாதிக்கப்படு கிறார்கள். இந்த நிலை உருவாகக் கூடாது. நெல் உரத்திற்காக கடன் கொடுக்கிறார்கள். எள்ளுக்கும், மணிலாவுக்கும் உரத்திற்கு கொடுக்கும் கடனைவிட நெல் உரத்திற்கு அதிகமாகக் கடன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மரக்காணம் பிளாக்கையும், வானூர் பிளாக்கை யும் மத்தியாக வைத்து சுமார் 8 மைல் விஸ்தீர்ணத்திற்கு மேல் உள்ளது கழுவெளி பகுதி. அந்தப் பகுதியில் உள்ள நிலங்கள் நீரால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் மரக்காணத் திற்கு அருகில் ஓர் லாக் கட்டப்பட்டு இருந்திருக்கிறது. சாகுபடி யில்லாமல் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருப்பதைச் சாகுபடி செய்ய, இதுவரைக்கும் விவசாயத்திட்டத்தின் கீழ் கொண்டுவர என்ன செய்தார்கள், என்ன செய்யப் போகிறார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த நேரத்திலாவது பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தை சாகு படிக்குக் கொண்டுவர வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் விவசாய காலத்திலே கழு வெளிக்கு பக்கத்தில் உள்ள கிராமங்களைப் பாதிக்கும் அளவுக்கு 2, 3, 4 அடி அளவுக்குத் தண்ணீர் பிடித்து விடுகிறது. ஓரத்தில் இருக்கும் நஞ்சை நிலங்கள் அறுவடை காலத்தில் நீரால் பாதிக்கப்பட்டு நஷ்டம் உண்டாகிறது. அதனால் விவசாயிகள் வேதனை அடை கிறார்கள். ஒரு நேரத்திலே தண்ணீர் திறக்க வேண்டுமென்றால் ஜில்லா கலெக்டர் அல்லது தாலுகா அளவில் சப்-கலெக்டரிடம் அணுகினால் அவர் அபிப்பிராயப்பட்டால்தான் லாக்கை திறக் கிறார்களே தவிர, விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு எந்த ஏற்பாடும் இல்லை. அந்த அளவுக்கு அந்தப் பக்கத்தில் உள்ள 20, 25 கிராமங்கள் கழுவெளி நீரால் பாதிக்காத அளவுக்கு ஒரு நிலையை உருவாக்கி திட்டக் கமிஷனுக்கு அனுப்பி அதற்கான ஏற்பாடு களைச் செய்ய வேண்டுமென்றும், செய்திருந்தாலும், செய்யா விட்டாலும் இனிமேலாவது செய்ய சர்க்கார் முடிவு எடுக்க வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முதியோர் பென்ஷன்பற்றி நான் அதிகமாகச் சொல்ல விரும்ப வில்லை. காரணம் முதியோர் பென்ஷன் விஷயத்தில் எனது பகுதி யில் அதிக அளவுக்குக் குறைபாடுகள் இருக்கின்றன. 2, 3 வருஷங்

17th January 1964] *[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]*

களுக்கு முன்பாகவே மனுக்கள் அனுப்பியும் இதுவரையில் ஒன்றும் கிடைக்காமல், நான் ஏதோ முதியோர் பென்ஷன் கொடுக்கிற மாதிரி என்னைத் தொந்தரவு செய்கிறார்கள். அவர்களால் சர்க்காரிடம் கேட்க முடியவில்லையோ என்னவோ தெரியவில்லை. இத்தகைய நிலை உருவாகியிருக்கிறது. இதை நீக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, மதிய உணவு என்று ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே முன்னாள் முதல் அமைச்சர் ரொம்பவும் சிரத்தையோடு வேலையைச் செய்தார்கள் என்று கேள்விப்பட்டேன். முந்தைய காலத்தில் இதை ஆசிரியர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர்கள் நேர்மையாக நடக்கவில்லை என்று ஊராட்சி மன்றத் தலைவரிடத்தில் இது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தலைவர்கள் இதை ஒழுங்காகச் செய்கிறார்களா என்று பார்த்தால், மற்ற பகுதிகளில் எப்படி இருக்கிறதோ என்னவோ, எனது பகுதியில் நடைமுறையில் சரியாக இயங்கவில்லை. இதற்கு காரணம் நான் யாரையும் கேட்டு தெரிந்துக்கொள்ள முடியவில்லை. இதைப்பற்றி பரிசோதித்துப் பார்க்க அதிகாரிகள் போனால் அப்போது ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஊரில் இல்லை. அங்குள்ள ஆசிரியர்களைக் கேட்டால் ஊராட்சி மன்றத் தலைவர் பணம் கொடுக்கவில்லை, நாங்கள் என்ன செய்வது என்று சொல்லுகிறார்கள். இதற்கு நல்ல வழி வகுத்து, குறிப்பாக ஆதித் திராவிட மக்கள், மதிய உணவை எதிர்பார்த்து இருக்கும் மக்கள் ஆகியவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் தேடித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இந்த மன்றத்திலே இவ்வளவு நேரம் பேச அனுமதித்த சட்ட மன்ற அவைத்தலைவருக்கு எனது நன்றியையும், 7-25 p.m.
வணக்கத்தையும் சொல்லி முடிக்கிறேன், வணக்கம்.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

XI—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. Statutory Rules and Orders.

* 1. *Notification issued with G.O. Ms. No.* 2712, *Home, dated* 24*th August* 1963 *amending Rules* 455-E *and* 459 *of the Madras Motor Vehicles Rules,* 1940, *regarding the exercise of certain powers of the Joint Regional Transport Officers under the Motors Vehicles Act,* 1939 *and rules made thereunder.* [*Laid on the Table of the House under Section* 133 (3) *of the Motor Vehicles Act,* 1939 (*Central Act IV of* 1939).]

* 2. *Notification issued with G.O. Ms. No.* 2043, *Rural Development and Local Administration, dated* 20*th September* 1963, *regarding rules relating to the additional entries to Form II*

[17th January 1964

appended to the Madras Entertainments Tax Rules, 1939. [*Laid on the Table of the House under Section* 8 (3) *of the Madras Local Authorities Finance Act,* 1961 (*Madras Act* 52 *of* 1961).]

* 3. *Notification issued with G.O. Ms. No.* 2934, *Food and Agriculture, dated 4th October* 1963, *regarding the establishment of regulated markets at Paramakudi and Ramanathapuram in Ramanathapuram district for the purchase and sale of chillies, groundnut and cotton.* [*Laid on the Table of the House under Section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

* 4. *Notification issued with G.O. Ms. No.* 2936, *Food and Agriculture, dated 4th October* 1963, *regarding the establishment of regulated markets for the purchase and sale of cotton, groundnut and tobacco at Ambur in Coimbatore district.* [*Laid on the Table of the House under Section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

* 5. *Notification issued by the Collector and Inspector of Panchayats, North Arcot, regarding the removal of Sri S. M. Ponnuswamy Gounder, President of Melanur Panchayat in Wandiwash taluk of North Arcot district from the office of the President of the said Panchayat for having committed certain irregularities.* [*Laid on the Table of the House under Section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 6. *Notification issued with G.O. Ms. No.* 2084, *Rural Development and Local Administration, dated 26th September* 1963, *regarding the appointment of both official and non-official members for Kodaikanal Township Committee for a period of three years with effect on and from* 1st *October* 1963. [*Laid on the Table of the House under Section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920).]

* 7. *Notification issued with G.O. Ms. No.* 2935, *Food and Agriculture, dated 4th October* 1963, *regarding the establishment of the regulated market for the purchase and sale of groundnut, gingelly, cotton and paddy at Cuddalore New Town in South Arcot district.* [*Laid on the Table of the House under Section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

* 8. *Notification issued with Government Memorandum No.* 106341 *AIV*/63–3, *Food and Agriculture, dated 18th October* 1963, *directing the Tiruchirappalli Market Committee to provide facilities for the purchase and sale of gingelly, paddy, groundnut and chillies in the regulated market at Thennilai established under the Madras Commercial Crops Markets Act,* 1933. [*Laid on the Table of the House under Section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

17th January 1964]

* 9. *Notification issued with G.O. Ms. No.* 4808, *Industries, Labour and Co-operation (Co-operation), dated* 4th *October* 1963 *regarding rule relating to the inclusion of coffee seeds as an item within the Schedule to the Madras Warehouses Act,* 1951. [*Laid on the Table of the House under Section* 27 (3) *of the Madras Warehouses Act,* 1951 (*Madras Act XV of* 1951).]

* 10. *Notification issued with G.O. Ms. No.* 3047, *Revenue, dated* 15*th October* 1963, *deleting serial number* 224 *under heading* " *I. Inam Estates* " *in the Schedule to the Revenue Department Notification S.R.O. No. A*-7605, *dated the* 26*th August* 1958, *published at pages* 2010-2017 *of Part I of the* Fort St. George Gazette, *dated the* 26*th November* 1958 *as subsequently amended.* [*Laid on the Table of the House under Section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 (*Madras Act XXVI of* 1948).]

* 11. *Notification issued with G.O. Ms. No.* 1519, *Public (Services-A), dated* 26*th September* 1963 *amending the Madras Public Service Commission Regulations,* 1954 *regarding the exclusion from the Commission's purview, the posts of Salesmen, Grades I, II and III in Sales Emporia, Sales*-cum-*Procurement Depots, etc., in Industries Department.* [*Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India.*]

* 12. *Notification issued with G.O. Ms. No.* 3167, *Food and Agriculture, dated* 22*nd October* 1963 *regarding the inclusion of purchase and sale of chillies in all markets and sugarcane jaggery in the market at Rajapalayam in Ramanathapuram district.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

* 13. *Notification issued with G.O. Ms. No.* 2771, *Home, dated* 29*th August* 1963 *amending certain rules of the Madras Liquor (Licence and Permit) Rules,* 1960 *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act,* 1937 (*Madras Act X of* 1937).]

* 14. *Notification issued with G.O. Ms. No.* 2772, *Home, dated* 29*th August* 1963 *amending certain rules of the Madras Liquor (Licence and Permit) Rules,* 1960 *as subsequently amended relating to the definition of privileged personage.* [*Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act,* 1937 (*Madras Act X of* 1937).]

* 15. *Notification issued with G.O. Ms. No.* 5027, *Industries, Labour and Co-operation (Housing), dated* 17*th October* 1963 *regarding the rule relating to fees payable for copies or extracts from the assessment books of the local authorities under the*

[17th January 1964

Madras State Housing Board Act, 1961. [*Laid on the Table of the House under section* 160 (4) *of the Madras State Housing Board Act*, 1961 (*Madras Act* 17 *of* 1961).]

* 16. *Notification issued with G.O. P. No.* 3131, *Revenue, dated 25th October* 1963 *exempting from the sales tax and registration under the Madras General Sales Tax Act*, 1959, *the sales of goods by the Madras Khadi and Village Industries Board and the units attached to it.* [*Laid on the Table of the House under Section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act* 1 *of* 1959).]

* 17. *Notification issued with G.O. Ms. No.* 3189, *Revenue, dated* 1st *November* 1963 *amending the Revenue Department Notification No.* 196, *dated the 29th April* 1953, *published at pages* 669 *to* 671 *of Part I of the* Fort St. George Gazette, *dated the 6th May* 1953, *relating to the taking over of inam estate of Punnangudy Village in Paramakudi taluk of Ramanathapuram district.* [*Laid on the Table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

* 18. *Preliminary notification issued with G.O. Ms. No.* 2180, *Rural Development and Local Administration, dated* 14th *October* 1963 *regarding the constitution of Sankarankoil Municipality comprising the area within the jurisdiction of the Sankarankoil Town Panchayat in Tirunelveli district.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

* 19. *Preliminary notification issued with G.O. Ms. No.* 2181, *Rural Development and Local Administration, dated* 14th *October* 1963 *regarding the constitution of Alandur Municipality comprising the areas within the Alandur Town Panchayat, and Adambakkam, Nanganallur and Pazhavanthagal Village Panchayats in Chingleput district.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

* 20. *Preliminary Notification issued with G.O. Ms. No.* 2184, *Rural Development and Local Administration, dated* 14th *October* 1963 *regarding the constitution of Darmapuri Municipality comprising the local area within the jurisdiction of the Dharmapuri Town Panchayat in Salem district.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

* 21. *Preliminary notification issued with G.O. Ms. No.* 2217, *Rural Development and Local Administration, dated* 18th *October* 1963 *regarding the constitution of Paramakudi Municipality comprising the local areas within the jurisdiction of the*

17th January 1964]

Paramakudi and Emaneswaram Town Panchayats in the Ramanathapuram district. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

* 22. *Notification issued with G.O. Ms. No.* 1463, *Public* (*Services-A*), *dated* 16*th September* 1963, *amending the Madras Public Service Commission Regulations,* 1954 *regarding the inclusion within the Commission's purview the posts of Production Assistant (Training and Finishing), Foremen (Refrigeration) and Foremen (Training and Finishing), Grade I.* [*Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India*).]

* 23. *Preliminary Notification issued with G.O. Ms. No.* 2182, *Rural Development and Local Administration, dated* 14*th October* 1963, *regarding the constitution of Tambaram Municipality comprising the local area within the jurisdiction of the Tambaram Town Panchayat in the Chingleput district.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

* 24. *Preliminary Notification issued with G.O. Ms. No.* 2185, *Rural Development and Local Administration, dated* 14*th October* 1963, *regarding the constitution of Koilpatti Municipality comprising the local area within the jurisdiction of the Koilpatti Town Panchayat in the Tirunelveli district.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

* 25. *Notification issued with G.O. Ms. No.* 3089, *Food and Agriculture, dated* 15*th October* 1963, *regarding market area and notified market areas to the markets at Pudukkottai and Thanjavur for the purpose of the Madras Agricultural Produce Markets Act,* 1959 *in respect of groundnut and paddy.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

* 26. *Notification issued with G.O. Ms. No.* 3164, *Food and Agriculture, dated* 22*nd October* 1963, *directing the Coimbatore Market Committee to establish a regulated market for the purchase and sale of cotton, groundnut and tobacco at Vellakoil in Coimbatore district.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959)].

* 27. *Notification issued with G.O. Ms. No.* 2075, *Home, dated* 1*st July* 1963 *exempting the Trade Commissioner for France in South India at Madras from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act,* 1931 *in respect of the Motor Vehicle imported for use in his office.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

[17th January 1964

* 28. *Notification issued with G.O. Ms. No.* 2225, *Home, dated* 12*th July* 1963, *regarding the continuance for another year from* 25*th July* 1963 *in collecting quarterly tax at reduced rate in respect of luxury coach bearing registration No. MDO.* 3033, *belonging to Sri Rama Vilas Service, Limited, Kumbakonam.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

* 29. *Notification issued with G.O. Ms. No.* 2443, *Home, dated* 1*st August* 1963, *exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act,* 1931, *the vehicle bearing registration No. MDK.* 1483, *belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical Officer, Kanyakumari.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

* 30. *Notification issued with G.O. Ms. No.* 2816, *Home, dated* 3*rd September* 1963, *exempting station wagon bearing registration No. MDA.* 31, *belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Dean, Government Erskine Hospital, Madurai, from the payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act,* 1931. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

* 31. *Notification issued with G.O. Ms. No.* 3102, *Home, dated* 28*th September* 1963, *exempting from payment of the tax leviable under the Madras Motor Vehicles Taxation Act,* 1931, *the vehicle bearing registration No. MSCOT.* 874, *belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical Officer, North Arcot.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

* 32. *Notification issued with G.O. Ms. No.* 3104, *Home, dated* 28*th September* 1963, *exempting from payment of the tax leviable under the Madras Motor Vehicles Taxation Act,* 1931, *the vehicle bearing registration No. MSCOT.* 793, *belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical Officer, Coimbatore.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

* 33. *Notification issued with G.O. Ms. No.* 3115, *Home, dated* 1*st October* 1963, *exempting from payment of the tax leviable under the Madras Motor Vehicles Taxation Act,* 1931, *Omnibus bearing registration No. MDA.* 144, *belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Registrar of Co-operative Societies, Madras.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

17th January 1964]

* 34. *Notification issued with G.O. Ms. No. 2282, Rural Development and Local Administration, dated 25th October 1963, appointing Srimathi Amrutha Ramasubrahmanyam as a Member of the Madras State Bhoodan Yagna Board in the vacancy caused by the death of Sri P. Jeevanandam on the 18th January 1963.* [*Laid on the Table of the House under section* 28 (3) *of the Madras Bhoodan Yagna Act*, 1958 (*Madras Act XV of* 1958).]

* 35. *Notification issued with G.O. Ms. No. 2251, Rural Development and Local Administration, dated 22nd October 1963, regarding the dissolution of Kallur Panchayat in Tiruchirappalli district for a period of one year.* [*Laid on the Table of the House under section* 179(4) *of the Madras Panchayat's Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 36. *Notification issued with G.O. Ms. No. 2226, Home, dated 12th July 1963, regarding the continuance for another year from 25th July 1963 in collecting the quarterly tax at reduced rate in respect of a luxury coach bearing registration No. MDO. 3667, belonging to Messrs. Raman and Raman (Private), Limited, Kumbakonam.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

* 37. *Notification issued with G.O. Ms. No. 2936, Home, dated 12th September 1963, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act*, 1931, *the Station Wagon bearing registration No. MDS. 5977, belonging to the United Nations International Chidren's Emergency Fund and assigned to the District Health Officer, Salem.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

* 38. *Notification issued with G.O. Ms. No. 3029, Home, dated 21st September 1963 exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act*, 1931, *the vehicle bearing registration No. MDA. 121 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical Officer, Madurai at Dindigul.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

* 39. *Notification issued with G.O. Ms. No. 2706, Home, dated 22nd August 1963 exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act*, 1931, *the Vehicles bearing registration No. MDS. 5942 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Medical Officer, Government Leprosy Control Unit, Namakkal, Salem district.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

[17th January 1964

* 40. *Notification issued with G.O. Ms. No.* 1464, *Public (Services-A), dated 16th September* 1963, *amending the Madras Public Service Commission Regulations*, 1954, *as subsequently amended, relating to the conversion of Highways department into Highways and Rural Works department.* [*Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India.*]

* 41. *Notification issued with Government Memorandum No.* 66973-*D*/63-3, *Revenue, dated 6th September* 1963, *amending the Revenue Department Notification issued in G.O. Ms. No.* 1689. *Revenue, dated 4th May* 1963, *regarding the members and Chairman of the Area Committee in Coimbatore district.* [*Laid on the Table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959).]

* 42. *Notification issued with G.O. Ms. No.* 3235, *Food and Agriculture, dated 29th October* 1963, *establishing the regulated markets for the purchase and sale groundnut, gingelly, cotton and paddy at Kattumannargudi and Sethiathope in South Arcot district.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

* 43. *Preliminary notification issued with G.O. Ms. No.* 3012, *Food and Agriculture, dated 8th October* 1963, *regarding the regulation of trade in paddy under the Madras Agricultural Produce Markets Act*, 1959, *in North Arcot district.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

* 44. *Notification issued with G.O. Ms. No.* 3077, *Revenue, dated 19th October* 1963, *amending the Advisory Committee Rules, published with Revenue Department Notification S.R.O. No. A*-1034 *of* 1960, *dated the 5th February* 1960 *at page* 77 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the 17th February* 1960. [*Laid on the Table of the House under Section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959).]

